REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2020 ஓகஸ்ட் 22 சனிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
வரு. 88 இல. 199 | August 22,Saturday, 2020 | 16பக்கங்கள் | 30/-

## உயர்தர வகுப்புகளுக்கான பாடசாலை நேரம் அறிவிப்பு
## முதலாம் திகதி முதல் வழமைக்கு திரும்புகிறது

கொவிட் 19 வைரஸ் தொற்று காரணமாக விடுமுறை வழங்கப்பட்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள அரச மற்றும் அனுமதிபெற்ற தனியார் பாடசாலைகளின் உயர்தர வகுப்புகளுக்கான நேரம் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் 06

# ரஷ்யா கண்டுபிடித்த தடுப்பூசியை இலங்கையில் பயன்படுத்த ஏற்பாடு

### ரஷ்ய தூதுவரிடம் சுகாதார அமைச்சர் பவித்ரா உறுதி



கொவிட்19 சிகிச்சை மற்றும் கட்டுப்படுத்தலுக்காக ரஷ்யா கண்டு பிடித்துள்ள தடுப்பூசி தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் உரிய பரிந்துரைகளையும் அனுமதியையும் வழங்கிய பின்னர் அதனை இலங்கையிலும் பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதாக சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாரச்சி இலங்கைக்கான ரஷ்ய தூதுவரிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் யூரி பி.மதேரி மற்றும் சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாரச்சி ஆகியோருக்கிடையில் நேற்று விஷேட சந்திப்பொன்று நடைபெற்றது. இந்த சந்திப்பின் போதே அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

சந்திப்பின் போது கொவிட்19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் முன்னெடுத்த வழிமுறைகளால் வெற்றிகரமாக அதனை எதிர்கொள்ளமுடிந்ததுஎன்றுதெரிவித்த ரஷ்ய தூதுவர், இதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட அரசாங்கத்திற்கு பாராட்டு தெரிவித்தார். 06



விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் செயல்படும் விளையாட்டு விடுதிகளிலுள்ள குறைபாடுகள் மற்றும் சிக்கல்களை ஆராயவென விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நேற்றுக் (21) கொழும்பு டொரிங்டனில் அமைந்துள்ள விடுதிக்கு திடீர் விஜயம் செய்து குறைபாடுகள் தொடர்பில் கேட்டறிந்த போது...

# தகுதியுடைய பட்டதாரிகள் அனைவருக்கும் தொழில்

### அரசாங்கம் வழங்கிய உறுதிமொழியில் மாற்றமில்லை - தினேஷ்



**கடந்த காலங்களில் தீர்வுகாண முடியாதவர்கள் இன்று விமர்சனம்**

*லோரன்ஸ் செல்வநாயகம், சுப்பிரமணியம் நிஷாந்தன்*

பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவில் பதிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்களில் பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு உரிய வகையில் நியமனங்கள் வழங்கப்படும். இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் தற்பொழுது மேற்கொண்டுள்ளது.

பட்டதாரிகளின் தொழில் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாத தரப்பினர் தற்பொழுது அரசாங்கத்தின் இந்த வேலைத்திட்டத்தை விமர்சிப்பதாக வெளிவிவகார அமைச்சரான சபை முதல்வர் தினேஷ் குணவர்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். ஜனாதிபதி ஆற்றிய உரையில் 60,000 பட்டதாரிளுக்கு நியமனம் வழங்கப்படும் என்று தெரிவித்தார். ஆனால் ஆவணத்தில் 50,000 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வேறுபாட்டுக்கு விளக்கமளிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டியதுடன் அரசாங்கம் பதவிக்கு வருவதற்காக அவசர அவசரமாக தெளிவற்ற வகையில் இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்திருப்பதாகவும் கூறினார்.

நியமனங்களுக்கு தெரிவாகாத பட்டதாரிகள் அது குறித்து மேன்முறையீடு செய்ய முடியும். இதற்கான நடவடிக்கையை தற்பொழுது அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. 06

## பிரதமர் மஹிந்தவுக்கு அவுஸ்திரேலிய பிரதமர் தொலைபேசியில் வாழ்த்து





பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தொலைபேசியில் தொடர்பு கொண்டுள்ள அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொரிசன், தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

இது குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவு ஒன்றை இட்டுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, 06

## 12 உறுப்பினர்களை கொண்ட பாராளுமன்ற தெரிவுக் குழு நேற்று நியமனம்

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 114 இலக்கத்துக்கு அமைய ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் சேவைக்கான தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவை தவிசாளராகவும், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அல்லது அவர்களினால் நியமித்தவர்களை உள்ளடக்கிய 12 உறுப்பினர்களைக் கொண்டதாக தெரிவுக்குழு அமைந்துள்ளது. அமைச்சர்களான நிமல் சிறிபால.டி சில்வா, தினேஷ் குணவர்த்தன, ஜோன்ஸ்டன் பெர்னான்டோ, டக்ளஸ் தேவானந்தா, டலஸ் அழகப்பெரும, விமல் வீரவங்ச, பிரசன்ன ரணதுங்க, மற்றும் எம்.பி.க்களான லக்ஷ்மன் கிரியல்ல, கயந்த கணாதிலக, ரவூப் ஹக்கீம், விஜித ஹேரத், செல்வம்அடைக்கலாதன் ஆகியோர் இத் தெரிவுக் குழுவில் 06

## மலையக வீட்டுத்திட்டத்தில் ஊழல், மோசடி இடம்பெற்றுள்ளமை ஊர்ஜிதம்

### சட்டத்தின் முன் நிறுத்துவேன் என்கிறார் ஜீவன்

*லோரன்ஸ் செல்வநாயகம், சுப்பிரமணியம் நிஷாந்தன்*



மலையகத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள வீட்டுத் திட்டங்களில் ஊழல்கள் இடம்பெற்றுள்ளன. ஊழலில் ஈடுபட்டுள்ளவர்களை கட்டாயம் சட்டத்தின்முன் நிறுத்துவோமென இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

மலையகம் என்றாலே தோட்டத்தொழில் மட்டும்தான் என சிலர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் விவசாயம் 06

## அங்கஜன் இராமநாதனின் நியமனம் SLFPக்கு கிடைத்த பெரும் கௌரவம்

### தயாசிறி ஜயசேகர சபையில் புகழாரம்

*லோரன்ஸ் செல்வநாயகம், சுப்பிரமணியம் நிஷாந்தன்*





யாழ். மாவட்டத்திலிருந்து முதன் முறையாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து தெரிவாகி குழுக்களின் பிரதித் தலைவராக அங்கஜன் இராமநாதன் நியமிக்கப்பட்டமை மகிழ்ச்சியளிப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். பாராளுமன்றில் நேற்று 06

## பாடகர் SPB யின் உடல்நிலை தொடர்ந்தும் கவலைக்கிடம்

### தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் தகவல்



கொரோனாவால் பாதிக்கப்பட்ட பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தின் உடல்நிலை தொடர்ந்து கவலைக்கிடமாக இருப்பதாக தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் தெரிவித்தார். தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் நேற்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

கொரோனாவால் பாதிக்கப்பட்ட பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தின் உடல்நிலை கவலைக்கிடமாக இருக்கிறது.

எஸ்.பி. பாலசுப்பிரமணியத்திற்கு கொரோனா 06

## தேசிய பட்டியலில் பாராளுமன்றம் செல்கின்றார் ரணில்?



ஐக்கிய தேசியக் கட்சி, அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்றத்துக்கு அனுப்புவது குறித்து ஆராய்ந்துவருகின்றதென தகவல்கள் வெளியாகியுள்ளன.


ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவின் பல உறுப்பினர்கள் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை 06

**நாட்டின் இறைமைக்கு குந்தகமான பாராளுமன்ற உரை**

## விக்னேஸ்வரன் எம்.பியின் உரையை ஹன்சாட்டிலிருந்து நீக்க வேண்டும்

*லோரன்ஸ் செல்வநாயகம், சுப்பிரமணியம் நிஷாந்தன்*





இலங்கையின் இறைமைக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் விக்னேஸ்வரன் உரையாற்றியுள்ளாரென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்திற்குள் நுழையும் போது விக்னேஸ்வரன் இலங்கையின் இறைமையை காப்பாற்றுவதற்கான சத்தியப்பிரமாணம் எடுத்தார். ஆனால் தனது உரையில் நாட்டை 06

**நாட்டுக்கு பொருத்தமான அரசியலமைப்பு;**

## அனைவரும் தோல்வியை ஏற்க வேண்டும் - மைத்திரி

*லோரன்ஸ் செல்வநாயகம், சுப்பிரமணியம் நிஷாந்தன்*



நாட்டுக்கு பொருத்தமான அரசியலமைப்பொன்றை உருவாக்குவதில் அனைவரும் தோல்விக் கண்டுள்ளோம் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். புதிய அரசியலமைப்பொன்றை கொண்டுவரும்போது கட்டாயம் விருப்பு வாக்குமுறை ஒழிக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். 06

## வேலைத்தளங்களில் உயிரிழக்க நேரிடின் இனி 20 இலட்சம் ரூபா



வேலைத்தளத்தில் அல்லது கடமையில் ஈடுபட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் உயிரிழக்கும் ஊழியர்களுக்கு தற்போது வழங்கப்படும் 5 இலட்சம் ரூபா நட்டஈட்டு தொகையை 20 இலட்சமாக அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

குடும்பத்தில் சம்பாதிக்கும் ஒருவர் உயிரிழந்தால் அந்த குடும்பம் முழுமையாக நிர்க்கதியற்று இருக்கும் சந்தர்ப்பத்தில் 5 இலட்சம் ரூபா நட்டஈடு எந்த விதத்திலும் போதுமானதாக இருக்காது என அவர் தெரிவித்துள்ளார். தொழிலாளர் திணைக்களத்தில் இடம்பெற்ற தொழிலாளர் ஆலோசனைக் குழுவில் உரையாற்றும் போது அவர் 06

## இன்று முதல் நாட்டில் மின்சார துண்டிப்பு அமுல்படுத்தப்படமாட்டாது



நாடு முழுவதும் இன்று முதல் மின் துண்டிப்பு அமுல்படுத்தப்பட மாட்டாதென இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

கடந்த சில நாட்களில் கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி 06

# அபிவிருத்தியுடன் கூடிய உரிமைசார்ந்த அரசியலே கிழக்கு மக்களின் எதிர்பார்ப்பு

### இருப்பை தக்கவைப்பதும் அவசியமென்கிறார் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்

*லோரன்ஸ் செல்வநாயகம், சுப்பிரமணியம் நிஷாந்தன்*



அபிவிருத்தியுடன் கூடிய உரிமைசார்ந்த அரசியலையே கிழக்கு மக்கள் எதிர்பார்க்கின்றனர். அதனையே பொதுத் தேர்தலில் நிரூபித்துள்ளனர் என தபால் சேவைகள், வெகுஜன ஊடகத்துறை மற்றும் தொழில் அபிவிருத்தி அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார். பாராளுமன்றில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கைவிளக்க உரைமீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

2015ஆம் ஆண்டு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினராக இருந்துக் கொண்டு ஐ.தே.க அரசின் வரவு செலவு திட்டங்களுக்கும் அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கும் ஆதரவளித்தோம். ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கும் ஆதரவளித்தோம். ஆனால், எம்மை நம்பி வாக்களித்த மக்களுக்கு எதனைப் 06

## வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்ட மணிவண்ணன்

*யாழ்ப்பாணம் விசேட நிருபர்*



யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை செயலகத்திற்கு ஊடக சந்திப்பு நடத்தச் சென்ற மணிவண்ணன் மற்றும் ஆதரவாளர்கள் வலுகட்டாயமாக வெளியேற்றப்பட்டுள்ளனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளராக இருந்த மணிவண்ணன், தனது அரசியல் நிலைப்பாடு தொடர்பில் நேற்று கட்சி அலுவலகத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை 06

# பயமுறுத்தும் கொரோனாவும்; சரியும் பொருளாதாரம்

உலகம் முழுவதும் கொரோனா நோய்த்தொற்று பரவி வருவதும், அந்த நோய்க்கு எதிராக உலக நாடுகள் எடுத்து வரும் நடவடிக்கைகளும் அந்த நாடுகளின் பொருளாதாரத்தில் கடும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றன. அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் போன்ற ஜாம்பவான்களே தங்கள் நாட்டில் பொருளாதாரச் சரிவு ஏற்பட்டுள்ளதை அதிகாரப்பூர்வமாக பதிவு செய்துள்ளன. 2020ஆம் ஆண்டின் முதல் பாதியில் கொரோனா நோய்த்தொற்று உலகின் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த நாடுகளில் ஏற்படுத்தியுள்ள பாதிப்புகள்...

**ஜெர்மன்** *(சரிவு)*

ஐரோப்பிய யூனியனின் பொருளாதார சக்தியாகத் திகழும் ஜெர்மனிக்கு கொரோனா நோய்த்தொற்று ஏற்படுத்தியுள்ள பொருளாதார பாதிப்பு கொஞ்ச நஞ்சமல்ல. ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலக்கட்டத்தில் அந்த நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி முந்தைய ஆண்டின் அதே மாதங்களோடு ஒப்பிடுகையில் படுவீழ்ச்சியடைந்திருக்கிறது. ஜெர்மனியில் பொருளாதார புள்ளிவிவரங்கள் பதிவு செய்யப்படத் தொடங்கியதிலிருந்து இதுவரை இவ்வளவு மோசமான காலாண்டு வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டதில்லை. இந்த வீழ்ச்சியால் ஜெர்மனியின் பொருளாதார வளர்ச்சி பத்து ஆண்டுகளுக்கு முந்தைய நிலையை அடைந்துள்ளதாக தேசிய புள்ளியியல் துறை தெரிவித்துள்ளது.

**பிரிட்டன்** *(சரிவு)*


கொரோனா நோய்த்தொற்றால் மிகப் பெரிய பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்த நாடுகளில் பிரிட்டனும் ஒன்று. அந்த நாட்டின் உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி, புள்ளியியல் துறை, அது தொடர்பான புள்ளிவிவரங்களைப் பதிவு செய்த நாள் முதல் கண்டிராத அளவுக்கு மிக வேகமான வீழ்ச்சியைக் கண்டு வருகிறது. நாட்டின் தற்போதைய பொருளாதாரச் சூழல் நம்பிக்கையளிக்கும் வகையில் இல்லை எனவும், நிலைமை சீராவதற்கு நீண்ட காலம் பிடிக்கலாம் எனவும் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

**ரஷ்யா** *(சரிவில்லை)*



கிழக்கு ஐரோப்பாவைச் சேர்ந்த எண்ணெய் ஏற்றுமதி நாடான ரஷ்யா, கொரோனா நோய்த்தொற்று பரவலால் மிகக் குறைந்த பொருளாதார பாதிப்பைச் சந்தித்துள்ள மிகச் சில நாடுகளுள் ஒன்று. ஜனவரி முதல் மார்ச் வரையிலான 3 மாதங்களில் நாட்டின் உள்நாட்டு உற்பத்தி பெரிய மாற்றம் இருக்கவில்லை. அதே நேரம், ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலக்கட்டத்தில் நிபுணர்கள் கணிப்பை விட மிகக் குறைவாகவே உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி குறைந்துள்ளது.

**சீனா** *(சரிவில்லை)*




கொரோனா நோய்த்தொற்று முதல் முதலில் பரவத் தொடங்கிய சீனாவில், அதன் பாதிப்பு இந்த ஆண்டின் முதல் 3 மாத காலக்கட்டத்தில் மிக மோசமாக இருந்தது.

அந்த மாதங்களில் நாட்டின் உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி பெரும் வீழ்ச்சியைச் சந்தித்தது.

ஆனால், நாட்டில் கொரோனா நோய்த் தொற்று பரவல் துரிதமாகக் கட்டுப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அடுத்த 3 மாதங்களில் பொருளாதாரம் சீரடைந்தது.

அந்த மாதங்களில் நாட்டின் உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி அதிகரித்தது.



**ஜப்பான்** *(சரிவு)*



ஜப்பானின் பொருளாதார வளர்ச்சி ஏற்கெனவே மந்த நிலையில்தான் இருந்தது. கடந்த நிதியாண்டில் தொடர்ந்து 3 காலாண்டுகளாக அதன் உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி சரிவைச் சந்தித்தது. கொரோனா நோய்த்தொற்று பரவல் அந்த நிலையை மேலும் மோசமடையச் செய்துள்ளது. அந்த நோய்த்தொற்று காரணமாக நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலக்கட்டத்தில் 27.8 சதவீத வீழ்ச்சியைக் கண்டது. இது, இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய மிக மேசமான வீழ்ச்சியாகும்.

**தென் கொரியா** *(சரிவு)*



கொரோனா நோய்த்தொற்று பரவலால் சீனாவுக்கு வெளியே முதலில் பாதிக்கப்பட்ட நாடுகளில் தென் கொரியாவும் ஒன்று. அந்த நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் காரணமாக, ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான மாதங்களில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வீழ்ச்சியடைந்தது. இருந்தாலும், நோய்த்தொற்று பரவலை மிக வேகமாக கட்டுப்படுத்தியுள்ளதால், கொரியா மிக விரைவில் பொருளாதாரச் சரிவிலிருந்து மீளும் என்று நிபுணர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

**இந்தியா** *(சரிவில்லை)*



உலகின் 3ஆவது பெரிய பொருளாதார சக்தியான இந்தியா, கடந்த சில ஆண்டுகளாகவே பொருளாதார மந்த நிலையைக் கண்டு வருகிறது. எனவே, கொரோனா நோய்த்தொற்று பரவலுக்குப் பிறகு, முந்தைய ஆண்டின் மாதங்களோடு ஒப்பிடுகையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியில் மிகப் பெரிய சரிவு இல்லை. ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான மாதங்களில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி அதிக சரிவைச் சந்தித்திருந்தாலும், கொரோனா நோய்த்தொற்று பாதிப்புக்கிடையிலும் பொருளாதாரச் சரிவிலிருந்து தப்பும் திறன் கொண்ட சீனா போன்ற ஒரு சில நாடுகளுள் இந்தியாவும் ஒன்று என நிபுணர்கள் கருதுகின்றனர்.

**தாய்லாந்து** *(சரிவு)*



கொரோனா நோய்த்தொற்று பரவல் உலகம் முழுவதும் அதிகம் பாதிக்கப்பட்டது சுற்றுலாத் துறைதான். அந்தத் துறையை பெரிதும் நம்பியுள்ள தாய்லாந்து, கொரோனா நெருக்கடி காரணமாக மிகப் பெரிய பொருளாதார வீழ்ச்சியைக் கண்டது. இது, கடந்த 22 ஆண்டுகளில் இல்லாத மிகப் பெரிய பொருளாதாரச் சரிவாகும். கடந்த நிதியாண்டைவிட நடப்பு நிதியாண்டில் 7.3 முதல் 7.8 சதவீதம் வரை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி குறையும் என்று அதிகாரிகள் கணித்துள்ளனர்.

# 19ஆவது திருத்தம்; ஜனாதிபதிக்கு செயற்பட முடியாத மூக்கணாங்கயிறு

**சபையில் அமைச்சர் தினேஷ்**

**லோரன்ஸ் செல்வநாயகம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

19 ஆவது அரசியலமைப்பு திருத்தம் ஜனாதிபதி செயல்பட முடியாத மூக்கணாங்கயிறாக உள்ளதாகவும் அதனை இல்லாதொழித்து நாட்டில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தெளிவான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தை பெரும் நெருக்குதல்களுக்குள்ளாக்கி நாலரை வருடங்கள் மிக மோசமான நிலையை நாட்டில் ஏற்படுத்திய ஐக்கிய தேசியக் கட்சி தற்போது ஜனாதிபதியின் கொள்கை பிரகடனத்தில் குறை கூறுவது விந்தையாக உள்ளதென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரை தொடர்பில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இவ்வாறு தெரிவித்தார்.

சபை முதல்வர் தினேஷ் குணவர்த்தன தமதுரையில் மேலும் தெரிவிக்கையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ச, அன்று ஜனாதிபதியாக பதவி வகித்து இந்த நாட்டை கையளிக்கும் போது 07வீத பொருளாதார வளர்ச்சி நாட்டில் நிலவியது.

நாடெங்கிலும் பாரிய அபிவிருத்திகள் இடம்பெற்றன. அபிவிருத்திகளை முடக்கி இரண்டு வீதமாக நாட்டின் பொருளாதார வளர்ச்சியை வீழ்ச்சி நிலைமைக்கு தள்ளிய பெருமை ஐக்கிய தேசியக் கட்சியையே சாரும்.

> **இல்லாதொழித்து மாற்றத்தை ஏற்படுத்துவதே நோக்கம்**

அந்த நிலையை மாற்றுவதற்காகவும் அதற்காக 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை இல்லாதொழிப்பதற்காகவுமே மக்கள் புதிய அரசாங்கத்திற்கு மாபெரும் ஆணையை வழங்கியுள்ளனர்.

நூறு வருடங்கள் உலகமே சிந்திக்காத மிக மோசமான கொரோனா வைரஸ் தொற்று முழு உலகையும் உலுக்கிக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இலங்கையில் அதனைக் கட்டுப்படுத்தி உலக வரைபடத்தில் இலங்கையை முன்னிலைப் படுத்திய பெருமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவையே சாரும்.

இந்த நாட்டில் ஜனாதிபதி தேர்தலுக்கும் பாராளுமன்றத் தேர்தலுக்குமிடையிலான காலம் மிக இக்கட்டான மோசமான காலமாக இருந்தது.

19ஆவது அரசியலமைப்புத் திருத்தம் மூலம் ஜனாதிபதி செயற்பட முடியாதவாறு மூக்கணாங்கயிறு போடப்பட்டிருந்தது. எனினும் சிறுபான்மை அரசாங்கமாக நாம் செயற்பட்டு கடந்த அரசாங்கங்கள் மேற்கொள்ள முடியாதவற்றை நாம் இக்காலத்தில் செய்துள்ளோம்.

தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் பிரசார மேடைகளில் மக்களுக்கு வாக்குறுதி வழங்கியது.

எனினும் அதனை உள்ளடக்கிய ஜனாதிபதியின் கொள்கை பிரகடனத்தில் குறை கண்டுபிடிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி மக்களை ஏமாற்றுகிறது.

எனினும் தேர்தல் மாற்றம் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச,தமது கொள்கை பிரகடனத்தில் தெளிவாக தெரிவித்துள்ளார். 19ஆவது திருத்தத்தை மாற்றுவதற்காக ஜனாதிபதி தெளிவான வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளார்.

# மாற்றங்கள் தமிழ் மக்களிடமிருந்தல்ல சிங்கள மக்களிடமிருந்தே வர வேண்டும்

**எஸ்.ஸ்ரீதரன்**

**லோரன்ஸ் செல்வநாயகம், சுப்ரமணியம் நிஷாந்தன்**

பெரும்பான்மை பலத்துடனுள்ள அரசாங்கம் என்ற வகையில் நாட்டுக்கு எது தேவை என்பதை இனங்கண்டு செயற்பட வேண்டுமென தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச, தற்போது நல்லெண்ணத்துடன் செயற்படுகின்றார் என கூறப்பட்டு வருகின்ற நிலையில் மாற்றங்கள் என்பது தமிழர்களிடம் இருந்து வர வேண்டியதல்ல.அது சிங்களவர்களிடமிருந்து வர வேண்டியது எனக் குறிப்பிட்ட ஸ்ரீதரன் எம்.பி உங்கள் நல்லெண்ணத்தை வெளிப்படுத்துங்கள் என்றும் சபையில் கேட்டுக்கொண்டார்.

இந்தியாவிடம் அரசியல் தீர்வாக 13 பிளஸ் வழங்கப்போவதாக தெரிவித்திருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ச பதிமூன்றைக் கூட நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என சுட்டிக்காட்டிய அவர், இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் தமிழர் தரப்பில் கையொப்பமிட்டுள்ள இந்தியா தமிழர் விடயத்தில் மௌனம் காப்பது வியப்பாக உள்ளது என்றும் தெரிவித்தார்.

அது விடயத்தில் இந்தியாவுக்கு கடமையிருக்கின்றது இந்தியா தலையிட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்;

பெரும்பான்மை பலம் உள்ள நிலையில் நல்லெண்ணங்களுடன் செயற்படுங்கள். மாற்றம் என்பது சிங்களத்தலைவர்களிடமிருந்து வரட்டும். மாற்றம் தமிழர்களிடம்இருந்து வரவேண்டியதல்ல. யாரால் தமக்கு பாதிப்பு ஏற்பட்டதோ அவர்களிடமிருந்து தமிழர்கள் மாற்றத்தை எதிர்பார்க்கின்றனர்.

70 ஆண்டுகளாக நாட்டில் புரையோடிப்போயுள்ள தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, தனது கொள்கை விளக்க உரையில் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.இது கவலைக்குரியதும் துரதிர்ஷ்டவசமானதுமாகும்.

நாட்டின் முதன்மையான பிரச்சினையாக இருப்பது இனப்பிரச்சினை. நாட்டிலுள்ள இரு தேசிய இனங்களான சிங்கள, தமிழ் இனங்களில் தமிழர்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அதனால்தான் நீண்டகால போராட்டத்திற்குள் தமது வாழ்க்கையை அர்ப்பணித்திருந்தார்கள். அவர்களின் போராட்ட வடிவங்கள் மௌனிக்கப்பட்டிருந்தாலும் இந்த நாட்டின் பிரஜைகள் நாங்கள்.என்ற எண்ணம் அவர்களிடம் இன்னும் உருவாகாமல் இருப்பது இந்த நாட்டிலே கொண்டுவரப்படுகின்ற பல்வேறு சட்டங்களும் சிங்கள மக்களின் மனோநிலைகளும் அவர்களை வழிநடத்துகின்ற சிங்களத் தலைவர்களின் எண்ணங்களுமே இன்னும் இந்த நாட்டை வேறுபட்ட நிலைக்குள் வைத்திருக்கின்றது.

தற்போதைய அரசாங்கம் அறுதிப் பெரும்பான்மையோடு, தங்களுக்கு பலம் இருப்பதாகக் கருதி மமதையோடு செயற்பட முனைவார்களேயானால் மீண்டும் இந்த நாடு இனவாத ரீதியான சகதிக்குள் தள்ளப்படும்.

வரலாறு அவர்களுக்கு ஒரு பாடத்தை கற்றுக்கொடுக்க வேண்டுமென்பதல்ல. ஏனெனில் நீண்ட வரலாற்றுப்பாடங்களை அவர்கள் கற்றுக்கொண்டவர்கள். ஒரேதீவினுள் இரண்டு தேசிய இன மக்கள் வாழ்கின்ற போதும் அவர்கள் தமக்குரிய அரசியலையும் பொருளாதாரத்தையும் வெவ்வேறு அடிப்படைகளில் கொண்டுள்ளனர். இந்த உண்மைகளை அனுசரித்து ஏற்கனவே நடந்திருந்தால் இலங்கை பொருளாதாரத்தில் அவிவிருத்தியில் எந்தவித பிரச்சினைகளையும் எதிர்கொண்டிருக்காது.

இலங்கையில் அபிவிருத்தி என்பது ஒரு பெரிய மாய சொல்லாக உபயோகப்படுத்தப்படுகின்றது.

அபிவிருத்திக்கு முன்னர் முதலில் நாட்டில் இணக்கம் ஏற்படவேண்டும். மக்களிடையில் உறவு ஏற்படுத்தப்பட வேண்டும் . தாங்களும் இந்த நாட்டின் பிரஜைகள் என்ற எண்ணம் அந்த மக்களிடம் வர வேண்டும். எனவே அது இல்லாதவரை அபிவிருத்தி என்ற சொல் ஒரு இனத்தின் அடிப்படைப் பிரச்சினைகளை தீர்ப்பதாக அமையாது.

1956 ஆம் ஆண்டில் தனி சிங்கள சட்டம் கொண்டுவந்தபோது இரு மொழிகள் ஒரு நாடு ,ஒரு மொழி இரு நாடுகள் என்று கூறிய சிரேஷ்ட அரசியல் வாதியும் சிரேஷ்ட சட்டத்தரணியும் சரித்திர ஆசிரியருமான கொல்வின் ஆர்டி சில்வா நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை ஜே.ஆர். உருவாக்கிய போது 'உங்களின் காலத்தில் வேண்டுமானால் நீங்கள் இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள். ஆனால் நீங்கள் போகும்போது இந்த சட்டத்தை இரத்து செய்து பாராளுமன்ற அதிகாரம் நிலைக்க வழிவகுத்து விட்டு செல்லுங்கள்.உங்களுக்கு பின்வரும் ஒருவரும் அந்த சட்டத்தை நடைமுறைப்படுத்தமாட்டார்.

அவர்கள் கொடூரமாக இதனை நடைமுறைப்படுத்தக்கூடும் ''எனக் கூறினார். அக்காலத்தில் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் இன்னும் நீக்கப்படவில்லை. அரசியல் கைதிகள் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை. வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டம் 3 ஆண்டுகளை நெருங்குகின்றது. சொந்த மண்ணில் காணி விடுவிப்புக்காக மக்கள் போராடிக்கொண்டிருக்கின்றார்கள். இயல்பு வாழ்க்கை இன்னும் தமிழர்களுக்கு ஏற்படுத்தப்படவில்லை. இந்த விடயங்களில் நாடு இன்னும் சரியான முன்னேற்றத்தை எட்டவில்லை .

தமிழர்களின் விடுதலைக்காக தீர்வுக்காக பல்வேறு தீர்வுத்திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. தந்தை செல்வாவும் முன்வைத்தார். இதனையே இன்னும் பலரும் முன்வைத்தனர்.

என் இனம் இன்றைய சிங்களத்தலைவர்களிடம் அந்த நல்லெண்ணங்கள் இல்லாமல் செல்வது மிக வருத்தத்திற்குரியது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

2020 ஓகஸ்ட் 22 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | - 04.46 |
| லுஹர் | - 12.15 |
| அஸர் | - 03.28 |
| மஃரிப் | - 06.24 |
| இஷா | - 07.36 |

**இன்றைய சுபதினம்**

சார்வரி வருடம் ஆவணி 04

ராகுகாலம் : காலை : 9.00 - 10.30 வரை
சுபநேரம் : காலை : 7.30 - 9.00 வரை
யோகம்: மரண யோகம்
நட்சத்திரம்: அஸ்தம் இரவு 11.53
திதி: சதுர்த்தி

தினகரன் விளம்பரம் 0112429367 விற்பனை பிரிவு 0112429444, 0112429378 ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

ஆளும் கட்சியின்

# பிரதி மற்றும் உதவி முதற்கோலாசான்களாக ஐவர் நியமனம்

பாராளுமன்றத்தில் ஆளும் கட்சியின் பிரதி முதற்கோலாசான்களாக (கொரடா) பாராளுமன்ற உறுப்பினர்களான டிலான் பெரேரா மற்றும் ஜயந்த கெடகொட ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். அதேநேரம், ஆளும் கட்சியின் உதவி முதற்கோலாசான்களாக பாராளுமன்ற உறுப்பினர்களான ஜகத் புஷ்பகுமார, மொஹமட் முஸம்மில் மற்றும் அசங்க நவரட்ண ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பதவிகளுக்கு அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களான டிலான் பெரேரா மற்றும் ஜயந்த கெடகொட ஆகியோர் ஆளும் கட்சியின் பிரதம கொரடா, நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ முன்னிலையில் நேற்று (21) பதவியேற்றுக்கொண்டனர்.

அத்துடன், ஜகத் புஷ்பகுமார மற்றும் மொஹமட் முஸம்மில் ஆகியோரும் பதவியேற்றுக் கொண்டனர்.





**நாணயமாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை |
|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 |
| குவைத் டினார் | 603.09 |
| ஓமான் ரியால் | 483.42 |
| கட்டார் ரியால் | 50.73 |
| சவூதி ரியால் | 49.54 |
| ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

# தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் தமிழ் மக்கள் அச்சமடையத் தேவையில்லை

## சிறுபான்மை மக்களது சாதகத்தன்மை பாதுகாக்கப்படும்



**லோரன்ஸ் செல்வநாயகம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

தேர்தல்முறை மாற்றம் தொடர்பில் ஜனாதிபதி வெளியிட்டுள்ள கருத்துக்களை கண்டு வடக்கு, கிழக்கு உட்பட சிறுபான்மை தமிழ் தலைவர்கள் குழப்பமடையத் தேவையில்லை. விகிதாசார தேர்தல்முறையில் உள்ள சாதகமான பண்புகளை பாதுகாத்துதான் புதிய தேர்தல்முறை உருவாக்கப்படும். அதற்காக அனைவரும் அரசாங்கத்துடன் கைகோர்க்க வேண்டுமென அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், 1989ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில்தான் முதல் முறையாக விகிதாசாரத் தேர்தல்முறை

06

# தீயினால் காயங்களை ஏற்படுத்தி இலங்கைப் பணிப் பெண் சித்திரவதை

## பெண் மீட்பு; குவைத் எஜமானி மீது சட்ட நடவடிக்கை

தனது வீட்டில் பணியாற்றிய இலங்கைப் பணிப் பெண்ணை சித்திரவதை செய்து, அவருக்கு தீக்காயங்களை ஏற்படுத்தியதாக 40 வயதான குவைத் பெண் ஒருவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. சந்தேக நபரான பெண்ணின் மகள்களான சிறுமிகள் மூவரும் இந்த சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பணிப் பெண்ணை விடுவிப்பதற்காக உள்விவகார அமைச்சு பாதுகாப்பு படையை அவ்வீட்டுக்கு அனுப்பியிருந்ததுடன் அவர்களால் அங்கிருந்து விடுவிக்கப்பட்ட பணிப்பெண் பின்னர் சட்டரீதியான நடைமுறைகளை பூர்த்தி செய்வதற்காக இலங்கை தூதரகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவரது காயங்கள் தொடர்பில் மருத்துவ ரீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இப்பணிப்பெண் தூதரகத்திடம் உதவி கோரியதுடன் தான் கொடுமைப்படுத்தப்பட்டு,

06

# நாடு திரும்புவதற்கு 56,297 இலங்கையர் காத்திருப்பு

கொரோனா வைரஸ் பரவலையடுத்து வெளிநாடுகளிலிருந்து மீண்டும் நாடு திரும்புவதற்காக விருப்பம் வெளியிட்டிருந்த இலங்கையர் 23,723 பேர் மீண்டும் தாயகம் திரும்பியுள்ளனர்.

இந்நிலையில் இன்னமும் 56,297 பேர் நாடு திரும்பக் காத்திருப்பதாகவும் இலங்கை வெளிநாட்டமைச்சு வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

இதுவரை இலங்கைக்கு மீள அழைத்துவரப்பட்டுள்ள 23,000ற்கு மேற்பட்டவர்கள் 93 நாடுகளிலிருந்து இங்கு அழைத்துவரப்பட்டுள்ளதாக வெளிநாட்டமைச்சு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இலங்கைக்கு மீளத் திரும்புவதற்காக காத்திருக்கும் 56,000ற்கும் மேற்பட்டவர்களில் பலரும் கொவிட்19 உலகளாவிய தொற்று நோய்காரணமாகவும் , தொழில் இழப்பு காரணமாகவும் வெளிநாடுகளில் நிதி நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள வர்களாக தெரியவந்துள்ளது.

# ஜனாதிபதி கொள்கைப் பிரகடனத்தை நடைமுறைப்படுத்துவதே முக்கியம்

**லோரன்ஸ் செல்வநாயகம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



கொள்கைப் பிரகடனத்தை வாசிப்பதைவிட நடைமுறைப்படுத்துவதே முக்கியமாகும். ஜனாதிபதியின் முதலாவது கொள்கை பிரகடன உரையில் கூறப்பட்ட விடயங்கள் எட்டு மாதங்கள் கடந்தும் நடைமுறைப் படுத்தப்படவில்லையென தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்டிருந்த அரசாங்கத்தின் கொள்கை பிரகடனத்தில் குறை இல்லை. வரலாற்றில் இருந்த ஜனாதிபதிகள் அனைவரும் இவ்வாறு கொள்கை பிரகடன உரைகளை நடத்தி இருக்கின்றனர். ஆனால் தெரிவிக்கப்படும் விடயங்களை நடைமுறையில் செயற்படுத்துவதை நாங்கள் காணவில்லை.

06

# தேர்தல் சட்டத் திருத்தத்தின் போது சிறுபான்மை மக்கள் பாதிப்படையக் கூடாது

**லோரன்ஸ் செல்வநாயகம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



தேர்தல் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படும் போது அது நாட்டில் உள்ள சிறுபான்மை மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக அமையக் கூடாது என பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

நாம் 400 வீடுகளைக் கூட கட்டவில்லை என இராஜாங்க அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். டன்ஷன் தோட்டத்தில் 350 வீடுகளும், பொகவந்தலாவயில் 350 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டன. இவை இரண்டைக் கூட்டினால் கூட 500 ஐ தாண்டிவிடுகின்றது. எனவே, இராஜாங்க அமைச்சருக்கு கண் குறைப்பாடு அல்லது கணக்கில் 'வீக்' போல தெரிகிறது. தனது அப்பாவை போலவே பொய் சொல்கிறார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் கொள்கைப் பிரகடன உரையிலுள்ள பல விடயங்கள் சாதாரண மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் அமைந்துள்ளது. நாட்டில் கைத்தொழில், சுயதொழில், விவசாய துறைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதை காண முடிகிறது. அவற்றுக்கு தனித்தனியே இராஜாங்க அமைச்சுக்கள் உருவாக்கப்பட்டுள்ளமை

06

# ஜோன்ஸ்டனுக்கு எதிரான இலஞ்ச, ஊழல் வழக்கு ஒத்திவைப்பு

அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ உள்ளிட்ட மூவருக்கு எதிராக இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு தாக்கல் செய்துள்ள வழக்கை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு நீதவான் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு பிர தம நீதவான் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜயரத்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்ப ட்டது. வழக்கை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாகவும், அன்றைய தினம் சாட்சி விசாரணைகள் ஆரம்பிக்கப் படும் எனவும் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

2010 முதல் 2014 ஆம் ஆண்டு வரை வர்த்தக அமைச்சராக கடமையாற்றிய போது ச.தொ.ச நிறுவனத்தின் 153 ஊழியர்களை சட்டவிரோதமான முறையில் பணி நீக்கம் செய்து அவர்களை அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தியதன் மூலம் அரசாங்கத்திற்கு 04 கோடி ரூபா இழப்பை ஏற்படுத்தியதாக முன்னைய அரசாங்கத்தினால் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு ஊடாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, மற்றும் ச.தொ.ச நிறுவனத்தின் முன்னாள் தலைவர் எராஜ் பெர்ணான்டோ உள்ளிட்ட மற்றும் ஒருவருக்கு எதிராக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடதக்கது.

புத்தசாசன, கலாசார அலுவல்கள் மற்றும் மத விவகார அமைச்சின்

# ஊடக செயலாளராக ஜெயரஞ்சன் யோகராஜ் மீண்டும் நியமனம்

பிரதமர் மகிந்த ராஜபக்சவின் நேரடி நிர்வாகத்தின் கீழ் வருகின்ற புத்த சாசன, கலாசார அலுவல்கள் மற்றும் மத விவகார அமைச்சின் ஊடக செயலாளராக ஜெயரஞ்சன் யோகராஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த டிசெம்பர் மாதம் 3ம் திகதி முதல் நியமனத்தை பெற்ற ஜெயரஞ்சன் யோகராஜ் பொது தேர்தலின் பின் உருவான பலமான அரசாங்கத்தின் பிரதமராக மகிந்த ராஜபக்ச

06



# தற்காலத்துக்கு பொருந்தக் கூடிய வகையிலான புதிய பாடத்திட்டம்

## விரைவில் அமைச்சரவை பத்திரம் என்கிறார் ஜீ.எல்

தற்காலத்திற்கு பொருந்தும் வகையில் பாடத்திட்டங்களை புதுப்பிப்பது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரமொன்று விரைவில் தயாரிக்கப்படுமென கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பல பிரதான பாடசாலைகளின் அதிபர்களுடன் கல்வி அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது உயர்தர வகுப்புக்களில் பல்வேறு பாடங்களுக்கு பாடப்புத்தகம் இல்லாத காரணத்தினால் ஏற்பட்டுள்ள சிக்கல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.


மாணவர்களின் பகுப்பாய்வு அறிவையும், விமர்சன ரீதியாக சிந்திக்கும் ஆற்றலையும் விருத்தி செய்வது முக்கியமாகும், தற்போதுள்ள கல்வி கட்டமைப்பில் இதற்கான சந்தர்ப்பம் குறைவாகவே உள்ளது.

06

# 19 ஆவது திருத்தம் நீக்கம்; அரசு தெளிவுபடுத்த வேண்டும்

## பாராளுமன்றத்தில் ரவூப் ஹக்கீம்

**லோரன்ஸ் செல்வநாயகம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



19ஆவது திருத்தச்சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்வது குறித்து ஜனாதிபதியும் அரசாங்கமும் வெளிப்படுத்திவரும் கருத்துகளில் தெளிவுத்தன்மையில்லையென பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரைமீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

மக்களுக்கு வாக்குறுதியளித்தப்படி சுபிட்சமான நாட்டையே உருவாக்க வேண்டும்.

06

# 'ஒரு நாடு ஒரு சட்டம்' என்பதை தெளிவு படுத்த வேண்டும்

## முஜிபுர் ரஹ்மான் எம்பி சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

'ஒரு நாடு ஒரு சட்டம்' என்ற அரசாங்கத்தின் கொள்கை தொடர்பில் நாட்டுக்கு தெளிவுப்படுத்துவது கட்டாயமாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

2019ஆம் 2020ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற இரண்டு தேர்தல்களில் இனம், மதம் அடிப்படையில் பிரசாரங்கள் மேற்கொண்டு பாரிய வாக்குகளை பெற்றுக்கொண்டனர். இதற்கு பின்னால் பல இயக்கங்கள் உள்ளன. இவர்களை எதிர்காலத்தில் சந்தோசப்படுத்த வேண்டும்.

இனவாதிகளுடன் சேர்ந்து ஆட்சியை முன்னெடுத்தமையால்தான் பண்டாரநாயக்க தமது உயிரை மாய்த்துக்கொள்ள

06

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் ஆவணி மாதம் 06ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 முஹர்ரம் பிறை 02

**குறள் தரும் சிந்தனை**



அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல

அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்பமாகும். அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பம் இல்லாதவை: புகழும் இல்லாதவை.

## கொரோனா விழிப்புணர்வை பேணியபடி நாட்டை கட்டியெழுப்ப பங்களிப்போம்!

உலகில் கொரோனாவின் கோரத் தாண்டவம் இன்னுமே ஓய்ந்து விடவில்லை. கடந்த வருடம் டிசம்பர் மாத நடுப் பகுதியில் சீனாவின் வுகானில் உருவெடுத்த கொரோனா வைரஸ் தொற்று உலகெங்கும் பெரும்பாலும் அனைத்து நாடுகளுக்கும் பரவி பல இலட்சம் மனித உயிர்களைப் பலியெடுத்தும் கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் உட்பட அனைத்துத் துறைகளிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியும் உள்ளது. ஆனாலும் கொரோனாவின் கோரத் தாண்டவம் உலகின் பல நாடுகளில் இன்னுமே முடிவுக்கு வந்தபாடாக இல்லை.

கொரோனா வைரஸ் பரவுதலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியாமல் பல நாடுகள் இன்னுமே திணறிக் கொண்டிருக்கின்றன. எமது அயல் நாடான இந்தியாவின் நிலைமையும் இதுதான். கொரோனா தொற்று பரவலில் இந்தியாவின் இன்றைய நிலைமை அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது. சில தினங்களுக்கு முன்னர் வெளியான அறிக்கை ஒன்றின்படி உலக நாடுகளில் ஒரேநாளில் ஏற்பட்ட கொரோனா தொற்றைப் பொறுத்தவரை இந்தியாதான் அதியுச்சத்தில் காணப்பட்டது.

தென்னிந்தியாவில் அமைந்துள்ள நமது அயல் மாநிலமான தமிழ்நாட்டின் நிலைமையும் மிக மோசமாகவே உள்ளது. தமிழகத்தில் வைரஸ் பரவுதலும், கொரோனா மரணங்களும் நாளாந்தம் அதிகரித்தபடியே செல்கின்றன. கொவிட்19 பரவலைக் கட்டுப்படுத்துவதென்பது இந்தியாவுக்கு இலகுவானதாக இருக்கப் போவதில்லையென்பது மட்டும் நன்கு புரிகின்றது.

இவ்வாறான நிலைமையில், இலங்கையின் நிலைமை உண்மையிலேயே பாராட்டத்தக்கதாகும். எமது நாட்டில் கொவிட்19 பரவுதலில் சமூகத் தொற்று ஏற்படாத விதத்தில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதென்பது பாராட்டத்தக்க விடயமாகும். ஆங்காங்கே ஓரிரண்டு கொரோனா தொற்றாளர்கள் அவ்வப்போது கண்டுபிடிக்கப்படுகின்ற போதிலும், இலங்கையில் நிலைமை இன்னும் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றது.

எமது நாட்டில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை பதினொன்றைத் தாண்டாமல் கட்டுப்பாட்டு நிலைமையில் உள்ளது. கொரோனா தொற்று ஏற்பட்டவர்கள் கண்டுபிடிக்கப்பட்டதும் அவர்கள் மாத்திரமன்றி, அவர்களுடன் நெருக்கமாக இருந்தோரையும் உடனடியாக தனிமைப்படுத்தி, அவர்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கும் விடயத்தில் இலங்கையில் முன்னெடுக்கப்படுகின்ற விசேட ஏற்பாடுகள் உலகின் வேறெந்தவொரு நாட்டிலுமே கிடையாது.

எனவேதான் உலகின் பல்வேறு அமைப்புகளும் இலங்கையின் சுகாதாரக் கட்டமைப்பை வெகுவாகப் பாராட்டியுள்ளன. கொரோனா பாதுகாப்பு விடயத்தில் இலங்கை சிறப்பான நாடு என்ற பாராட்டை உலகின் சுற்றுலா அமைப்புகளும் தெரிவித்துள்ளன. இந்நிலையில் கொரோனாவைக் கட்டுப்படுத்தி பாராளுமன்ற பொதுத் தேர்தலை வெற்றிகரமாக நடத்திய நாடு என்ற பெருமையும் உலக அரங்கில் எமது நாட்டுக்குக் கிடைத்துள்ளது.

கொவிட்19 ஆபத்தை எமது நாடு வெற்றி கொள்வதற்குக் காரணம் நாட்டின் வினைத்திறன் வாய்ந்த அரசியல் தலைமைத்துவம்தான் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடம் கிடையாது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கொண்ட துரிதமானதும் பொருத்தமானதுமான நடவடிக்கைகள் காரணமாகவே ஆபத்து நிலைமைக்குள் செல்லாமல் எமது நாடு தப்பிக் கொண்டதென்பதுதான் உண்மை.

அரசாங்க, தனியார் அலுவலகங்கள் மற்றும் தொழில்துறைகள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் ஆரம்பமாகி விட்டன. கொரோனா தொற்றில் இருந்து எவ்வாறு தம்மைப் பாதுகாத்துக் கொள்வதென்பதில் எமது நாட்டு மக்கள் திறமையான அறிவைப் பெற்றுள்ளனர். எனவே நாட்டின் பொருளாதாரம் உட்பட அனைத்துத் துறைகளையும் மீளக் கட்டியெழுப்புவதில் இனிமேல் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது.

உலகை விட்டு கொரோனா முற்றாக நீங்கும் வரை எந்தவொரு முன்னேற்றகரமான முயற்சியையும் இப்போதைக்கு மீண்டும் ஆரம்பிக்க முடியாது என்பதெல்லாம் அபத்தமான சிந்தனையாகும். ஏனென்றால் உலகை விட்டு கொரோனா இப்போதைக்கு முற்றாக நீங்கப் போவதில்லை. சர்வதேச மருத்துவ அறிவியலாளர்களின் கருத்துகளை அடிப்படையாக வைத்துப் பார்க்கின்ற போது உலகத்தை விட்டு கொரோனா முற்றாக விடைபெறுவதற்கு சில வருடங்கள் செல்லுமென்றே தெரிகின்றது.

உலக வரலாற்றில் கொடிய வைரஸ் பரவல் இதுவரை ஏற்படுத்திச் சென்றுள்ள தாக்கங்களையும், அது கோரத்தாண்டவம் செலுத்திய காலப் பகுதியையும் நோக்குகின்ற போது, கொவிட்19 வைரஸும் அவ்வாறுதான் நம்மை விட்டு நீண்ட காலத்தின் பின்னர் முற்றாக நீங்கும் போலத் தெரிகின்றது.

எனவே அதுவரை நாட்டை முற்றாக முடக்கி வைத்திருக்க முடியாது. அதற்காக கொரோனா அச்சுறுத்தலை முற்றாக அலட்சியப்படுத்திய நிலையில் நடந்து கொள்ளவும் முடியாது. அவ்வாறு அலட்சியப்படுத்த முற்படுவோமானால் அது மீண்டும் உச்ச நிலைக்குத் தலையெடுக்கக் கூடும். கொரோனா பாதுகாப்பு நடைமுறைகளை முற்றாகப் பேணியபடி நாட்டின் அபிவிருத்தி சார்ந்த கருமங்களில் கவனம் செலுத்துவதே இப்போது அவசியம்.

editor.tkn@lakehouse.lk

# ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கம் ஏற்படுத்தும் ஆபத்தான உபாதைகள்



நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்கிறார்கள். இன்று நோயற்ற மனிதர்களை காண்பது அரிதாகி விட்டது. ஒரு காலத்தில் இயற்கையோடு ஒன்றித்து வாழ்ந்த மனிதர்கள் இன்று இயற்கையை வஞ்சித்து செயற்கையாய் வாழ முற்பட்டதன் விளைவை தங்களது வாழ்நாளில் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். இயற்கை உணவுகளைத் தவிர்த்து இரசாயனப் பதார்த்தங்கள் கலந்த உணவுகளை உட்கொள்ள முற்பட்டதன் விளைவுகளை மனிதன் தனது ஆரோக்கியத்தின் சரிவில் சந்தித்துக் கொண்டிருக்கின்றான்.

திருமண வீடொன்றில் உணவு நஞ்சாகியதில் பலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அன்னதான நிகழ்வில் உணவு உட்கொண்டவர் உயிரிழந்தார். பாடசாலையில் வழங்கப்பட்ட பால் நஞ்சானதில் மாணவர்கள் பலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு அடிக்கடி செய்திகள் ஊடகங்களில் வெளிவந்த வண்ணமேயிருக்கின்றன. உணவு நஞ்சாவதும் அதனால் உயிரிழப்புக்கள் ஏற்படுவதும் இங்கு சாதாரண விடயமாகிப் போய் விட்டது.

பல்வேறு நிகழ்வுகளில் தயாரிக்கப்படும் உணவுகள் சுகாதாரமற்ற முறையில் தயாரிக்கப்படுவதனாலும், அளவுக்கு அதிகமான இரசாயனப் பதார்த்தம் கலந்த சுவையூட்டிகள் உணவில் சேர்க்கப்படுவதனாலும் உணவு விரைவில் பழுதடைந்து நஞ்சாகின்ற நிலைக்கு வருகின்றது. திருமண வீடுகள், அன்னதான நிகழ்வுகள் மற்றும் அலுவலக நிகழ்வுகளில் பெருந்தொகையானவர்களுக்கு சமைக்கப்படும் உணவில் சமையல்காரர்கள் சுகாதாரத்தைக் கடைப்பிடிப்பதில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கின்றது.

சில இடங்களில் இறைச்சிகளைக் கொண்டு வருகின்ற போது இரசாய உரம் வந்த உரப்பைகளில் சுற்றிக் கட்டியே அனுப்புகின்றனர். இந்த இறைச்சிகளை அரைகுறையாக வேக வைத்து கொடுப்பதனால் அதிலுள்ள நஞ்சுப் பொருட்கள் உணவில் கலந்து உணவு நஞ்சாகின்ற நிலைமை ஏற்படுகின்றது.

ஆரோக்கியத்துக்காக சாப்பிட்ட காலம் போய் அலங்காரத்துக்காக சாப்பிடுகின்ற நிலைக்கு மனிதர்கள் வந்துள்ளார்கள். சத்துள்ள உணவுகள் மறைந்து சத்தில்லாத உணவுகளின் ஆக்கிரமிப்பே இன்று தொடர்கின்றது. மனிதர்களிடம் மட்டும் இருந்த கவர்ச்சி இப்போது உணவுப் பொருட்களிலும் கொண்டு வரப்பட்டுள்ளது. விதம் விதமான உணவுப் பொருட்கள் கடைகளில் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை எல்லாம் வாங்கி சாப்பிட்டு விட்டு நோய் நொடியிலே வீழ்ந்து சாகின்றான் மனிதன்.

எமது நாட்டில் அண்மைக் காலமாக உணவு நஞ்சாதல் மூலம் ஏற்படும் உடல் உபாதைகளால் பாதிக்கப்பட்டு வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாக வைத்தியசாலைகளின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. உணவு நஞ்சாகியதால் உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ளன. இதனால் திருமண வீடுகள், பிறந்த நாள் நிகழ்வுகள், அன்னதான நிகழ்வுகள், அலுவலக நிகழ்வுகள் உட்பட பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்பவர்கள் அங்கு வழங்கப்படுகின்ற உணவுகளை ரசித்து, ருசித்து சாப்பிடுவதற்கு அச்சப்பட்டவர்களாகவுள்ளனர்.

நாட்டின் பல இடங்களிலும் உணவு நஞ்சாதலினால் பல் திடீர் சுகவீன முற்று வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்ற சம்பவங்கள் நாள்தோறும் இடம்பெற்று வருகின்றன.

நமது நாட்டில் வருடம் ஒன்றுக்கு 5 ஆயிரம் பேர் வரை உணவு நஞ்சாவதனால் ஏற்படும் உடல் உபாதைகளுக்குள்ளாவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த மதிப்பிடானது வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறுபவர்களையே குறிப்பிட்டுள்ளது. ஆனால் வைத்தியசாலைக்கு சமுகமளிக்காது வீடுகளில் தங்கியிருந்து கைவைத்தியம் மற்றும் தனியார் மருத்துவமனைகள், சித்த, ஆயுள்வேத வைத்திய சாலைகள் எனப் பலவற்றில் தங்கி சிகிச்சை பெற்றுச் செல்பவர்கள் இதை விட பல மடங்காக இருக்க முடியும்.

இன்றைய இயந்திரத்தனமான அவசர யுகத்தில் வெந்ததைத் தின்று, விதி வந்தால் சாவோம் என பலர் எதைப் பற்றியும் யோசிக்காது வேகமாக நகர்ந்து கொண்டிருக்கின்றனர். தமது உடல் ஆரோக்கியத்தைக் கூட கவனிக்காதுள்ளனர். இப்பூமிப்பந்தில் மிக அற்ப காலம் மட்டும் உயிர் வாழும் மனிதர்கள் தங்களையும், தங்கள் சுற்றங்களையும் மறந்து எதைத் தேடி ஓடிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதைப் பற்றி புரியவில்லை. குறைந்த பட்சம் தமது உடல் நலனில் தானும் அக்கறை செலுத்தாது எதை இவர்கள் சாதிக்கப் போகின்றார்கள்?!

உணவு நஞ்சாதல் என்பது எமது நாட்டிற்கு மட்டும் பாதிப்பல்ல. இன்று

### உணவு நஞ்சாவதால் தினமும் நாட்டில் ஏராளமானோர் பாதிப்பு

பல நாடுகளும் எதிர்நோக்கும் பெரும் பாதிப்பாக உணவு நஞ்சாதல் பிரச்சினை அமைந்துள்ளது. தற்போது உணவு நஞ்சாகுவது எமது நாட்டில் தினம் நடக்கும் சம்பவங்களாகி விட்டது. இதனால் ஏற்படும் பாதிப்புக்களை எவ்வாறு தடுப்பது என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும். ஒரு சம்பவம் நடந்து முடிந்த பிறகு அது



பற்றி விசாரணைகளை நடத்துவதும், அறிக்கைகளை சமர்ப்பிப்பதும் பெரிய விடயமல்ல. அச்சம்பவம் நடைபெறாமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும்.

மனிதனது உடல் ஆரோக்கியத்துக்கு பெரும் அச்சுறுத்தலாகவுள்ள இதனை தடுக்க முடியாதா? இதற்கு முதலில் உணவு எவ்வாறு நஞ்சாகின்றது? அந்த உணவு நஞ்சாவதை எவ்வாறு அடையாளம் காணலாம்? அந்த உணவுகளை உட்கொள்வதை எவ்வாறு தவிர்த்துக் கொள்ளலாம்? என்பதைப் பற்றி பலர் அறியாது இருக்கின்றனர். இதனை அறிந்து கொண்டால் அதிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

உணவு நஞ்சாவதற்கு பல ஏதுவான காரணிகள் உள்ளன. அதில் உணவில் காணப்படும் இரசாயனப் பதார்த்தங்களும், உணவில் செயற்கையாக சேர்க்கப்படும் உணவுப் பதார்த்தங்களும் சுற்றுச் சூழலில் காணப்படும் பக்ரீரியா உள்ளிட்ட நுண்ணுயிர்களும் முக்கிய காரணமாக அமைகின்றன. நாம் உட்கொள்ளும் உணவின் சுவையை அதிகரிப்பதற்கும் அதன் தரத்தை உயர்ததுவதற்கும் கவர்ச்சிகரமாக உணவினை அழகுபடுத்துவதற்கும் என அதில் சேர்க்கப்படும் பல விதமான இரசாயனப் பதார்த்தங்களும், அங்கீகரிக்கப்படாத பல இரசாயனப் பதார்த்தங்களும் உணவில் அளவுக்கு அதிகமாக சேர்க்கப்படுவதும் உணவு நஞ்சாவதில் முக்கிய பங்காற்றுகின்றன.

உணவில் இயற்கையாக காணப்படும் இரசாயனப் பதார்த்தங்களும், செயற்கையாக சேர்க்கப்படும் இரசாயனப் பதார்த்தங்களும் ஒன்றிணைவதால் ஏற்படும் மாற்றங்கள், இரசாயனப் பதார்த்தங்களின் செறிவில் ஏற்படும் அதிகரிப்பு, உணவு உற்பத்தி செய்கைகளுக்கு பயன்படுத்தப்படும் இரசாயனப் பதார்த்தங்கள், உணவுப் பொருட்களை நீண்ட நாட்களுக்கு வைத்திருப்பதற்காகப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பதார்த்தங்கள் உணவில் சேருதல், சில உணவுப் பொருட்களை அதிக கொதிநிலையில் சமைப்பதனாலும் அவ் உணவில் காணப்படும் இரசாயனப் பதார்த்தங்களில் ஏற்படும் மாற்றங்கள் என்பன உணவு நஞ்சாவதற்கு முக்கியமாக அமைகின்றன.

இவை தவிர உணவு நஞ்சாவதற்கு பக்ரீரியாக்கள் அதிக பங்களிப்ப வழங்குகின்றன. அவற்றில் சல்மனெல்லா, ஸ்ரெபிலோ, கொகிச ஓவல்ரியஸ், குளோஸ்ரீடியம் பெடியோலைனம், பெசிலஸ்சாரியஸ், விபிலியோ உள்ளிட்ட எட்டுவகையான பக்ரீரியாக்கள் குறிப்பிடத்தக்கவையாக அமைவதோடு அஸ்பஜிலஸ் உள்ளிட்ட சில பங்கசுகளும் உணவு நஞ்சாவதற்கு துணைபுரிகின்றன.

இவ்வாறான காரணிகள் உணவு நஞ்சாவதற்கு துணை புரிகின்ற போதிலும் இவற்றை பார்த்து பிரித்து அறிவதென்பது மிக கடினமாகும். உணவு நஞ்சாதலின் வெளிப்பாடாக உடலில் பலவிதமான உடல் உபாதைகள் ஏற்ப்படும். அவற்றில் வயிற்றோட்டம், வாந்தி, வயிற்றுளைவு, ஹெப்படைடிஸ் ஏ, நெருப்புக் காய்ச்சல் மாத்திரமல்லாமல் புழு நோய்களும் கூட ஏற்படும். சிலரிடம் மயக்க நிலையையும் அவதானிக்கலாம். ஆனால் இந்நோய் அறிகுறிகள் குறித்து எவரும் அசமந்தப் போக்குடன் நடந் துகொள்ளக் கூடாது. உடனடியாக வைத்தியசாலை சென்று வைத்தியரை அணுகி சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும்.

உணவு நஞ்சாவது குறித்தும் அதனை தவிர்த்துக் கொள்வது தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டும். உணவுப் பொருட்கள் நஞ்சாகாதபடி அதனை களஞ்சியப்படுத்த வேண்டும். அத்துடன் உணவுப் பொருட்களை பாதுகாப்பான முறையில் சமைப்பதிலும் கொண்டு செல்வதிலும் அதனை விநியோகிப்பதிலும் அதிகம் விழிப்போடு செயற்பட வேண்டும். அடிப்படை சுகாதாரத்தை பேணுவதன் மூலமும் உணவு நஞ்சாதல் தொடர்பான பிரச்சினைகளில் இருந்து எம்மை தவிர்த்துக் கொள்ளலாம்.

சுத்தம் சுகம் தரும் என்பார்கள். அச்சுத்தத்தை ஆரோக்கியத்தின் மந்திரமாக அனைவரும் பயன்படுத்த வேண்டும். சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும். அதுபோலவே எமது உடலை ஆரோக்கியமாக வைத்திருந்தால் நோய் நொடி இன்றி நீண்ட காலம் வாழலாம்.

செ.துஜியந்தன்...
(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)


# சீனாவின் ஊடுருவலை கண்காணிக்க தனியான செய்மதிகளை கோருகிறது இந்திய இராணுவம்

சீனாவின் படைகளை கண்காணிக்கும் வகையில் இந்தியாவின் இராணுவம் மொத்தம் 6 தனி செய்மதிகளை மத்திய அரசிடம் கேட்க உள்ளது.இந்தியா_ சீனா இடையிலான லடாக் மோதல் முடியாமல் நீண்டு கொண்டே இருக்கிறது. அங்கு இன்னும் சீனாவின் படைகள் உள்ளன. எல்லையில் படைகளை வாபஸ் வாங்குவதாக கூறிய சீனா இன்னும் படைகளை வாபஸ் வாங்கவில்லையென இந்தியா குற்றம் சுமத்துகிறது.

அந்த இடங்களில் பதற்றம் நிலவி வருகிறது. இதனால் எல்லையில் முழு கவனத்துடன் இந்திய இராணுவம் செயற்பட்டு வருகிறது.இந்த நிலையில் சீனாவின் படைகளை கண்காணிக்கும் வகையில் இந்திய இராணுவம் மொத்தம் 6 தனி செய்மதிகளை மத்திய அரசிடம் அவசரமாக கேட்டுள்ளது. சீனாவின் படைகள் எங்கே செல்கின்றன, எங்கே குவிக்கப்படுகின்றன என்பதைக் கண்காணிக்கும் பொருட்டு இந்த செய்மதிகளை இராணுவம் கேட்கவுள்ளது.

கடந்த மே மாதம் இறுதியில் லடாக் எல்லையில் திடீரென்று 40000 வீரர்களை சீனா களமிறக்கிறது. இந்தியா எதிர்பார்க்காத நேரத்தில் 4000 கி.மீ எல்லைப் பகுதியில் பல்வேறு இடங்களில் சீனா தனது படைகளை களமிறங்கியது.

இதை இந்தியாவால் சரியாக கணிக்க முடியவில்லை. போதுமான செய்மதி



தகவல்கள் இல்லாத காரணத்தால் கடைசி நேரத்தில்தான் சீனாவின் படைக் குவிப்பை கண்டுபிடிக்க முடிந்தது. இராணுவத்திற்கு என்று தனியாக நிறைய செய்மதிகள் இருந்தால் இப்படி நடந்திருக்காது. முறையான செய்மதி இருந்தால் சீனாவின் படை குவிப்பை முன்பே இந்திய இராணுவம் கணித்து இருக்கும்.

இந்த நிலையில் இதற்காகவே தற்போது இந்திய பாதுகாப்புப் படை 6 செய்மதிகள் கேட்கிறது. வீரர்களை கண்காணிக்கும் வகையில் துல்லியமான கமராக்கள் கொண்ட, இராணுவத்திற்கு மட்டும் என்று பயன்படும் வகையில் நவீன தொழில்நுட்பம் கொண்ட செய்மதிகளை கேட்டுள்ளது. அதிக சக்தி வாய்ந்த 'சென்சர்கள்' இதில் இடம் பெற்று இருக்க வேண்டும் என்றும் இந்திய பாதுகாப்புத்துறை சார்பாக கேட்கப்பட்டுள்ளது.

இந்தியாவிடம் ஏற்கனவே இராணுவ பயன்பாட்டிற்கான செய்மதிகள் உள்ளன. ஆனால் இந்த செய்மதிகளால் சீனாவின் ஆக்கிரமிப்பை முழுவதாகக் கண்டுபிடிக்க முடியவில்லை. இதனால் இந்திய பாதுகாப்பு துறை புதிய செய்மதிகளை கேட்டு இருக்கிறது. விரைவில் இது தொடர்பான அறிவிப்பு வெளியாகும் எனக் கூறப்படுகிறது. இதுஇவ்விதமிருக்க, இரு நாட்டு எல்லையில் உள்ள பாங் கொங் திசோ பகுதியில் இருந்து மேலும் படைகளை வாபஸ் வாங்க முடியாது, தற்போது அங்கிரு க்கும் ரோந்து பகுதிகளில் இருந்து பின்வாங்க முடியாது என்று இந்தியா அதிரடியாக தெரிவித்துள்ளது. பாங் கொங் திசோ பகுதியில் தொடர்ந்து பதற்றம் நிலவி வருகிறது. அங்கு சீனா படைகளை குவித்து உள்ளதாக இந்தியா குற்றம் சாட்டியுள்ளது. அதேபோல் இந்தியாவின் கட்டுப்பாட்டிற்கு கீழ் வரும் கட்டுப்பாட்டு பகுதி 4இல் கூட சீனாவின் வாகனங்கள் இருக்கின்றன.

'இந்தியா அங்கிருந்து பின்வாங்குவது மட்டுமே ஒரே தீர்வாக இருக்கும். பாங்காங் திசோவில் குறிப்பிட்ட சில இடங்களில் இருந்து இந்தியா பின்வாங்கினால் மொத்தமாக பிரச்சினை சரியாகி விடும் என்று சீனா கூறியிருந்தது.

ஆனால் எல்லையில் முழுமையாக அமைதி திரும்பும் வரை எந்த இடத்தில் இருந்தும் ஒரு அங்குலம் கூட படைகளை வாபஸ் வாங்க முடியாது என்று இந்தியா வெளிப்படையாக தனது நிலைப்பாட்டை கூறியுள்ளது. சீனா மொத்தமாக அங்கிருந்து படைகளை வாபஸ் வாங்கும் வரை, இந்தியா தனது படைகளை வாபஸ் வாங்கும் எண்ணத்தில் இல்லை என்று இந்தியா அதிரடியாக கூறி விட்டது.

# அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளை பொருட்படுத்த எனக்கு நேரமில்லை

"நீதி அமைச்சராக தான் நியமிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் நாட்டில் உள்ள முறைமைகள் பற்றி எதுவும் தெரியாதவர்களாகத்தான் இருப்பார்கள். ஒரு அமைச்சர் என்ற ரீதியில் நான் மொத்த அமைச்சரவையினதும் அங்கீகாரம் இன்றி எதனையும் செய்து விட முடியாது என்பதே உண்மையாகும்" என்று புதிய நீதி அமைச்சர் அலி சப்ரி தினகரனுக்கு வழங்கிய பேட்டியின் போது கூறினார். நீதி அமைச்சர் அலி சப்ரி அண்மையில் எமக்கு வழங்கிய பேட்டியின் போது இதனைத் தெரிவித்தார்.



## நீதி அமைச்சர் அலி சப்ரி பேட்டி

**கேள்வி: நீங்கள் நீதி அமைச்சராக நியமிக்கப்பட்டதையடுத்து சில சமூக ஊடகங்களில் உங்களை விமர்சனம் செய்ய ஆரம்பித்துள்ளனர். இந்த விமர்சனங்களால் நீங்கள் சவாலுக்குட்படுத்தப்பட்டதாக நினைக்கிறீர்களா?**

**பதில்:** நீதி அமைச்சில் நிறைய வேலைகள் செய்யப்பட வேண்டியுள்ளன. எனவே அந்த அமைச்சை பெற்றுக் கொண்டதை மிகுந்த சவாலுக்குட்பட்டதாகவே நான் கருதுகிறேன். நான் அந்த சவால்களை எதிர்கொள்ளக்கூடியவன்என்றநம்பிக்கை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இருந்திருக்கக் கூடும். அதனால்தான் அவர்கள் நீதி அமைச்சராக என்னை தெரிவு செய்துள்ளார்கள். ஜனாதிபதியின் தலைமையினாலான அமைச்சரவை தீர்மானிக்கும் வகையில் அரசாங்கத்தின் கொள்கையை முன்னெடுத்துச் செல்ல நான் கடமைப்பட்டுள்ளேன். அரசாங்கத்தின் அங்கீகாரம் இன்றி நான் எதையும் செய்து விட முடியாது. அரசாங்கத்தின் கொள்கையை முன்னெடுத்துச் செல்வதே எனது வேலையாகும். அடிப்படை அற்ற குற்றச்சாட்டுகளைப் பற்றி பொருட்படுத்தி, யோசித்துக் கொண்டிருக்க எனக்கு நேரமில்லை.

**கேள்வி: உங்களை விமர்சிப்பவர்களுக்கு நீங்கள் ஏதேனும் கூற விரும்புகிறீர்களா?**

**பதில்:** 2012 முதல் நான் ஒரு ஜனாதிபதி சட்டத்தரணியாக இருக்கிறேன். சட்டத்தரணியாக மட்டும் 25 வருடங்களுக்கு மேல் பணியாற்றியுள்ளேன். அரசியலமைப்புச் சட்டம், நிர்வாகச் சட்டம், கிரிமினல் சட்டம் மற்றும் சிவில் சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் வரும் பல வழக்குகளில் உச்ச நீதிமன்றம், மேல் நீதிமன்றம் மற்றும் மாகாண நீதிமன்றங்களில் நான் தோற்றியிருக்கிறேன். எனது தொழில் துறையின் தொழில்சார் பங்களிப்பு இதுவாகும். அதுடன் சட்டத்தரணிகள் சங்கத்தின் உபதலைவராக இரண்டு வருட காலம் பதவி வகித்துள்ளேன். மத மற்றும் சமூக நல்லிணக்கத்தை தாங்கிக் கொள்ள முடியாத சிலரே இவ்வாறு விமர்சனம் செய்து வருகின்றனர். நான் சமூகங்களுக்கிடையில் ஒரு பாலமாக இருக்க விரும்புகிறேன். எனது சட்டத்தொழிலை கைவிட வேண்டியுள்ளது. எனினும் இந்தப் பாதையில் நான் விரும்பியே நடக்கின்றேன். நாட்டின் நன்மைக்காகவே நான் இந்த அமைச்சுப் பதவியை பொறுப்பேற்றேன்.

**கேள்வி: புதிய நீதி அமைச்சராகியுள்ள நீங்கள், எந்த விடயங்களுக்கு முன்னுரிமை கொடுப்பீர்கள்?**

**பதில்:** நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் அதிகாரங்களை மீளத் தாபிக்கும் நடைமுறையை மேற்கொள்ளும் வகையில் 19ஆம் திருத்தச் சட்டத்தை திருத்தும் வகையிலான அமைச்சரவை பத்திரத்தை அறிமுகப்படுத்தும் நடைமுறையை வகுக்கும் நிலையில் நாம் இருக்கிறோம். அதற்குத்தான் நான் முன்னுரிமை கொடுக்கவிருக்கிறேன். இரண்டாவது, புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்துவதாகும்.

**கேள்வி: 19ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக ஒழிக்கப் போகிறீர்களா?**

**பதில்:** அது தொடர்பாக அமைச்சரவையே தீர்மானிக்க வேண்டும். 19ஆம் திருத்தம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாகவே இணக்கம் காணப்பட்டுள்ளது. ஆனால் ஜனாதிபதியின் பதவிக் காலம் மற்றும் அவர் இருமுறை ஜனாதிபதி பதவிக்காக போட்டியிடலாம் என்பவை மாற்றப்படாது. தொடரும்.

**கேள்வி: இந்த நடைமுறைக்கு எவ்வளவு காலம் பிடிக்கும்.**

**பதில்:** 20 A யின் நகலை நாம் விரைவிலேயே பாராளுமன்றத்தில் முன்வைப்போம். முதலாவது அமைச்சரவைக் கூட்டத்திலேயே நாம் இது பற்றி கலந்துரையாடவுள்ளோம். அதனையடுத்து அடுத்தடுத்த அமைச்சரவைக் கூட்டங்களில் இது பற்றி மேலும் பேசப்படும். நகலை அமைச்சரவை அங்கீகரித்ததும் அது சட்டமா அதிபரிடம் முன்வைக்கப்படும். பின்னர் அது பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் இடம் பெறும். அந்த நிலையில் அதனை எவரும் சவாலுக்குட்படுத்த விரும்பினால் உச்ச நீதிமன்றத்தில் அதனைச் செய்யலாம். உச்ச நீதிமன்றத்தின் தீர்மானத்தையடுத்து அது மீண்டும் பாராளுமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டு குழு நிலையில் பல்வேறு திருத்தங்கள் பற்றி உத்தேசிக்கப்படும். இதற்கு சுமார் மூன்று மாத காலம் செல்லும்.

**கேள்வி: நீங்கள் அமைச்சுப் பதவிக்கு நியமனம் பெற்ற அடுத்த நாளன்று ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்தப் போவதாக கூறியிருந்தீர்கள். தாக்குதல் நடந்து ஏற்கனவே ஒரு வருடம் கழிந்து விட்டது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க இன்னும் எவ்வளவு காலம் செல்லும்?**

**பதில்:** நீதி அமைச்சர் என்ற ரீதியில் நான் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஆதரவை மட்டுமே வழங்கலாம். விசாரணைகளில் பங்கேற்க முடியாது. இந்த விடயத்தில் நீதித்துறை முற்றிலும் சுதந்திரமாக செயற்படும். நீதித்துறையின் செயற்பாடுகளில் எவரும் தலையிட முடியாது. மற்றைய சட்ட அமுலாக்க தரப்பினர் நேரடியாக ஜனாதிபதியின் கீழேயே செயற்படுவர். இந்த நடைமுறை செயற்படுத்தப்பட எவ்வளவு காலம் செல்லும் என்பதை என்னால் சரியாகச் சொல்ல முடியாது. அது சட்ட அமுலாக்கம் மற்றும் ஆணைக்குழுவின் செயற்பாடுகளைப் பொறுத்தது.

**கேள்வி: தற்போது அமுலில் உள்ள அரசியலமைப்பை முழுமையாக மாற்றும் வகையில் 19ஆம் திருத்தத்தை நீக்குவதுடன் வேறு என்ன விடயங்களுக்கு முன்னுரிமை வழங்குவீர்கள்?**

**பதில்:** அடுத்ததாக நான் முன்னுரிமை வழங்கும் விடயங்கள் சட்டங்களின் தாமதங்களுக்குத் தீர்வு காண்பதுடன் முறைமையை நவீனமயப்படுத்துவதாகும். நீதித்துறை விற்பன்னர்களை அணுகி நீதிமுறைமை மற்றைய நாடுகளில் எவ்வாறு செயற்படுகிறது என்பதை கண்டறிந்து சட்டங்களின் தாமதங்களை தடுத்து நீதித்துறையின் மூலம் மக்கள் பெறும் பயன்களை அதிகரிப்பதாகும். அது ஒரு கூட்டுச் செயற்பாடாக அமையும்.

### 'அரசாங்கத்தின் கொள்கைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதே எனது கடமை'

### 'சமூகங்களுக்கிடையில் ஒரு பாலமாக இருக்க விரும்புகிறேன். அரசின் அங்கீகாரம் இன்றி நான் எதையும் செய்து விட முடியாது'

மஞ்சுள பெர்னாண்டோ...
தமிழில்: என். ராமலிங்கம்

# சூழலுக்கு மாசு விளைவிக்காத பசுமையை நோக்கிய பயணம்



சேதனப் பசளையினால் செழித்து நிற்கும் பயிர்கள்

**சூழல் மாசடைதல் என்பது உலகில் பாரிய அழிவுகளை ஏற்படுத்துவதாகவும் நிலையான அபிவிருத்திக்கு அதிக பாதகத்தை விளைவிக்கும் செயற்பாடாகவும் அமைந்துள்ளது. வெகுவேகமான நவீன தொழிநுட்ப வளர்ச்சியானது, சூழல் மாசடைதலை வேகமாகத் தூண்டும் காரணியாக உள்ளது. அபிவிருத்தி அடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலுள்ள தொழிற்சாலைகள், தொழில் முயற்சிகள் சூழலில் எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தி சூழல் மாசடையும் வேகத்தின் வீதத்தினை அதிகரிக்கின்றன.**

இலங்கையின் 2016ஆம் ஆண்டின் 6ம் இலக்க நுண்நிதி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட முதலாவது நிறுவனமான பெரெண்டினா மைக்ரோ இன்வெஸ்ட்மெண்ட்ஸ் கம்பனி லிமிடெட் (BMIC) சுற்றுச் சூழல் மாசடைதல் நிலை குறித்து கூடிய அவதானம் செலுத்தி, 2016 ஆண்டு முதல் தனது மூன்று படிநிலை செயற்பாடுகளான (triple bottom line approach) மக்கள், உலகு மற்றும் இலாபம் என்பவற்றின் அணுகுமுறையில் பசுமை நுண்நிதி (Green Microfinance) செயற்பாடுகளை இணைத்து அர்ப்பணிப்புடன் தொழிற்பட்டு வருகின்றது.

வறுமை நிலையற்ற, சமத்துவமானதும் பொருளாதார ரீதியில் முன்னேற்றத்தை பெற்றதுமான ஒரு சமூகத்தை கட்டியெழுப்பும் நோக்கில் தனது செயற்பாடுகளை மேற்கொள்ளும் BMIC நிறுவனமானது, தனது நுண்நிதி பயனாளிகளுக்காக கடனுடன் மேலதிக அனுகூலங்களை வழங்கும் பொருட்டு நிதிசார் மற்றும் நிதிசாரா சேவைகளை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. வறிய மக்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தல் நிதிச் சேவைகள் மாத்திரம் போதாது என்ற நம்பிக்கையின் காரணமாக, நிதி சேவைகள் கடன் மூலம் வழங்கப்படுவதோடு, நிதிசாரா சேவைகள், வியாபார அபிவிருத்திச் சேவைகள் (Enterprise Development Services EDS) மூலம் பயனாளிகளுக்கு BMIC யினால் வழங்கப்படுகின்றது.

ஏனைய நுண்நிதி நிறுவனங்களோடு ஒப்பிடும் போது, வியாபார அபிவிருத்திச் சேவைகள் (Enterprise Development Services EDS) என்பது BMIC நிறுவனத்தின் ஒரு விஷேட அம்சமாக அமைந்துள்ளது. BMIC நிறுவனத்தின் பணிக்கூற்றான பயனாளிகளுக்கு செழுமையான ஒரு வாழ்க்கைப் பயணம் என்பதை நிலைநாட்டுவதற்கு தவிர்க்க முடியாத ஒரு பாத்திரமாக EDS அமைந்து, தனிப்பட்ட மற்றும் வியாபார அபிவிருத்திக்குத் தேவையான திறன்களை வளர்க்கும் பொருட்டு பல்வேறுபட்ட பயிற்சிகளை வழங்கி வருகின்றது.

BMIC நிறுவனம் 2016 ஆம் ஆண்டு முதல் 'சுற்றுச் சூழலை தற்காலத்திற்காகவும், எதிர்காலத்திற்காகவும் பாதுகாப்போம்' என்ற தொனியில் சூழல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்தது. இதற்கமைய சூழல் அறிவியல் துறையில் முதுகலைப்பட்டம் பெற்ற ஒரு தகுதி வாய்ந்த சுற்றுச் சூழல் ஒருங்கிணைப்பாளர் ஒருவர் தொழில்நுட்ப உதவிகளுக்காக அமர்த்தப் பட்டதோடு, BMIC நிறுவனத்தினால் கடனுதவி வழங்கப்பட்டு இயங்கும் தொழில் முயற்சிகளால், சுற்றுச் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்களை மதிப்பீடு செய்து அவற்றை எவ்வாறு குறைத்துக் கொள்ளலாம் என்பது பற்றிய திட்டமிடல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.



உயிரியல் வாயு தயாராகும் இடம்



உயிரியல் வாயு மூலம் தொழிற்படும் சமையல் அடுப்பு

## பெரெண்டினாவின் பயன் தரும் வளர்ச்சித் திட்டம்

இந்த திட்டத்தின் நோக்கங்களாக புவி வெப்பமடைதலை தடுக்கும் செயற்பாடுகளுக்கு உதவும் முகமாக சக்தி மீள்புதுப்பித்தல் தொழில்நுட்பதிற்கு மாறுதல், வீட்டில் எரிபொருள், மின்பாவனைகளைக் குறைத்து இலாபமீட்டல் என்பன அமைந்துள்ளன. அத்தோடு, உயிர்வாயு செரிமானிகள் மூலம் வெளிவரும் கழிவுகள் நிலத்தின் வளத்தை அதிகரிப்பதுடன், வீட்டுத் தோட்டம் மற்றும் காய்கறி பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தக் கூடிய உரமாகவும் அமைகின்றன.

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் (UNDP) கீழ் செயற்படுத்தப்படும் NAMA திட்டத்துடன் (Nationally Appropriate Mitigations Actions) இணைந்து BMIC நிறுவனம் வீட்டுப் பாவனைக்காக உயிர்வாயு செரிமானிகளை நிர்மாணித்தது. ஆரையம்பதி, கம்பளை, கினிகத்ஹேன, களுவாஞ்சிக்குடி, கொத்மலை, சேருநுவர, தம்பலகாமம் மற்றும் வாழைச்சேனை ஆகிய பிரதேசங்களிலுள்ள 30 BMIC பயனாளிகளின் உபயோகத்திற்காக 8m3 பரிமாணத்தில் இந்த உயிர்வாயு செரிமானிகள் Rs. 1,048,500 நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்டன.

சிறந்த பாற் பண்ணை முகாமைத்துவம் மற்றும் உயிர்வாயு செரிமானி மூலம் சிறந்த பயனைப் பெற்ற BMIC நிறுவனத்தின் நுண்நிதி பயனாளிகளுக்கு ஒரு சிறந்த உதாரணமாக திருமதி ஜெபமாலை லூர்துமேரி (வயது 45) அவர்களைக் குறிப்பிடலாம். வாழைச்சேனை யூனியன் கொலனியில் வசிக்கும் இரண்டு பிள்ளைகளின் தாயான லூர்துமேரியின் கணவர் மத்திய கிழக்கி ல் பணி புரிகின்றார். மூன்று வருடங்களுக்கு முன்னர், தனது வீட்டில் அமைந்துள்ள மாட்டுக் கொட்டிலை மேம்படுத்த ரூபா 30,000 நுண்நிதிக் கடனொன்றை பெற்றுக் கொண்டு BMIC நிறுவனத்துடன் இணைந்து கொண்ட இவரிடம் தற்போது நான்கு உயர் ரக பசுக்கள் இருப்பதுடன், வீட்டு தோட்டத்தின் ஒரு பகுதியில் அசோலா வகை பாசியினையும் பயிரிட்டுள்ளார். அத்தோடு இவரின் மாட்டுக் கொட்டில், கழிவுகளை அகற்ற சிறந்த வடிகாலமைப்பையும் கொண்டுள்ளது.

BMIC நிறுவன உதவியுடன், இவரது வீட்டில் மே 2019 இல் புதிதாகவொரு உயிர்வாயு செரிமானி அமைக்கப்பட்டது. அதன் மூலம் பல்வேறுபட்ட அனுகூலங்களை லூர்துமேரி பெற்று வருகின்றார். தற்போது அவரின் வீட்டின் அனைத்து எரிபொருள் தேவைகளும் உயிர்வாயு மூலமே நிவர்த்தி செய்யப்படுகின்றது என்பதோடு வீட்டின் மாதாந்த மின்சாரக் கட்டணத்தில் ரூபா 1000 இவரால் சேமிக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. அத்தோடு உயிர்வாயு செரிமானி மூலம் வெளியிடப்படும் சேதனங்களை லூர்துமேரி அவர்கள் சேதன பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்துகிறார்.

ஆரம்பத்தில், தனது பசுக்களால் பெறப்பட்ட மேலதிக பாலைக் கொண்டு தயிர் தயாரிப்பில் ஈடுபட முனைந்த லூர்துமேரி, தயாரிப்பின் போது L. P. காஸ் பாவனை மூலம் அதற்கு மேலதிகமாக ஏற்பட்ட செலவினால் அம்முயற்சியை கைவிட்டார். தற்போது உயிர்வாயு செரிமானி மூலம் பெறப்படும் சக்தியைக் கொண்டு பாலைச் செலவின்றி கொதிக்க வைக்க முடியுமாதலால், தயிர் தயாரிக்கும் முயற்சியில் அவர் மீண்டும் ஈடுபட்டுள்ளார்.

லூர்துமேரியின் வீட்டில் அமைக்கப்பெற்ற உயிர்வாயு செரிமானி, அவரது வீட்டின் பல்வேறுபட்ட செலவுகளை கணிசமாகக் குறைத்து, அவரின் வாழ்க்கைத்தரத்தை வெகுவாக மேம்படுத்தியுள்ளது.

உயிர்வாயு செரிமானிகள் நிர்மாணிப்புப் பணிகள் BMICயினால் இரு கட்டங்களாக நடைமுறைப் படுத்தப்பட்டன. ஏப்ரல் 15 முதல் ஜூன் 30 2019 காலப் பகுதியில் 15 உயிர்வாயு செரிமானிகளும் ஒக்தோபர் 30 முதல் டிசம்பர் 12 2019 வரை மிகுதி 15 உயிர்வாயு செரிமானிகளும் நிர்மாணிக்கப்பட்டன. ஒரு உயிர்வாயு செரிமானியை நிர்மாணிப்பதற்கான செலவு Rs. 116,500 வாகும் என்பதோடு, இதில் 40% NAMA வும், 30% BMIC நிறுவனமும் வழங்கியதோடு, மிகுதி 30% னை பயனாளி பங்களிப்புச் செய்தார்.

தற்போது உலகில் பின்பற்றப்படும் சூழல் நட்பு சார் விவசாய நடவடிக்கைகள் மற்றும் பொருட்களுக்கான அதிக கேள்வி காரணமாக BMIC நிறுவனம், இயற்கை வேளாண்மை மற்றும் பனையோலை, சணல், வாழையிலை ஆகியவற்றால் தயாரிக்கப்படும் சூழலுக்கு பாதிப்பற்ற பொருட்களை தயாரித்தல் என்பனவற்றுக்கான பல பயிற்சி நெறிகளை பயனாளிகளுக்காக ஏற்பாடு செய்து வருகின்றது. இந்த நடவடிக்கைகள் புதிய தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தல் மற்றும் சூழல் பாதுகாப்பு செயற்பாடுகளை துரிதப்படுத்தல் ஆகிய இருவகை அனுகூலங்களை உருவாக்குகின்றன.

நாட்டு மக்களுக்காக ஒரு பசுமையான இலங்கையை உருவாக்கும் பொருட்டு மத்திய வங்கியின் 'இலங்கையில் நிலையான நிதிக்கான பாதை வரைபடம்' என்ற திட்ட வரைபிற்கு இணங்க, நுண்நிதி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட முதலாவது நிறுவனம் என்ற வகையில், பெரென்டினா மைக்ரோ இன்வெஸ்ட்மெண்ட்ஸ் கம்பனி லிமிடெட் (BMIC) நிறுவனமானது, பொதுவான நுண்நிதி கடன் வசதிகள் வழங்கல் நடவடிக்கைக்கு மேலாக பசுமை நுண்நிதி (Green Microfinance) செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

ANAM BERENDINA

## பாடகர் SPB யின் உடல்நிலை...

வைரஸ் பாதிப்பு ஏற்பட்டதையடுத்து, அவர் கடந்த 05ஆம் திகதி சென்னையில் உள்ள எம்.ஜி.எம். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். நலமாக இருப்பதாக மருத்துவமனையில் இருந்து வீடியோ வெளியிட்டார் எஸ்.பி. பாலசுப்பிரமணியம்.

ஆனால் கடந்த 12ஆம் திகதி இரவிலிருந்து அவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. அவர் நலம்பெற வேண்டி திரையுலகினர் கூட்டு பிரார்த்தனை செய்தனர்.

## இன்று முதல் நாட்டில்...

கட்டமைப்பு மற்றும் நுரைச்சோலை அனல் மின் நிலையம் ஆகியவற்றில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நாடு முழுவதும் மின்சாரம் தடைப்பட்டது. இதனால் நான்கு நாட்களுக்கு பகுதியளவில் மின்சாரம் தடை செய்யவுள்ளதாக மின்சார சபை அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. இதனை வழமைக்கு கொண்டு வருவதற்கு நீண்ட நாட்களாகும் என மின் நிலைய தகவல் வட்டாரங்கள் தெரிவித்திருந்த நிலையில் இன்று முதல் மின்சார துண்டிப்பு அமுல்படுத்தப்பட மாட்டாதென இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

## வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்ட...

ஏற்பாடு செய்திருந்தார். ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொள்வதற்காக மணிவண்ணனின் ஆதரவாளர்கள் கட்சி அலுவலகத்துக்கு வந்திருந்த போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மணிவண்ணனின் ஆதரவாளர்களை வெளியேற்றியதுடன் கட்சி அலுவலகமும் மூடப்பட்டது. இதனால் மணிவண்ணனின் ஆதரவாளர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

அங்கிருந்து சென்ற ஆதரவாளர்கள் மணிவண்ணனின் அலுவலகத்திற்கு முன்பாக ஒன்று கூடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அபிவிருத்தியுடன் கூடிய...

பெற்றுக்கொடுத்தோம். அபிவிருத்தி, அரசியல் தீர்வு அல்லது அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வை எம்மால் பெற்றுக்கொடுக்க முடியாது போனது. அதனால் எமது மாகாணத்தில் ஒரு மாற்றுவழி அரசியலை உருவாக்க வேண்டிய தேவை எழுந்தது. எம் மக்களின் இருப்பை உறுதிப்படுத்தும் ஓர் அரசியல் பயணத்தில் நாம் ஈடுபட்டோம். உரிமையோடு கூடிய அபிவிருத்தி சார்ந்த அரசியலையே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

மத்திய வங்கிக் கொல்லை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கிழக்கில் எத்தனோல் கம்பனி என மக்கள் விரும்பாத விடயங்களே நடைபெற்றன.

தற்போதைய அரசாங்கத்தில் நாடு முழுவதும் சேவையாற்றக் கூடிய ஒரு முக்கிய இராஜாங்க அமைச்சை எனக்கு ஜனாதிபதியும், பிரதமரும் வழங்கியுள்ளனர்.

இந்த வாய்ப்பை சரியாக நான் பயன்படுத்துவேன். மக்களின் எதிர்பார்பை நிறைவேற்றும் நோக்கில் அரசாங்கத்துடன் உறவுகளை ஏற்படுத்தி பயணிப்போம் என்றார்.

## அனைவரும் தோல்வியை...

பாராளுமன்றில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கைவிளக்க உரை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

நாட்டின் எதிர்காலத்தை நோக்கியதாகவும் தொலைநோக்கு பார்வை கொண்டதாகவும் ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனம் அமைந்துள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அவர் முன்வைத்த சுபீட்சத்தின் நோக்கு மற்றும் தற்போதைய அவரது கொள்கைப் பிரடனம் என்பன ஒரே பார்வை கொண்டதாக அமைந்துள்ளது.

நாடு இன்று முகங்கொடுத்துள்ள சமூக, அரசியல், பொருளாதார பிரச்சினைகளை வெற்றிக்கொள்ள நாட்டின் அனைத்து பிரஜைகளும் பொறுப்புகள் மற்றும் கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.

இந்நாடின் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைப்பதற்கான தெளிவான நோக்கு ஜனாதிபதியிடம் உள்ளது. இந்த பாராளுமன்றில் அதிகமாக படித்தவர்களும், தொழில்வாண்மைமிக்கவர்களும் உள்ளனர். ஜனாதிபதியின் நோக்கை அடைந்துக்கொள்ள இவர்கள் அனைவரின் உதவிகளையும் பெற்று முன்னோக்கி பயணிக்க முடியும்.

வரலாற்றில் எமது நாட்டுக்கு இருந்த பெருமையை நாம் மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். எதிர்கால பம்பரையை பலத்துறையில் மிளரவைக்க எமது கடமைகளை சரியாக செய்ய வேண்டும். அதற்காக நாட்டின் அரசியல் கலாசாரத்தில் பாரிய மாற்றம் ஏற்பட வேண்டும்.

## வேலைத்தளங்களில் உயிரிழக்க...

*இவ்வாறு தெரிவித்துள்ளார்.*

*தற்போது வரையில் நிலுவையில் உள்ள தொழிலாளர் நட்டஈட்டு வழக்குகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.*

## பிரதமர் மஹிந்தவுக்கு அவுஸ்திரேலிய...

*அவுஸ்திரேலிய பிரதமரின் பாராட்டுக்களை வரவேற்பதாகவும் இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான தொடர்புகளை தொடர்ந்தும் வலுப்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.*

## தேசிய பட்டியலில் பாராளுமன்றம்...

தேசியபட்டியல் மூலம் பாராளுமன்றத்துக்கு அனுப்பவேண்டுமென்ற யோசனையை முன்வைத்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தேசியப் பட்டியல் நியமனத்துக்கு ஏழு நாள் கால அவகாசத்தை கோரியுள்ள நிலையிலேயே இந்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

## முதலாம் திகதி முதல்...

வழமைக்கு திரும்புகின்றது.

தரம் 10,11,12,13 வகுப்புகளுக்கான பாடசாலை நேரம் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் காலை 7.30 மணி முதல் மாலை 1.30 மணிவரை என வழமையான நேரத்தில் நடத்துவதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் கல்வியமைச்சு சகல மாகாண பிரதான செயலாளர்கள், மாகாண கல்வி செயலாளர்கள், மாகாண மற்றும் வலய கல்வி அதிகாரிகள், சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளது. அதற்கமைய சகல பாடசாலைகளினதும் 10, 11.,12 மற்றும் 13 வகுப்புகளுக்கு ஆகஸ்ட் மாதம் இறுதி திகதி வரை மட்டும் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 3.30 வரை பாடசாலை கல்வி நடவடிக்கைகள் இடம்பெறும்.

## ரஷ்யா கண்டுபிடித்த தடுப்பூசியை...

கொவிட்19 க்கான சிகிச்சை மற்றும் கட்டுப்படுத்தலுக்காக ரஷ்யா கண்டு பிடித்துள்ள தடுப்பூசி குறித்து இதன் போது தூதுவர் அமைச்சரிடம் தெளிவுபடுத்தினார். இந்த தடுப்பூசி தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரை மற்றும் அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் இலங்கையில் கொவிட்19 கட்டுப்பாடு மற்றும் சிகிச்சைக்காக இதனை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென்று அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தூதுவரிடம் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் மருத்துவர்களை உருவாக்குவதற்கு ரஷ்யா வழங்கியுள்ள உதவிகளுக்கு அமைச்சர் இதன் போது தூதுவரிடம் நன்றி தெரிவித்தார். இது தொடர்பில் கருத்து தெரிவித்த ரஷ்ய தூதுவர்,

இரு நாடுகளுக்குமிடையில் நீண்ட காலமாக தொடர்கின்ற நட்புறவின் பிரதிபலனாக இலங்கையின் வைத்தியர்கள் மற்றும் ஏனைய துறை நிபுணர்களின் கல்விக்காக ரஷ்யாவின் உதவித் திட்டத்தை விரைவில் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

## அங்கஜன் இராமநாதனின் நியமனம்...

உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறியுள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“பிரதிக் குழுக்களின் தவிசாளர் அங்கஜன் இராமநாதன் அவர்களே நீங்கள் அந்த ஆசனத்தில் வீற்றிருக்கும் போது பேசக் கிடைத்தமையை எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன்.

முதல் தடவையாக ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் பாராளுமன்றத் தேர்தல் மூலம் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தெரிவானமை எனக்கு பெருமிதமளிக்க கூடிய விடயமாகும்.

அது நாட்டுக்கும் பாரிய பாக்கியமாகும். தேசியக் கட்சியொன்றிலிருந்து போட்டியிட்டு வடக்கிலும் கிழக்கிலும் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்துக்கு தெரிவானமையையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். உங்களுக்கு வாக்களித்த தமிழ் மக்களுக்கு ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் என்ற வகையில் நன்றிகளை கூறிக் கொள்கின்றேன். அத்துடன் பிரதித் தவிசாளராக நீங்கள் நியமிக்கப்பட்டமைக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன் என ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## விக்னேஸ்வரன் எம்.பியின்...

பிளவுபடுத்தும் கருத்துக்களை அவர் வெளியிட்டுள்ளாரென மனுச நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்கினேஸ்வரன் பாராளுமன்றத்தில் ஆற்றிய கன்னி உரையை ஹன்சார்டிலிருந்து முற்றாக நீக்க வேண்டுமென அவர் நேற்று சபையில் வேண்டுகோள் விடுத்தார்.

இது தொடர்பில் கவனம் செலுத்தப்படுமென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, மனுஷ நாணயக்காரவின் கோரிக்கைக்கு பதிலளித்தார்.

நேற்றைய சபை அமர்வில் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய மனுஷ நாணயக்கார,

இந்நாட்டில் தனி இராச்சியமொன்றை நிறுவுவதற்கோ, அவ்வாறான முயற்சிக்கு ஒத்துழைப்பு மற்றும் நிதி பங்களிப்பு வழங்கும் நடவடிக்கையில் ஈடுபடமாட்டோமென்று இந்த சபையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணம் செய்தனர்.

ஆனால், போர் முடிவடைந்து, பூர்வீக கோட்பாடு உள்ளிட்ட விடயங்கள் எல்லாவற்றையும் ஒருபுறம் ஒதுக்கிவைத்துவிட்டு அனைரையும் இலங்கையராக ஏற்கும் நிலைக்கு முழு நாடும் வந்துள்ள நிலையில் இந்த பாராளுமன்றத்தில் விக்கினேஸ்வரன் சர்ச்சைக்குரிய வகையில் உரையாற்றியுள்ளார்.

இலங்கையின் முதல் சுதேச குடிமக்களின் மொழி தமிழ் என்று இந்த பாராளுமன்றத்தில் அவர் கருத்து வெளியிட்டுள்ளார். அவ்வாறான கருத்து ஹென்சாட்டில் இடம்பெறுவது தவறு.

சிலருக்கு தனிப்பட்ட ரீதியில் சில நிலைப்பாடுகள் இருக்கலாம். இந்நாட்டின் பூர்வீக குடிமக்கள் யார், மொழி எது? என தனிப்பட்ட கருத்துகள் இருக்கலாம். ஆனால், அவ்வாறான கருத்து இலங்கை பாராளுமன்றத்தின் ஹென்சாட்டில் இடம்பெறுவது தவறு.

எனவே, ஹென்சாட்டிலிருந்து இக்கருத்தை நீக்குமாறு கோருகின்றேன்." என்றார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர், இது தொடர்பில் ஆராய்வதாக குறிப்பிட்டார்.

## மலையக வீட்டுத்திட்டத்தில் ஊழல் ...

உட்பட பல தொழில்கள் அங்கு உள்ளன. வைத்தியர்கள், சட்டத்தரணிகள், ஆசிரியர்கள் என பலர் உருவாகியுள்ளனர். எனினும், மலையகம் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. இதற்கு என்ன காரணம்? தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம் அவர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படவில்லை.

ஆனால் மக்களின் உண்மையான பிரச்சினைகள் எவை என்பதை ஜனாதிபதி கண்டறிந்துள்ளார். மலையகத்திலுள்ள ஆறு பிரதான வைத்தியசாலைகள் உள்ள போதிலும் போதுமான வசதிகள் இல்லை. அவை மிகவும் மோசமான நிலையில் உள்ளன. அதிகமான பாடசாலைகளும் மலையகத்தில் உள்ளன. பாடசாலைகளிலும் வளங்கள் முழுமையாக இல்லை. இவை தொடர்பில் ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தமிழ் மக்களை ஜனாதிபதி குறிப்பிட்டு கூறவில்லையென நாம் கூறிக்கொண்டிருக்கின்றோம். பாடசாலை, வைத்தியசாலை என அனைத்துப் பிரச்சினைகளும் அனைவருக்கும் பொதுவானவையாகும். இனம், மதம், மொழி என்பது கண்ணுக்கும் காதுக்கும் மாத்திரம்தான் தேவை. வயிற்றுக்கு அவசியமில்லை.

நாடு பாரிய பொருளாதார பிரச்சினைக்கு முகங்கொடுத்துள்ளது. அடுத்த இரண்டு வருடம் பாரிய சவால்மிக்க காலமாகும். நாட்டின் பொருளாதாரத்தை இதற்கு மத்தியில்தான் கட்டியெழுப்ப வேண்டும். அனைவரும் ஒன்றிணைந்தால் மாத்திரமே நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும்.

சிலோன் டீ எமது பொக்கிஷமாகும். சிலோன் டீ என்ற நாமம் சரிவை சந்தித்துள்ளது. அதனை கட்டியெழுப்ப வேண்டும். சிலோன் டீக்கு அன்று இருந்த நாமம் இன்று இல்லை. இந்த விடயமும் ஜனாதிபதியின் உரையில் இடம்பெற்றது.

சிறுதோட்ட உரிமையாளர்களின் பிரச்சினைகளையும் எடுத்துரைத்துள்ளார். மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகள் சம்பந்தமாகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பல தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. அவற்றை மீள் உருவாக்கம் செய்யனும். இல்லாவிட்டால் மாற்றுத் தொழில்களை அதில் உருவாக்க வேண்டும்.

மலையகத்தில் 4,000 வீடுகள் கட்டப்பட்டன என்று கூறினார்கள். ஆனால் கண்காணிப்பு குழுமூலம் ஆராய்ந்தோம். 500 வீடுகளே முழுமைப்படுத்தப்பட்டுள்ளன. ஏனையவை அரைகுறையில் உள்ளன. அரசியல் இலாபத்துக்காகவே பல திட்டங்களை கொண்டுவந்தனர்.

நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் இதில் எவ்வித கவனமும் செலுத்தப்படவில்லை. ‘அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்’ என பழமொழியொன்று உள்ளது. எனவே, வீட்டுத் திட்டத்தில் ஊழல் செய்தவர்களை கட்டாயம் சட்டத்தின் முன் நிறுத்துவோம்.

## தகுதியுடைய பட்டதாரிகள்...

பட்டதாரிகள் எவருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையிலேயே தனது திட்டத்தை முன்னெடுத்துள்ளது என்று பதிலளித்த அமைச்சர் தினேஸ் குணவர்தன, தாம் பதவியில் இருந்த போது வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினை தீர்வுக்கு எதுவுமே செய்ய தவறியவர்கள் இன்று அரசாங்கத்தின் திட்டங்களை விமர்சிப்பதாகவும் கூட்டிக்காட்டினார்.

பல்கலைக்கழக மானிங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழங்கள் அல்லது உயர்கல்வி நிறுவனங்களில் பட்டப்படிப்பை மேற்கொண்டு வேலையில்லாதிருந்த அனைத்துப் பட்டதாரிகளுக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தகுதியற்றவர்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளவர்களின் ஆவணங்கள் தொடர்பிலும் மேல்மதிப்பீடு செய்ய உரிய நிறுவனங்களுக்கு அரசாங்கம் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அவர் கூறினார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் நேற்று 27/2 கீழ் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வியில்,

அனைத்து வேலையில்லாப் பட்டதாரிகளும் அரச சேவையில் இணைத்துக்கொள்ளப்படுவார்களென்பது கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அரசாங்கம் கொடுத்திருந்த வாக்குறுதியாகும். அதன் அடிப்படையில் கடந்த பெப்ரவரி மாதம் 02ஆம் திகதி விளம்பர அறிவிப்புகள் மூலம் பட்டதாரிகளை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பத்தை அரசாங்கம் கோரியது. பெப்ரவரி மாத இறுதியில் பட்டதாரிகளுக்கு பயிற்சியை வழங்குவதற்காக மூன்று நாட்களுக்கு பணியில் இணைந்துக்கொள்ளுமாறு அரசாங்கம் அறிவித்திருந்தது.

கடந்த 16ஆம் திகதி அரச பொது நிர்வாக அமைச்சால் வெளியிட்டுள்ள அறிக்கையில் 40,092 பேர் பயிற்சிக்கு தகுதி பெறாதவர்களாக கூறப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படாத பல்கலைக்கழகத்தில் பட்டத்தை பெற்றிருத்தல் அல்லது ஊழியர் சேமலாப நிதியத்தில் பெயர் விபரம் காணப்படுகின்றமை மற்றும் சில ஆணவங்களில் சிக்கல்கள் உள்ளமையால் இவர்களுக்கான வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் நீண்டகாலமாக யுத்தம் காணப்பட்டதுடன், பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வாழ்ந்த பட்டதாரிகளுக்கும் இந்தப் பிரச்சினைக்கு முகங்கொடுத்துள்ளனர். ஊழியர் சேமலாப நிதி செலுத்தப்பட்டுள்ளமையை காரணங்காட்டி 10,000 வரையான பட்டதாரிகள் நிராகரிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் எவ்வித வேலை வாய்ப்பும் இல்லாது பாரிய சிக்கல் நிலைக்கு முகங்கொடுத்துள்ளனர்.

விண்ணப்பம் கோரலின் போது அரச பல்கலைக்கழங்களில் பெற்ற பட்டம் மாத்திரம்தான் செல்லுப்படியாகுமென எந்தவொரு இடத்திலும் கூறப்பட்டிருக்கவில்லை. அதேபோன்று ஊழியர் சேமலாப நிதி செலுத்தப்பட்டுள்ளவர்கள் இணைத்துக்கொள்ளப்பட மாட்டார்களென்றும் கூறப்பட்டிருக்கவில்லை. வேலையில்லாப் பட்டதாரிகள் இதன் மூலம் ஏமாற்றப்பட்டுள்ளனரா? பாதிக்கப்பட்டுள்ள வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு அரசாங்கம் வழங்கப்போகும் தீர்வு என்ன? என அவர் கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் தினேஸ் குணவர்த்தன,

தேர்தல் வெற்றியின் பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். அதன் அடிப்படையில் வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு நியமனங்களை வழங்கவும் வறுமானம் குறைந்த கல்வியறிவு குறைந்த ஒரு இலட்சம் பேருக்கு அரச வேலைவாய்ப்புகளை வழங்கவும் நடவடிக்கையெடுத்தார்.

கடந்த அரசாங்கம் வேலையில்லாப் பட்டதாரிகளை முற்றாக மறந்துச் செயற்பட்டமையால்தான் ஜனாதிபதி இந்த பணியை முதலில் நிறைவேற்ற நடவடிக்கையெடுத்தார். 91,764 விண்ணப்பங்கள் எமக்கு கிடைக்கப்பெற்றன. அதில் 59,506 தகுதியுடையவர்களாக அடையாளம் காணப்பட்டனர். அவர்களை பயிற்சியில் இணைத்துக்கொள்வதற்கான கடிதங்களை அனுப்பும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட போதுதான் தேர்தல்கள் ஆணைக்குழு அதனை தடுத்தது.

இவ்வாறு வழங்கப்பட்ட நியமனங்களில் 6,187 பேர் உழியர் சேமலாப நிதி செலுத்தப்பட்டவர்களாகும். கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் 60,000 பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக்கொள்ள அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றிருந்தது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள எந்தவொரு கல்வி நிறுவனத்திலும் பட்டத்தை பெற்றுள்ள அனைவரும் பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். இதுதொடர்பிலான மேன்முறையீடுகளும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன என்றார்.

## இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரியின் கற்பகவிநாயகர் ஆலய ஆவணி சதுர்த்தி இன்று

*இரத்மலானை ,கொழும்பு இந்துக் கல்லூரியின் கற்பகவிநாயகர் ஆலய வருடாந்த ஆவணி சதுர்த்தி இன்றுஆலயத்தில் பிற்பகல் 4 மணிக்கு பாடசாலை அதிபர் சி. யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறும். அடியார்கள் அனைவரையும் கலந்து அருள்பெறுமாறு பாடசாலையின் இந்து மன்றம் அன்புடன் அழைக்கின்றது.*

## 12 உறுப்பினர்களை...

*உள்ளடங்குகின்றனர்.*

*இக்குழுவின் முதலாவது கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை பிற்கல் 2 மணிக்கு சபாநாயகர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.*

## தேர்தல் முறை மாற்றம்... (03ஆம் பக்கத் தொடர்)

அறிமுகப்படுத்தப்பட்டது. விகிதாசார முறையில் இறுதியாக நடைபெற்றது 8ஆவது பொதுத் தேர்தலாகும். இந்த 8 தேர்தல்களில் 5 பொதுத் தேர்தல்களில் சாதாரண பெரும்பான்மையைக்கூட எந்தவொரு கட்சியாலும் பெற முடியாது போனது. 1989, 2010ஆம் ஆண்டுகள் மற்றும் இறுதியாக நடைபெற்ற தேர்தலில் மாத்திரமே பெரும்பான்மையை பெற்றுக்கொள்ள முடிந்தது. இதனால் நாட்டில் ஒரு ஸ்திரமற்ற அரசியல் சூழல் உதயமாகியது.

ஆனால் இம்முறை தேர்தலில் ஓர் ஆச்சர்யமே நிகழ்ந்துள்ளது. இந்த தேர்தல் முறை உருவாக்கியவர்கள் கூட எந்தவொரு கட்சியாலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை ஒருபோதும் பெற்றுக்கொள்ள முடியாது என்றே கூறியிருந்தனர். இது அரசியல் ஸ்திரத்தன்மையை கேள்வியெழுப்பியது.

தேர்தல்முறை மாற்றம் மற்றும் புதிய அரசியலமைப்புத் தொடர்பில் கொள்கைப்பிரகடன உரையில் ஜனாதிபதி தெளிவாக எடுத்துரைத்துள்ளார். இவை தொடர்பில் வடக்கு, கிழக்கில் உள்ள அரசியல் தலைவர்கள் குழப்பமடைய வேண்டாம். விகிதாசார முறையில் உள்ள சாதகமான பண்புகளை பாதுகாத்துதான் மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி கூறியுள்ளார்.

## இலங்கைப் பணிப் பெண்... (03ஆம் பக்கத் தொடர்)

பணியாற்றிய வீட்டு எஜமானர்களால் சிறைவைக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார். அதன் பின்னர் உள்விவகார அமைச்சுக்கு இது குறித்து அறிவித்த தூதரகம், இந்த சம்பவம் தொடர்பில் பூரண அறிக்கையொன்றை கையளிக்குமாறு கோரியிருந்தது. அதன்படி, உள்விவகார அமைச்சு பாதுகாப்பு படையை அவ்வீட்டுக்கு அனுப்பியதுடன், இலங்கை பணிப்பெண்ணை பார்வையிடுமாறு கோரியிருந்தது. இச்சம்பவம் தொடர்பில் கேட்டபோது, பணிப்பெண் கூறியதாவது,

முதுமையின் காரணமாக குவைத்திலிருந்து தான் நாடு திரும்பவேண்டுமென தனது எஜமானியிடம் கேட்டதாகவும், தனது கோரிக்கையை எஜமானி மறுத்ததுடன் தன்னை கொடுமைப்படுத்தினார் என்றும் கூறியுள்ளார்.

இதனையடுத்து, அப்பெண்ணின் தழும்புகள் மற்றும் தீக்காயங்களை பார்த்த பாதுகாப்பு பிரிவினர், இச்சம்பவம் குறித்த விசாரணைகளை பொலிஸாரிடம் ஒப்படைத்த நிலையில், வேண்டுமென்றே தீக்காயம் மற்றும் துன்புறுத்தல்களை மேற்கொண்டதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

பல்வேறு பொருட்களை சூடாக்கி தோற்பட்டை, மார்பு மற்றும் உடலின் ஏனைய பகுதிகளில் சூடு வைக்கும்போது, எஜமானியின் மூன்று பிள்ளைகளும் தன்னை கீழே தள்ளி கைகால்களை பிடித்துக் கொண்டனர் என்றும் இலங்கை பணிப் பெண் வாக்குமூலம் அளித்துள்ளார்.

## ஜனாதிபதி கொள்கைப்... (03ஆம் பக்கத் தொடர்)

ஜனாதிபதி பதவியேற்றதன் பின்னரும் இவ்வாறானதொரு கொள்கை பிரகடன உரையை பாராளுமன்றத்தில் முன்வைத்தார். ஆனால் கடந்த 08 மாதங்களில் இடம்பெற்ற விடயங்களுக்கும் அவர் தெரிவித்த விடயங்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருந்ததை மக்கள் தெரிந்துகொண்டனர்.

நாடு பாரிய பொருளாதார பிரச்சினைக்கு முகம்கொடுத்திருக்கின்றது. கொரோனா தொற்று காரணமாக அது இன்னும் பாரியளவில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. இவ்வாறான நிலையில் நாட்டின் பொருளாதார வீழ்ச்சியை கட்டுப்படுத்தவும் அதனால் பாதிக்கப்படும் மக்களை கடன் சுமையில் இருந்து மீட்கவும் அரசாங்கம் எடுக்கவுள்ள திட்டம் தொடர்பில் நாங்கள் அவதானமாக இருக்கின்றோம்.

அரசாங்கத்துக்கு தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்திருக்கின்றது. மக்களின் இந்த ஆணையை பயன்படுத்திக்கொண்டு அரசாங்கம் தேர்தல் காலத்தில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் இருந்து அரசாங்கத்துக்கு எந்தவகையிலும் விலகிச்செல்ல முடியாது.

## தேர்தல் சட்டத் திருத்தத்தின்... (03ஆம் பக்கத் தொடர்)

வரவேற்க வேண்டிய விடயமாகும். மூன்றில் இரண்டு பெரும்பான்மை வழங்கிய நாட்டு மக்களுக்கு ஜனாதிபதியின் கொள்கை பிரகடனத்தின்படி செயற்பட்டால் பொறுப்பான எதிர்கட்சி என்ற அடிப்படையில் அதனை வரவேற்போம்.

## ஊடக செயலாளராக... (03ஆம் பக்கத் தொடர்)

பதவியேற்றதன் பின்னர் அவரது அமைச்சுக்களின் ஒன்றான புத்தசாசன, கலாசார அலுவல்கள் மற்றும் மத விவகார அமைச்சின் ஊடக செயலாளராக மீண்டும் நேற்று முதல் மீளவும் நியமிக்கப்பட்டுள்ளார். வானொலி, தொலைக்காட்சி, அச்சு ஊடகம் மற்றும் இணைய சமூக வலைத்தள ஊடகங்களில் சுமார் 20 வருட அநுபவம் பெற்ற ஊடக சகல துறை ஆளுமை கொண்டவர் ஜெயரஞ்சன் யோகராஜ் .மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற சிறந்த மொழி பெயர்ப்பாளருமாவார்.

## 19 ஆவது திருத்தம்... (03ஆம் பக்கத் தொடர்)

ஆனால், 19ஆவது திருத்தச் சட்டத்தை அகற்ற விரும்புகின்றனர். புதிய அரசியலமைப்பையும் அறிமுகப்படுத்த உள்ளதாக கூறுகின்றனர். 19இல் உள்ள நல்ல விடயங்களையும் அகற்ற விருப்புகின்றனரா?. அல்லது அரசாங்கம் அவர்களுக்கு தவறானதென கருதும் விடயங்களை அகற்ற முற்படுகின்றனரா? என தெளிவில்லாதுள்ளது. இதற்கு ஒரு வரைபை முன்வைக்கும் போது தெளிவாக விலங்கிக்கொள்ள கூடியதாக இருக்கும்.

ஒரு சமுதாயத்தின் மீது அச்சுறுத்தலை ஏற்படுத்தி அவர்களை வைத்து ஒரு பூச்சாண்டி காட்டப்பட்டது. பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டும். அதே போன்று அதற்கு உதவியவர்களை சட்டத்தின் முன் கொண்டுவாருங்கள். மாறாக ஒரு சமுதாயத்தின் மீது இன வெறுப்பை தூண்டும் பறையை அடிக்க கூடாது. இதனை ஒரு முடிவுக்கு கொண்டுவர வேண்டும். நாமும் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவத்தில் ஒரு நீதியற்ற வகையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளோம். இந்த நாட்டில் ஜனநாயகத்துக்காக குரல்கொடுத்தவர்களே நாம். ஒரு நாடு ஒரு சட்டம் என்பதில் ஜனாதிபதி எதனை வலியுறுத்த விரும்புகிறார். பௌத்த மதத்திற்கு முன்னுரிமை அளிக்கும் அதேவேளை, இதனை மதங்களுக்கு சமவுரிமை அளிக்கப்படுமென ஜனாதிபதி கூறுகிறார்.

எமது நாடு பல் வகைத்தன்மை கொண்ட நாடு. பல இன, மொழிகள் உள்ளன. இவர்களுக்கென தனியான திருமணச் சட்டங்கள் மற்றும் சொந்த விவகாரங்களை பார்த்துக்கொள்ள நாம் வாய்ப்பளித்துள்ளோம். அவ்வாறான பல்வகைமையை அகற்றப்பட வேண்டும் என்பது ஆபத்தானது. அது சமச்சீரற்ற தன்மை. இது அனர்த்தமிகு நிலைக்கு கொண்டுசெல்லும். அவ்வாறான நிலை ஏற்பட கூடாதென எதிர்பார்க்கிறோம்.

## 'ஒரு நாடு ஒரு சட்டம்'... (03ஆம் பக்கத் தொடர்)

வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த அரசாங்கத்தின் பின்னாலும் அவ்வாறானவர்கள் உள்ளனர். பண்டாரநாயக்கவுக்கு ஏற்பட்ட நிலைமையை உணர்ந்துக் கொள்ள வேண்டும்.

நாம் உலகத்துடன் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும். மதில்களை அமைத்துக்கொண்டு பயணிக்க முடியாது. உலகத்துடன் ஒன்றிணைந்து பயணிக்கும் நிலைப்பாட்டுக்கு எதிரான கொள்கைகளை கொண்டவர்ளுடன் இணைந்து எவ்வாறு பயணிக்க போகின்றனர். ஜனாதிபதிக்கு இது பாரிய சவாலாகும்.

‘ஒரு நாடு ஒரு சட்டம்’ என ஜனாதிபதி கூறியுள்ளார். அது தொடர்பில் எமக்கு தெளிவில்லை. நாட்டில் பல இனக்குழுக்கள் உள்ளன. ஒவ்வொரு இனக் குழுக்களுக்கும் சம்பிரதாயபூர்வமான சில சட்டங்கள் உள்ளன. அவை தொடர்பில் எவ்வித கருத்துகளும் முன்வைக்கப்படவில்லை. நாம் இப்போது ‘ஒரு நாடு ஒரு சட்டம்’ என்ற அடிப்படையில்தான் வாழ்கின்றோம். இது தொடர்பில் அரசு ஒரு தெளிவான கருத்தை முன்னிலைப்படுத்த வேண்டும். அமைச்சரவையில் உள்ள 14 பேருக்கு நீதிமன்றங்களில் வழக்குகள் உள்ளன. அவ்வாறானவர்களை வைத்துக்கொண்டு எவ்வாறு தூய்மையான அரசியல் கலாசாரத்தை உருவாக்க முடியும். அரசாங்கம் கொண்டுவரும் நல்லவிடயங்களை நாம் ஆதரிப்போம். ஆனால், மக்கள் பக்கம் நின்று மக்களின் ஜனநாயகத்திற்காகவே எப்போதும் செயற்படுவோம் என்றார்.

## தற்காலத்துக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

இருப்பினும் மாணவர்களின் ஆர்வத்தை மேம்படுத்தும் வகையில் கல்வி கட்டமைப்பை மாற்றியமைக்க வேண்டிய தேவை காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். தொழில்வாய்ப்புக்களுக்கு ஏற்ற வகையில் பாட விதானங்கள் அமைய வேண்டிய விதம் பற்றிய கருத்துக்களை முன்வைக்குமாறு அமைச்சர், அதிபர்களைக் கேட்டுக் கொண்டதுடன். பாடவிதான விருத்தி தொடர்பில் நாடளாவிய ரீதியில் ஒரு விரிவான கருத்தாடலை ஏற்படுத்துவதாகவும் கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

# காட்டு யானைகளால் அல்லலுறும் வவுனியா மக்கள் தீர்வின்றி தொடரும் பிரச்சினை





**வவுனியா நிருபர்**

வவுனியா மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் காட்டு யானைகளின் அட்டகாசத்தால் பொதுமக்கள் மற்றும் தோட்ட செய்கையாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர்.

குறிப்பாக செட்டிகுளம், நீலியா மோட்டை, கனகராயன்குளம், புளியங்குளம், நெடுங்கேணி, காஞ்சூர மோட்டை, மெனிக்பாம் போன்ற பகுதிகளில் யானைகளின் தாக்கம் மிகவும் அதிகரித்த நிலையில் உள்ளது. இதனால் விவசாய, தோட்ட செய்கையாளர்கள் வெகுவாக பாதிப்பிற்குள்ளாகி வருகின்றனர்.

ஒவ்வொரு இரவும் வருகை தரும் யானைக் கூட்டங்கள், பயன்தரும் பயிர்களை நாசம் செய்வதுடன், இருப்பிடங்களையும் சேதப்படுத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். யானைகளின் தொல்லைகளிற்கு நிரந்தர தீர்வு காணுமாறு பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கை முன்வைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மாவட்டத்தின் பிரதான வீதிகளில் பகல் நேரங்களில் வந்துநிற்கும் யானைகளால் பயணிகளும் அசௌகரியங்களுக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

புளியங்குளம் நெடுங்கேணி பிரதான வீதி, மதவாச்சி மன்னார் வீதி, பூவசரங்குளம் செட்டிகுளம் வீதிகளில் மாலை வேளைகளில் யானைகள் வந்து நிற்கின்றமை அண்மைய நாட்களாக அதிகரித்து காணப்படுகின்றது.

இதனால் அவ்வீதி வழியாக போக்குவரத்து செய்கின்ற பயணிகள், வாகன சாரதிகள் எனப் பலரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருவதுடன். அச்சத்துடனேயே பயணிக்க வேண்டியுள்ள நிலை ஏற்பட்டுள்ளது.

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு டிஜிட்டல் சிசி ஸ்கேனர் இயந்திரம்

**யாழ்ப்பாணம் குறூப் நிருபர்**



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு 160 மில்லியன் ரூபா பெறுமதியான டிஜிட்டல் சிசி ஸ்கேனர் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் சி.யமுநானந்தா கருத்து தெரிவிக்கையில்,

யாழ். போதனா வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சினால் டிஜிட்டல் சிசி ஸ்கேனர் நேற்று (21) உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளது.

இது சுமார் 160 மில்லியன் ரூபா பெறுமதியான இயந்திரமாகும். இவ் இயந்திரம் இலங்கையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மட்டுமே தற்போது காணப்படுகின்றது.

அடுத்ததாக தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது

இதன் மூலம் நோயாளிகளில் சில நோய்களை இலகுவாக இனங்கண்டுகொள்ள கூடியதாக இருக்கும். குருதிக் கலன்களில், நாடி நாளங்களில் அடைப்பு ஏற்படும்போது இந்த கருவி மூலம் இலகுவாக கண்டறியக் கூடியதாக இருக்கும்.

இதற்குரிய தகுதி வாய்ந்த வைத்திய ஆளணியினரும் அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இதன் மூலம் சிறுநீரகத்திற்கு செல்லக்கூடிய கலங்களில் ஏற்படும் மாற்றம் மற்றும் மூளைக்கு செல்லும் கலங்கள், இதயத்தில் ஏற்படுகின்ற அடைப்புகளை இலகுவாக கண்டறியக் கூடியதாக இருக்கின்றது என்றார்.

# பொலிஸாரை தாக்கிய குற்றச்சாட்டில் இளைஞர் கைது

**யாழ்ப்பாணம் குறூப் நிருபர்**

பொலிஸாரை தாக்கிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் நேற்று காலை இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சிவில் உடையில் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கு வந்து முச்சக்கரவண்டி வாடகைக்கு கேட்டபோது, அதிகமான காசு சொல்லியிருக்கின்றார்கள்.

காசு அதிகம் என்ற காரணத்தினால், அவர் ஆட்டோ வேண்டாம் என கூறிவிட்டுச் சென்ற போது, அவரை கிண்டல் அடித்துள்ளனர். அதன்போது, ஏன் கிண்டல் அடிக்கின்றீர்கள் என கேட்டதற்கு, பொலிஸ் உத்தியோகத்தரை தாக்கியுள்ளனர். பொலிஸ் உத்தியோகத்தர் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதன் அடிப்படையில், தாக்குதல் மேற்கொண்ட பிரதான நபர் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபரை யாழ்ப்பாணம் நீதிமன்றில் ஆஜரப்படுத்தப்பட்டதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.





மடு கல்வி வலயத்திற்குட்பட்ட தேவன் பிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் ம.வி பாடசாலையில் அமைக்கப்பட்ட அதிபர் காரியாலய கட்டடம் நேற்று முன்தினம் காலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம் மன்னார் குறூப் நிருபர்)

எம்.பி பதவிக்காக எதையும் செய்யத் துணியும் தலைவர்கள்

# கொள்கை, உரிமை பற்றிப் பேசுவது நகைப்பானது

**யாழ்.விசேட நிருபர்**

பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்திற்காக எத்தகைய ஏமாற்று வேலைகளையும் செய்யக்கூடியவர்கள் தான் இன்று எமது தலைவர்களாகவுள்ளார்கள். இவர்கள் தான் கொள்கை, உரிமைக்காக போராடுபவர்களா? இவ்வாறு கேள்வியேழுப்பிய சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் தனது கொள்கைக்காக பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை ஏற்காதவர்தான் மாமனிதர் சிவமகாராசா எனத் தெரிவித்தார்

கூட்டுறவாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாமனிதர் சின்னத்தம்பி சிவமகாராசாவின் நினைவு தினம் நேற்று முன்தினம் தெல்லிப்பளை கூட்டுறவு சங்க மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சட்டத்தரணி வி.மணிவண்ணன் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது,

தெல்லிப்பளையில் மாமனிதர் சிவமகாராசா, தங்கம்மா அப்பாக்குட்டி போன்றவர்கள் மக்களுக்காகவே வாழ்ந்தவர்கள்.

சிவமகாராசா மக்களின் கொள்கை, இலட்சியத்திற்காக இறுதி வரை உழைத்தவர். கூட்டுறவாளனாக, பாராளுமன்ற உறுப்பினராக நமது ஈழநாடு பத்திரிகையின் முகாமைத்துவப் பணிப்பாளர் என பல பண்புகளை திறமைகளை கொண்ட அவர், முதல் முறையாக பாராளுமன்றம் தெரிவானபோது மக்களின் விடுதலைக்காக தனிநாடு கேட்டு போராட வேண்டும் என்றால் 6 ஆவது திருத்த சட்டத்தின்கீழ் சத்தியம் செய்து போராடமுடியாது என்பதற்காக தனது பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை இழந்தவர்.

இதன் மூலம் தனது கொள்கை இலட்சியம் என்பவற்றில் எத்தகைய உறுதியுடன் இருந்தார் என்பது உறுதியாகின்றது. அதன் பின்னர் போட்டியிட்டபோது மக்கள் தெரிவு கிடைக்கவில்லை. பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியாக போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டார். தொடர்ந்தும் மக்களுக்காகவே சேவை செய்து அதற்காகவே அவரது உயிரும் பறிக்கப்பட்டது..

மாமனிதர் சிவமகாராசா தனது கொள்கையில் உறுதியுடன் இருந்தமையால்தான் தனது முதல் தெரிவின் போது பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெறவில்லை. ஆனால் இன்றுள்ள எமது தலைவர்கள் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைப்பதற்காக ஏமாற்றுவேலை செய்யக்கூடிய நிலையிலேயே உள்ளனர் என்றார்.

# இந்திய அரசினால் முல்லைத்தீவில் பண்பாட்டு மண்டபம், நூலகம்

**முல்லைத்தீவு குறூப் நிருபர்**

முல்லைத்தீவு முள்ளியவளையில் பண்பாட்டு மண்டபம், முல்லைத்தீவு நகரில் நூலகம் ஒன்றும் இந்திய அரசினால் அமைக்கப்படவுள்ளதாக கரைதுறைபற்று பிரதேச சபையின் தவிசாளர் க.தவராசா தெரிவித்தார். நேற்று முன்தினம் கரைதுறைபற்று பிரதேச சபையின் 28ஆவது அமர்வு நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அக் கூட்டத்தில் உறுப்பினர் பலர் உரையாற்றும் போது தெரிவித்த கருத்துக்கள்,...

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினர் பிரதேச சபைக்கு சொந்தமான வீதிகள் பலவற்றினை சேதமாக்கிவிட்டு இதுவரை மக்கள் பாவனைக்கு உகந்த முறையில் செப்பனிட்டு தராமையினால் மக்கள் பல அசௌகரியங்களினை சந்திப்பதால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச சபையின் உறுப்பினர் த.அமலன் வேண்டுகோள் விடுத்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. இதற்கு தவிசாளர் உடனே சட்ட நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யும்படி செயலாளரிற்கு உத்தரவிட்டார்.

கரைதுறைப்பற்று பிரதேச சபையினுடைய எல்லைகள் சிலவற்றில் உட்புகுந்து புதுக்குடியிருப்பு பிரதேச சபை தமது எல்லை பெயர்ப்பலகையினை நாட்டியுள்ளமையினை பல தடவைகள் சுட்டிக்காட்டியும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதனை சுட்டிக்காட்டி புதுக்குடியிருப்பு பிரதேச சபையினால் இதற்கு முன்னர் சில வீதிகளில் சரியான இடங்களில் நாட்டப்பட்ட பெயர்ப் பலகை இருக்கும் போதே எமது பிரதேசத்திற்குள் பெயர்ப்பலகைகள் நாட்டப்பட்டுள்ளன என சுட்டிக்காட்டப்பட்டன.

முல்லைத்தீவு நகரிலே அமைந்துள்ள பூங்கா மற்றும் கடற்கரை ஓரங்களில் கால்நடைகளின் தொல்லை அதிகரிப்பதால் அவ்விடங்களிற்கு வருகின்ற மக்கள் பல சிரமங்களினை எதிர் நோக்குவதாகவும் சபை அமர்வில் ஆராயப்பட்டன.

# அம்பலப்பெருமாள் குளத்தின் முதன்மை வீதியின் அவல நிலை

**முல்லைத்தீவு குறூப் நிருபர்**



1968ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட முல்லைத்தீவு அம்பலப்பெருமாள் குளத்தின் முதன்மை வீதி சேதமடைந்து இன்றும் புனரமைக்கப்படவில்லையென மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

துணுக்காய், அக்கராயன் பகுதிகளில் இருந்து இக்கிராமத்திற்கு வரும் போது வீதி குண்டும் குழியுமாக காணப்படுகிறது. நெற்பயிர்ச் செய்கையினை நம்பி இக்கிராமத்தில் 110 குடும்பங்கள் வாழ்கின்றன. காலபோகம், சிறுபோகத்தில் அறுவடை செய்யப்படும் நெற்களை சந்தைகளுக்குக் கொண்டு செல்வதில் விவசாயிகள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். கிராமத்திற்கு வரும் தனியார் வியாபாரிகள் மிகக் குறைந்த விலையில் நெல்லினை ஆண்டுதோறும் கொள்வனவு செய்வதினால் விவசாயிகள் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர். இந்நிலையில் குறித்த வீதியினைப் புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கிராமத்தின் வீதி புனரமைக்கப்படாததன் காரணமாக பஸ் சேவைகள் இடம் பெறுவதில்லை. கிராமத்தின் மாணவர்கள் அக்கராயன் மகா வித்தியாலயம், மல்லாவி மத்திய கல்லூரிக்கு சென்று வருவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இவற்றை கருத்தில் கொண்டு இவ் வீதியை புனரமைக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுக்கினறனர்.

# மயிலிட்டியில் வெற்றுக் காணிக்குள் வெடி பொருட்கள் மீட்பு

**பருத்தித்துறை குறூப் நிருபர்**

யாழ்ப்பாணம் மயிலிட்டிப் பகுதியில் வெற்றுக் காணிக்குள் இருந்து 6 கைக்குண்டுகள் உட்பட வெடிபொருட்களை நேற்று பலாலிப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இந்த தொடர்பில் தெரிய வருவதாவது, மயிலிட்டிப் பகுதியில் உள்ள வெற்றுக் காணிக்குள் வெடி பொருட்கள் இருப்பதை அப்பகுதி மக்கள் கண்டுள்ளனர். உடனடியாக அப்பகுதி கிராம சேவையாளருக்கு தகவலை வழங்கியுள்ளனர். அவர் பலாலி பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.



# திருட்டுச்சம்பங்களுடன் தொடர்புடைய இரண்டு பேர் கைது; பொருட்களும் மீட்பு

**வவுனியா நிருபர்**

வவுனியாவில் பல்வேறு திருட்டுச் சம்பங்களுடன் தொடர்புடைய இருவரை வவுனியா தலைமை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிசார் கைது செய்துள்ளதுடன் அவர்களிடமிருந்து திருடப்பட்ட ஆடுகள் மற்றும் மோட்டர்களை மீட்டுள்ளதாக தெரிவித்தனர். சமயபுரம் பகுதியில் நெல் அரைக்கும் ஆலை ஒன்றில் 75 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நான்கு மோட்டர்களை திருடிய குற்றச்சாட்டு மற்றும் காத்தார்சின்னக்குளம், ஆச்சிபுரம் பகுதிகளில் ஆடுகளை திருடிய குற்றச்சாட்டுகளில் தொடர்புடைய இருவரே நேற்று கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடமிருந்து திருடப்பட்ட மோட்டர்களும், மூன்று ஆடுகளும் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

# கொழும்புத்துறை பகுதியில் வாள்வெட்டு; இளைஞர் ஒருவர் கைது

கொழும்புத்துறை பகுதியில் நேற்று முன்தினம் மதியம் இடம் பெற்ற வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் நாவாந்துறை பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கொழும்புத்துறை பகுதியில் நேற்று முன்தினம் மதியம் இனந்தெரியாத நபர்களால் ஒருவர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் படுகாயமடைந்த இளைஞன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந் நிலையில் இந்த சம்பவத்துடன் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தில் நாவாந்துறை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞன் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரதேச வைத்தியசாலையாக

# அன்னமலை கிராமிய வைத்தியசாலை தரமுயர்த்தல்

புளியந்தீவு குறூப் நிருபர்



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவின் கீழ் இயங்கும் அன்னமலை கிராமிய வைத்தியசாலை, அண்மையில் பிராந்திய வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டிருப்பதாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் (20)தெரிவித்தார்

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

இவ்வைத்திய சாலை அரை நூற்றாண்டு கால வரலாற்றைக் கொண்டது. இப்போதுதான் அது ஒரு தரவுயர்வைக் கண்டிருக்கிறது.

இதேபோன்று மல்வத்தை வைத்திய சாலையும் கிராமிய வைத்தியசாலையாக தரமுயரத்தப்பட்டுள்ளது. இனி அவை இரண்டும் படிப்படியாக உயர்வைக்காணும்.

இவை இரண்டு வைத்தியசாலைகளும், வைத்திய சேவை வழங்கிவருகின்ற பிரதேசங்கள் பிரயாண வசதி, வாய்ப்பற்ற கஸ்டப் பிரதேசங்களாகும். அவ்வாறான பிரதேசங்களின் மத்தியில் வைத்திய சேவை வழங்கி வருகின்ற வைத்தியசாலைகளிரண்டும், தரமுயர்த்தப்பட்டிருப்பதை பலரும் வரவேற்கிறார்கள்.

காலக்கிரமத்தில் அவை வழங்கும் வைத்திய சேவைகள் இன்னும் விரிவாக்கப்படும் என்றார்.

# திருமலை மொத்த மீன் சந்தையை நகரசபைக்கு கீழ் கொண்டுவர தீர்மானம்

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை மொத்த மீன் சந்தையை திருகோணமலை நகரசபைக்கு கீழ் கொண்டுவருவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதுபற்றி தெரியவருவதாவது,

2014ம் ஆண்டு கடற்தொழில் பிரதி அமைச்சர் மூலமாக திருகோணமலை நகரசபையிடம் இருந்து எடுக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை நேர்த்தியாக நகரசபைக்கு வரிப்பணம் காட்டப்படுவதில்லை. இதனால் நகரத்தில் வாழும் மக்களுக்கு செய்யப்படவேண்டிய அபிவிருத்திகள் மந்தமான நிலையில் நடைபெறுகின்றது. சட்டப்படி சந்தைகள் அனைத்தும் உள்ளூராட்சி சபைகளுக்கு கீழ் தான் இயங்க வேண்டும். திருகோணமலை மொத்த மீன்சந்தையின் வருமானம் பெருந்தொகையாக இருந்தும் அது நகரசபையின் கீழ் இல்லாமல் இருப்பதால் நகர மக்களுக்கு இது பாரிய இழப்பு என்றார் .

2014ம் ஆண்டு பழைய கட்டடத்தை உடைத்து விட்டு புதிய கட்டிடம் கட்டப்பட்டது. இதற்கான நிதி முதலீட்டு சபையினால் கடற்தொழில் அமைச்சின் ஊடக வழங்கப்பட்டது. அதனால் மீன்பிடி அமைச்சு மொத்த மீன் சந்தை தொடர்பில் நகர சபையுடன் தன்னிச்சையாக ஒரு உடன்படிக்கையை கொண்டுவந்தது. 60% கடற்தொழில் அமைச்சுக்கும், 40% நகரசபைக்குமாக மறைமுக உடன்படிக்கை செய்யப்பட்டது. இதற்கான ஆவணங்கள் ஏதும் நகரசபை நிர்வாகத்திடம் இல்லையென பதிலும் வருகிறது. இவ் உடன்படிக்கையானது அன்று உள்ள கால சூழ்நிலை காரணமாக நகரபிதாவாக இருந்தாலும், நிர்வாகமாக இருந்தாலும் அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது இன்றும் தொடர்வதால் இது நகரமக்களுக்கு செய்யும் துரோகமாக தென்படுகிறது. தற்போது உள்ள சபை உறுப்பினரான சிவகுமார் (சத்தியன்) இது சம்பந்தமாக ஒவ்வொரு சபை கூட்டத்திலும் மொத்த மீன் சந்தையை நகரசபைக்கு கீழ் கொண்டு வரவேண்டும் என்றும் கட்டப்படாத மீதி வரிப்பணம் கட்டப்பட வேண்டும் என்றும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். இருந்தபோதிலும் அதற்கான எந்தவிதமான சாதகமான பதிலும் இதுவரை கிடைக்கவில்லை. தற்போது உள்ள நகர பிதாவும் முடிந்தளவு முயற்சி செய்தும் பலன் கிடைக்கவில்லை. இதனால் 18.8.20 அன்று நகரசபை அமர்வில் 2014ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் கடந்தகால மீதி வரிப்பணம் முழுவதும் நகரசபைக்கு செலுத்தப்பட வேண்டும் என்றும் எதிர்வரும் 2021ம் ஆண்டு புதிதாக குத்தகைக்கு வழங்கப்படுமென சிவகுமாரால் (சத்யன்) கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த மொத்த மீன்சந்தை புதிதாக குத்தகைக்கு வழங்கப்படும் பட்சத்தில், நகரசபைக்கு கூடிய வருமானம் கிடைக்கப்பெற்று எதிர்வரும் காலங்களில் அதிகளவான அபிவிருத்திகளை செய்யமுடியுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# வாழைச்சேனையில் கவனயீர்ப்புப் போராட்டம்

பாசிக்குடா நிருபர்




கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேசத்தில் பல்வேறுபட்ட இடங்களில் நிலக் கீழ் நீர்மட்டம் குறைவடைகிறது. இதனால் சமூக நீர் வழங்கல் பிரச்சினை ஏற்படுவதாகவும் இதற்கு தீர்வு கோரி பிரதேச மக்களினால் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் வாழைச்சேனை பிரதேச சபைக்கு முன்பாக மேற்கொள்ளப்பட்டது.

சோரம் போகாதே பாலைவனம் ஆக்காதே, உறிஞ்சாதே உறிஞ்சாதே நிலத்தடி நீரை உறிஞ்சாதே, ஐஸ் ஆலையை மூடு. வாழ்வதா? நீரின்றி சாவதா? நீரை விற்று ஆதாயம் தேடாதே. தவிசாளரே தயக்கம் ஏன்? குடிப்பதற்கு நீரில்லை என்பன போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை கையில் ஏந்தியவாறு போராட்டத்தில் கலந்து கொண்டோர் கோஷங்களை எழுப்பினார்கள்.

வாழைச்சேனை புதுக்குடியிருப்பு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்திற்கு முன்பாக ஆரம்பமான கவனயீர்ப்பு பேரணி வாழைச்சேனை பிரதான வீதி வழியாக கோறளைப்பற்று பிரதேச சபையை சென்றடைந்தது. அங்கு தமது கோரிக்கை அடங்கிய மகஜரை தவிசாளர் திருமதி ஷோபா ஜெயரஞ்த்திடம் இவர்கள் கையளித்தனர்.

# கொரோனா வைரஸ் பரிசோதனை



கொரோனா வைரஸ் சமூக மட்டத்தில் பரம்பலடைவதை தடுப்பதற்காக பரிசோதனைகள் நாடு பூராகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கமைய அம்பாறை மாவட்டத்தில் நேற்று (21) கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜி.சுகுணனின் வழிகாட்டல்களுக்கமைய நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் 10 பேருக்கு கொரோனா வைரஸ் தொடர்பில் பிசிஆர் (PCR )பரிசோதனை மாதிரிகள் செயலக வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டன.

இதன் போது நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன் உதவிப் பிரதேச செயலாளர் என்.நவனீதராஜா நாவிதன்வெளி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் மற்றும் பொது சுகாதார அதிகாரிகள் சுகாதார ஊழியர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் பங்குபற்றினர்.

# மட்டக்களப்பில் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கை



புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை மற்றும் பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் போதைப் பொருள் அற்ற சமூகம் சௌபாக்கிய தேசம் எனும் தொனிப் பொருளில் அரச உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கும் தேசிய வேலைத்திட்டம் நாடுபூராகவும் இடம்பெற்று வருகின்றது.

இதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கடமைபுரியும் சமுதாய சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய உத்தியோகத்தர்களையும் இணைத்து போதைப் பொருள் தடுப்பு, சிகிச்சை மற்றும் கட்டுப்பாடு நடவடிக்கைகள் தொடர்பான மூன்று நாள் பயிற்சிகள் வழங்கி வைக்கப்பட்டன. இப்பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ்கள் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. கலாமதி பத்மராஜா தலைமையில் பயிற்சியின் இறுதித் தினமாகிய (19) மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் வைத்து வழங்கி வைக்கபட்டது.

இதன்போது அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா கருத்து வெளியிடுகையில் போதைப் பொருள் பாவனையிலிருந்து சமூகத்தை மீட்டெடுப்பது ஒவ்வொருவரினதும் கடமையாகும். போதைப் பொருள் பாவனையில் இருந்து சமூகத்தைப் பாதுகாப்பது எவ்வாறு என திட்டமிடவேண்டும். போதைப் பொருள் பாவனை மற்றும் பரிமாற்றங்கள் தொடர்பாக வெளிவராமலிருக்கும் தகவல்களை கண்டுபிடிக்க வேண்டும். அதனைக் கட்டுப்படுத்த குழுக்களாக இணைந்து செயற்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

மேலும் இப்பயிற்சி நெறியில் இவ்வுத்தியோகத்தர்களுக்கு போதைப் பொருள் பாவனையினைத் தடுத்தல், சிகிச்சையளித்தல் மற்றும் கட்டுப்பாடு நடவடிக்கைகளைமேற்கொள்ளல் தொடர்பான திறன்சார்ந்த பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வின்போது மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுதர்சினி ஸ்ரீகாந்த், உதவி மாவட்ட செயலாளர் ஏ. நவீஸ்வரன், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் புனர்வாழ்வு சிகிச்சை நிலைய உதவிக் கல்வி உத்தியோகத்தர் பீ.எம். றசீட், உதவி வெளிக்கள உத்தியோகத்தர் ஏ. எட்வின் றொஜர், உதவி உளவள ஆலோசகர் ஜீ. விஜயதர்சன் மற்றும் பயிற்சியினைப் பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

## துவிச்சக்கர வண்டிகளுக்கு அனுமதிப்பத்திரம்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடி நகர சபையினால் துவிச்சக்கர வண்டிகளுக்கு 2020ம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கை நேற்று (21.08.2020) ஆரம்பிக்கப்பட்டது.

காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.அஸ்பரின் ஆலோசனையின் பேரில் நகர சபையின் வருமானம் ஈட்டும் பகுதி உத்தியோகத்தர்களினால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. புதிய காத்தான்குடி சந்தைப் பகுதி மற்றும் புதிய பதுறியா சந்தி போன்ற இடங்களில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

துவிச்சக்கர வண்டிகளில் செல்வோர் நிறுத்தப்பட்டு அவர்களின் துவிச்சக்கர வண்டிகளுக்கு 2020ம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது. இதற்காக ஒரு துவிச்சக்கர வண்டிக்கு 20 ரூபா அறிவிடப்பட்டது. கொரோனா வைரஸ் பரவல் அச்சம் காரணமாக தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்லடி பொதுச் சந்தையின் நவீன மயப்படுத்தப்பட்ட இறைச்சிக் கடைகள் மக்கள் பாவனைக்கு கையளிப்பு

தாமரைக் கேணி புளியந்தீவு குறூப் நிருபர்

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட கல்லடி பொதுச் சந்தையின் நவீனமயப்படுத்தப்பட்ட இறைச்சிக் கடைத் தொகுதி மக்களின் பாவனைக்காக (20.08.2020) கையளிக்கப்பட்டது. இதனை புனிதமாகவும், நேர்த்தியாகவும். பேணிப்பாதுகாப்பது மக்களினதும், நுகர்வாளர்களினதும் பொறுப்பாகுமென மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்தார்.

சுகாதார அதிகாரிகளின் வழிகாட்டலின் கீழ் கழிவகற்றல் வசதிகளுடன் நவீனமுறையில் வடிவமைக்கப்பட்ட இவ் ஆட்டிறைச்சி மற்றும் கோழி இறைச்சிக் கடைகளை உள்ளடக்கிய கட்டடத்தினை மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு திறந்து வைத்தார். நிகழ்வுக்கு மாநகர ஆணையாளர் கா.சித்திரவேல் தலைமை தாங்கினார். அந் நிகழ்வில் கலந்து கொண்டு பேசும்போதே மாநகர முதல்வர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், கிழக்கு மாகாண சபையின் குறுங்கால வேலைத்திட்டத்தின் ஊடாக ஒதுக்கப்பட்ட 1.1 மில்லியன் ரூபாய் நிதியில் இவ் இறைச்சிக் கடைத் தொகுதி புனர் நிர்மாணம் பெற்றுள்ளது.

காலப்போக்கில் இக்கட்டடத்தொகுதி நவீன வசதிகளுடன் மேலும் விரிவாக்கப்படும் என்றார்.



# வாழைச்சேனை விபத்தில் 16 வயது இளைஞன் உயிரிழப்பு





பாசிக்குடா நிருபர்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள வாகநேரியில் நேற்று வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தொன்றில் 16 வயதுடைய இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிசார் தெரிவித்தனர்.

பிரதேசத்தில் இடம்பெற்றுவரும் ஆலய உற்சவத்தில் கலந்து கொண்டு தமது வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும்போது வேக கட்டுப்பாட்டினை மீறி பாதையை விட்டு விலகி விபத்திற்குள்ளானதால் இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவித்தனர்.சுற்றுலா விடுதி வாகநேரியைச் சேர்ந்த நா. ததுஷன் வயது (16) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. குறித்த விபத்து தொடர்பாக வாழைச்சேனை பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.






மத்தியமாகாண ஆணழகர் போட்டிகளில் சுமார் நான்கு ஆண்டுகளுக்கு பின்னர் நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று தமிழ் இளைஞர்கள் பதக்கங்களை பெற்றுள்ளனர் . நானுஓயாவை சேர்ந்த சங்கர்கனேஸ் 75 கிலோ எடை பிரிவில் முதலாம் இடத்தை பெற்று தங்கப்பதக்கத்தை பெற்றுக்கொண்டுள்ளார். அதேபோன்று கொட்டகலையைச் சேர்ந்த சசிதரன் அவர்கள் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளி பதக்கத்தையும் பெற்றுக்கொண்டுள்ளார். மேலும் நானுஓயாவை சேர்ந்த ச.சசிதரன் முதல் முறையாக இந்த போட்டிகளில் பங்குபற்றி 70 கிலோ எடை பிரிவில் மூன்றாம் இடத்தைபெற்று வெள்ளி பதக்கத்தை சுவீகரித்துக்கொண்டார்.

இரத்தினபுரி மாவட்ட

## வயல் நிலங்களுக்கு உர விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிப்பு



**( பலாங்கொடை தினகரன் நிருபர்)**

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு அரசாங்கத்தின் மூலம் வழங்கப்படும் உர மானிய வேலைத்திட்டத்தின் கீழ் வயல் நிலங்களுக்கு உரம் விநியோகிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட விவசாய அபிவிருத்தி பிரதி ஆணையாளர் குமாரி கமஅதிகே தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்ட விவசாய கமிட்டி கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

2020 ஆம் ஆண்டில் ஜூலை மாதம் வரை இரத்தினபுரி மாவட்டத்தில் வயல் நிலங்களில் விவசாயத்தை மேற்கொண்டுள்ள 31944 விவசாயிகளின் நலன் கருதி 31,563.61 ஏக்கர் வயல் நிலங்களுக்கு உரம் விநியோகிக்கப்பட்டுள்ளது.

யூரியா மெட்ரிக் தொன்1,981.34 ம் டி.எஸ்.பி. மெட்ரிக் தொன்882.27 ம் என்ற அடிப்படையில் உரவிநியோகம் இடம்பெற்றுள்ளது.

சௌபாக்கிய வீட்டு தோட்ட அபிவிருத்தி தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் இரத்தினபுரி மாவட்டத்தில் 467 பிரிவுகளில் சௌபாக்கிய வீட்டுத்தோட்ட உற்பத்தி அபிவிருத்தி தேசிய வேலைத்திட்டம் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதனடிப்படையில் 467 பிரிவுகளில் சௌபாக்கிய வீட்டு தோட்டங்கள் 84,154 இயங்கி வருவதாகவும் அவர் மேலும் இக்கூட்டத்தில் தெரிவித்தார்.

# அயகம பிரதேசத்திற்கு ஒரு வருடத்துக்குள் குடிநீர் வசதியை ஏற்படுத்தி கொடுக்க நடவடிக்கை

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**



இரத்தினபுரி மாவட்டத்தின் அயகம பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் ஒரு வருட காலத்தினுள் முழுமையான குடிநீர் திட்டத்தை நிறைவு செய்து தருவதாக நீர்வளத்துறை அமைச்சரும் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார உறுதியளித்தார்.

அயகமவில் சரத் முத்தெட்டுவேகம சிலைக்கு அண்மையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தகவல் தருகையில் அயகம நகரின் ஊடாக 3 ஆறுகள் ஊடறுத்து செல்கின்ற போதிலும் இப்பிரதேச மக்கள் நீண்டகாலமாக குடிநீருக்காகக் கஷ்டப்படுகின்றனர். இப்பிரதேசத்தில் வாழும் மக்கள் இதுவரை காலமும் நீர்நிலைகளில் இருந்தும், தற்காலிக குடிநீர் திட்டங்கள் மூலமும் நீரைப் பெற்று வந்துள்ள போதிலும் இவை முறையாக இயங்காமையால் பல்வேறு அசௌகரியங்களை அனுபவித்தனர்.

இந்நிலைமை மிகவும் பாரதூரமாகியுள்ளது. என்பதை அறிந்தேன். எனவே ஒரு வருட கால முடிவுக்குள் இப்பிரதேச மக்களின் நலனுக்காக ஒரு முறையான குடிநீர்த் திட்டத்தை வழங்க உறுதியளிக்கின்றேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# சிங்காரவத்தைக்கு செல்லும் பிரதான வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட சாமிமலை ஓல்டன் தோட்ட சிங்காரவத்தைக்கு செல்லும் பிரதான வீதி கடந்த 20 வருட காலமாக செயற்படவில்லை.

கடந்த 8 ஆண்டு காலப்பகுதியில் அவ்வப்போது ஆட்சியிலிருந்த அமைச்சர்கள் பலமுறை கல் நாட்டு விழா செய்துள்ளனர்.

அவ்வாறு கல்நாட்டு விழாவிற்கு செலவான தொகையை கொண்டு 200 மீற்றர் தூரம் கொங்கிறீட் செய்து இருக்கலாம். மேலும், ஒவ்வொரு தடவையும் தங்களது புகைப்படங்கள் அடங்கிய பதாதைகள் வைத்து அதற்கான செலவு தொகையையும் பதிவிட்டுள்ளனர். வீதி ஆரம்பிக்கும் இடத்தில் இருந்து 100 மீற்றர் தூரம் வரை செப்பனிட்டமையும் அதன் பின்னர் கைவிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் அவ்வீதியில் பாரிய குண்டும் குழியுமாக உள்ளதால் அங்கு வாழும் 300ற்கும் மேற்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் பாடசாலை மாணவர்கள், நோயாளர்கள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்கள் பாரிய அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக புகார் தெரிவிக்கின்றனர். சம்பந்தப்பட்டோர் ஒதுக்கிய நிதியின் ஊடாக அந்த வீதியை செப்பனிட வழி செய்யுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் சோளச் செய்கை வீழ்ச்சியடைந்தது

**இராஜாங்க அமைச்சர் டி.பி.ஹேரத்**

நல்லாட்சி அரசாங்கத்தின் நான்கரை ஆண்டுகால ஆட்சி காலத்தில், இந்நாட்டில் சோளப் பயிர்ச் செய்கை வீழ்ச்சியடைந்துவிட்டதாகவும் சோளச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் இல்லாமற் செய்யப்பட்டுள்ளதாகவும் கால்நடை வளங்கள், பண்ணை மேம்பாடு பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் டி.பி.ஹேரத் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சின் கடமைகளைப் பொறுப்பேற்கும் நிகழ்வு, வாரியப்பொலவில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்துரைத்த அவர், உள்ளூர் உற்பத்திகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யாமல், உள்ளூர் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிகாலத்திலேயே, நாட்டில் சோள உற்பத்தி, சக்திமிக்கதாகக் கட்டி எழுப்பப்பட்டது என்றும் இலங்கையில் இருந்து சோளத்தை தாய்லாந்துக்கு ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். எனினும் கடந்த நான்கரை வருட ஆட்சியில் சோள உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது.

எனவே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சிறந்த வழிகாட்டலுடன் சோளப் பயிர்ச் செய்கை மீண்டும் சிறந்தமுறையில் கட்டி எழுப்பப்படும் என்றும் வெளி நாடுகளுக்கு சோளம் ஏற்றுமதி செய்வதைத் தவிர்த்து இலங்கையில் முட்டை உற்பத்தியாளர்கள் பயன்படுத்தும் கோதுமை உற்பத்திகளை இலங்கையிலேயே மேற்கொள்ள முடியும். சோளப் பயிர்ச் செய்கையை மேம்படுத்துவதற்குத் தேவையான வரப்பிரசாதங்களை விவசாயிகளுக்குப் பெற்றுப்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன், இலங்கையில் முட்டை உண்போரின் வீதம் அதிகரித்துள்ளதாகவும் நாளொன்றுக்கு 80 இலட்சத்தில் இருந்து 90 இலட்சம் வரையிலான முட்டைகள் நுகர்வுக்காகப் பயன்படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஆணழகன் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் பாராட்டு

மத்தியமாகாண ஆணழகன் போட்டிகளில் பதக்கங்களை பெற்ற நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று இளைஞர்களையும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் பாராட்டி வாழ்த்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

மத்தியமாகாண ஆணழகன் போட்டிகளில் பதக்கங்களை பெற்ற நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று இளைஞர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு இவர்களுக்கு முன்மாதிரியாக இருந்து தேவையான பயிற்சிகளை அளித்த மாதவன் ராஜ்குமாருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.



நானுஓயாவைச் சேர்ந்த சங்கர்கனேஸ் 75 கிலோ எடை பிரிவில் முதலாம் இடத்தை பெற்று தங்கப்பதக்கத்தை பெற்றுக்கொண்டுள்ளார். அதேபோன்று கொட்டகலையை சேர்ந்த திரு சசிதரன் அவர்கள் இரண்டாம் இடத்தை பெற்று வெள்ளி பதக்கத்தையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

மேலும் நானுஓயாவை சேர்ந்த ச.சசிதரன் முதல் முறையாக இந்த போட்டிகளில் பங்குபற்றி 70 கிலோ எடை பிரிவில் மூன்றாம் இடத்தைபெற்று வெள்ளி பதக்கத்தை சுவீகரித்துக்கொண்டார். 2019ஆம் ஆண்டு ராஜ்குமார் அவர்களுக்கு மலையக சிறகுகள் அமைப்பினூடாக உதவிகளை வழங்கியபோது மேலும் மலையகத்தில் உங்களை போன்ற பல வீரர்களை உருவாக்க வேண்டும் எனும் கோரிக்கை மலையக சிறகுகள் அமைப்பின் மூலம் வைக்கப்பட்டது. அன்று கேட்டுக்கொண்ட விடயங்களை இன்று செயல் வடிவில் காட்டிய உங்களுக்கு நன்றிகள் மேலும் இதே போன்று சிறப்பான இளைஞர்களை உருவாக்க வாழ்த்துகின்றேன் என குறிப்பிட்டுள்ளார்.

# நிதி செயற்பாடுகளை முறையாக கடைப்பிடிக்க வேண்டும்

**சப்ரகமுவ மாகாண ஆளுநர்**



சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள அனைத்து அரச நிறுவனங்களிலும் நிதி செயற்பாடுகளை முறையாக கடைப்பிடிக்க வேண்டும் என்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்தார். சப்ரகமுவ மாகாண அரச நிறுவனங்களின் கணக்காளர்கள் மற்றும் நிதி விடயத்திற்கு பொறுப்பானவர்களுக்கான செயலமர்வு ஒன்று நேற்றுமுன்தினம் (20) இரத்தினபுரி மெனரிபிட்டிய கல்வி அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து மாகாண ஆளுநர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

அரச நிறுவனங்களில் கணக்காளர்கள் நிதி ஆலோசகர்களாக செயற்பட வேண்டும். அத்தோடு நாட்டின் அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் முழுமையான ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வழங்க வேண்டும். அரச சொத்துக்களை பாதுகாக்க வேண்டும். இதற்கு தேவையான ஆலோசனைகளை பெற்று கணக்காளர் பிரிவு அதிகாரிகள் செயல்பட வேண்டும்.

சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள தணிக்கை மற்றும் பொது தணிக்கைத் துறைக்கு நாங்கள் எங்களது முழு ஆதரவையும் பெற்று கொடுக்க வேண்டும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மேற்கொண்டு வரும் செழிப்பின் பார்வையில் நாட்டை சிறந்த முறையில் கட்டியெழுப்ப நாம் அனைவரும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

இதன்போது சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் ரஞ்ஜனி ஜயகொடி, நிதி விடயத்திற்கு பொறுப்பான பிரதி பிரதான செயலாளர் பிரியத்தா விஜேசுந்தர உட்பட அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# ஸ்ரீ. சு கட்சி பிரதேசசபை உறுப்பினர்கள் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு

**( பலாங்கொடை தினகரன் நிருபர்)**

பலாங்கொடை பிரதேசசபையின் எதிர்க் கட்சியுடன்(ஐக்கிய தேசியக் கட்சி) கூட்டாக இணைந்து செயற்பட்டு வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உபதலைவர் நிஹால் விஜயானந்த உட்பட மூன்று உறுப்பினர்கள் கடந்த இருபதாம் திகதி ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவு தெரிவிக்கும் வகையில் அக்கட்சியுடன் ஒன்று சேர்ந்தனர். பலாங்கொடை பிரதேசசபையின் தலைவர் உட்பட பலாங்கொடை பிரதேச சபையின் உறுப்பினர்களின் தொகை 35.

கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலின்போது பலாங்கொடை பிரதேச சபைக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு 17 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ஐக்கிய தேசியக் கட்சிக்கு 11 ஆசனங்களும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு 4 ஆசனங்களும் ஸ்ரீலங்கா பிரகதிசீலி கட்சிக்கு இரண்டு ஆசனங்களும் மக்கள் விடுதலை முன்னணிக்கு ஒரு ஆசனமும் கிடைத்தன.

அதற்கமைய எதிர்க் கட்சியின் உறுப்பினர்களின் தொகை பதினெட்டாகும்.

பிறகு தலைவர் உபதலைவர் தெரிவின் போது வாக்கெடுப்புக்கு விட்ட சமயம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிட்ட தலைவர் எம்.எம். சுனில் பேமசிரிக்கு 17 வாக்குகளும் உபதலைவர் நிஹால் விஜயகாந்த்துக்கு 17 வாக்குகளும் கிடைத்தன. மக்கள் விடுதலை முன்னணி வாக்களிப்பதில் இருந்து தவிர்ந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

சுற்றாடல் பாதிப்பு:

# கருங்கல் வேலைதளத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

கருங்கல் உடைக்கும் வேலைத்தளமொன்று ஆரம்பிக்கப்படுவதற்கெதிராக பொது மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பலாங்கொடை பின்னவலை அமுபிட்டிய எனும் இடத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள கருங்கல் வேலைத்தளமொன்றின் களப் பரிசோதனைக்காக சுற்றாடல் அதிகார சபையின் அதிகாரிகள் இவ்விடத்துக்கு வந்த போது அதற்கான அனுமதியை வழங்க வேண்டாம் என அங்கு கூடியிருந்த பிரதேச வாசிகள் அதிகாரிகளுக்கு அழுத்தம் வழங்கினர்.

களப் பரிசோதனைக்காக இவ்விடத்துக்கு வருகை தந்திருந்த அதிகாரிகள் பொது மக்களின்முறைப்பாடுகளை செவிமடுத்தனர்.

# இஸ்ரேல்-சவுதி அமைதி ஒப்பந்தம்: டிரம்ப் முயற்சி



இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு இடையேயான ஒப்பந்தத்தில் சவூதி அரேபியாவும் இணையும் என டிரம்ப் நம்பிக்கை தெரிவித்துள்ளார். முதல் வளைகுடா நாடாக ஐக்கிய அரபு இராச்சியம் இஸ்ரேலுடன் கடந்த ஒகஸ்ட் 13ஆம் திகதி அமைதி ஒப்பந்தம் மேற்கொண்டதாக ஜனாதிபதி டிரம்ப் தெரிவித்தார்.

இது குறித்து டிரம்ப் அளித்த பேட்டியில், இஸ்ரேல், ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய இரு நாடுகளுக்கிடையே ஏற்பட்டுள்ள வரலாற்று சிறப்புமிக்க அமைதி ஒப்பந்தத்தில் சவுதி அரேபியா பங்கேற்கும் என எதிர்பார்க்கிறேன். அப்படி விரும்பினால் அதை நிறைவேற்றுவதற்கான பணிகளை மேற்கொள்ள தயாராக உள்ளேன் என்றார். எனினும் இது குறித்து சவுதி வெளியுறவு அமைச்சர் பைசல் பின் தெரிவித்துள்ளதாவது: பாலஸ்தீன விவகாரத்திற்கு தீர்வு காணப்படும் வரை இஸ்ரேலுடன் அமைதி ஒப்பந்தம் ஏற்பட வாய்ப்பில்லை. டிரம்ப் கூறினார் என்பதற்காக அமைதி ஒப்பந்தத்தில் சவூதி இணைய வேண்டிய அவசியமில்லை என்றார்.

முன்னதாக இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் இடையிலான இந்த அமைதி ஒப்பந்தத்தை பாலஸ்தீனம், துருக்கி, ஈரான் உள்ளிட்ட நாடுகள் கடுமையாக கண்டித்துள்ளன. இந்த நிலையில் அமைதி ஒப்பந்தத்தில் சவூதி அரேபியா இணைய வாய்ப்பு உள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தாய்லாந்தில் ஒன்பது ஆர்ப்பாட்டக்காரர் கைது



அண்மைய ஆர்ப்பாட்டங்களின் தொடர்பில் முன்னணி ஆர்வலர்கள் 9 பேரை தாய்லாந்து அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

இளைஞர்கள் தலைமையிலான இயக்கம், அரசாங்கத்தை பதவியிறங்க வேண்டும் என்று அத்தகைய ஆர்ப்பாட்டங்களை நடத்துகிறது. புதிய அரசமைப்புச் சட்டம், மன்னராட்சி முறையில் சீர்திருத்தம் ஆகியவற்றையும் அவர்கள் கோருகின்றனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மீது தேசத் துரோகம், கணனிக் குற்றங்கள், நோய்க் கட்டுப்பாட்டுச் சட்டத்தை மீறியது, ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தியது ஆகியவை தொடர்பான குற்றச்சாட்டுகள் சுமத்தப்படும்.

மேலும் பலர் கைது செய்யப்படலாம் என்று ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

# ஈரான் மீதான ஐ.நா ஆயுதத் தடையை அமுல்படுத்த அமெரிக்கா கோரிக்கை

ஈரானுக்கு எதிரான ஐ.நா ஆயுதத் தடைகளை மீண்டும் அமுல்படுத்த அமெரிக்கா கோரிக்கை விடுத்துள்ளது.

அணு செயற்பாட்டுக்கு எதிராக 2010ஆம் ஆண்டு ஈரான் மீது ஐ.நா ஆயுத தடையை விதித்தது. இதன் மூலம் ஈரான் வெளிநாடுகளில் இருந்து போர் விமானங்கள், போர்க்கப்பல்கள் உள்ளிட்ட ஆயுதங்களை வாங்குவதற்கு தடை விதிக்கப்பட்டது. எனினும் அணு ஆயுதங்கள் தொடர்பாக அமெரிக்கா உள்ளிட்ட 6 வல்லரசு நாடுகளுக்கும், ஈரானுக்கும் இடையே கடந்த 2015ஆம் ஆண்டில் அணு சக்தி ஒப்பந்தம் கையெழுத்தானது.

தங்களது அணுசக்தி திட்டங்கள் அணு ஆயுதங்கள் தயாரிப்பதற்கானவை இல்லை என்பதை உறுதி செய்ய ஈரானும், அதற்கு பதிலாக அந்த நாட்டின் மீது விதிக்கப்பட்டிருந்த தடைகளை நீக்க ஐ.நா பாதுகாப்பு சபை நிரந்தர உறுப்பினர்களான அமெரிக்கா உள்ளிட்ட 6 நாடுகளும் ஒப்புக்கொண்டு கையெழுத்திட்ட ஒப்புக் கொண்டு இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

ஈரான் அந்த ஒப்பந்தத்தில் இடம் பெற்றுள்ள நிபந்தனைகளை மீறினால், அந்த நாட்டின் மீது ஐ.நா தடையை மீண்டும் அமுல்படுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள மற்ற எந்த நாட்டுக்கும் உரிமை உண்டு என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அம்சம் 'மீள் தடை' என்றழைக்கப்படுகிறது.




இந்த நிலையில் ஒக்டோபர் மாதம் காலாவதியாகும் ஈரான் மீதான ஐ.நா ஆயுத தடையை காலவரையின்றி நீட்டிக்கக் கோரி ஐ.நா பாதுகாப்பு சபையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் நிராகரிக்கப்பட்டது. இதன் மூலம் ஈரான் விவகாரத்தில் ஐ.நா பாதுகாப்பு சபையில் அமெரிக்கா மிகவும் மோசமான முறையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் கடும் அதிருப்தி மற்றும் கோபத்துக்கு உள்ளாகியுள்ள அமெரிக்கா, அணுசக்தி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மீள் தடை அம்சத்தை பயன்படுத்தி ஈரான் மீதான அனைத்து ஐ.நா பொருளாதாரத் தடைகளையும் மீண்டும் அமலப்படுத்தும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

இந்த கோரிக்கையை ஐ.நா சபையில் முறைப்படி ஒப்படைப்பதற்காக அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் மற்றும் இராஜாங்க அமைச்சர் மைக் பொம்பியோ ஆகிய இருவரும் நியூயோர்க் சென்றுள்ளனர்.

எனினும் அமெரிக்கா அணு சக்தி ஒப்பந்தத்திலிருந்து விலகிவிட்டதால், தற்போது அதில் இடம் பெற்றுள்ள மீள் தடை அம்சத்தை பயன்படுத்தி அமெரிக்காவால் ஈரான் மீது தடை விதிக்க முடியாது என்று ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள மற்ற நாடுகள் தெரிவிக்கின்றன. ஆனால், சட்டரீதியில் தாங்கள் அந்த ஒப்பந்தத்தில் நீடிப்பதாக அமெரிக்கா வாதிடுகிறது.

ஒப்பந்தத்திலிருந்து விலகினாலும் மீள் தடை அம்சத்தை பயன்படுத்துவதிலிருந்து அமெரிக்காவைத் தடுக்க முடியாது என டிரம்ப் நிர்வாகம் கூறுகிறது.

மீள் தடை முறையில் ஈரான் மீது அமெரிக்கா தடை விதித்தால், அந்தத் தடை அமுலில் இருப்பதாக அமெரிக்காவும், அப்படி ஒரு தடையே இல்லை என்று பிற நாடுகளும் ஒரே நேரத்தில் கூறும் வினோதமான சூழல் ஏற்படும். இந்த சூழ்நிலை உலக அரங்கில் ஏற்கனவே குறைந்து வரும் ஐ.நா பாதுகாப்பு சபையின் முக்கியத்துவத்தை மேலும் மங்கச் செய்யும் என சர்வதேச அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

# 2,50,000 டொலர்கள் மதிப்புள்ள தங்கக் கட்டிகள் கண்டுபிடிப்பு



அவுஸ்திரேலியாவில் தங்க வேட்டையில் ஈடுபட்ட இருவருக்கு வியப்பளிக்கும் வகையில் சுமார் 2,50,000 டொலர்கள் மதிப்புள்ள இரண்டு தங்கக்கட்டிகள் கிடைத்துள்ளன.

அவுஸ்திரேலியாவின் விக்டோரியா மாநிலத்திலுள்ள தங்க சுரங்க நகரமான தர்னகுல்லா அருகே ப்ரெண்ட் ஷானன் மற்றும் ஈதன் வெஸ்ட் ஆகியோர் இந்த தங்கக்கட்டிகளை கண்டுபிடித்தனர்.

கடந்த வியாழக்கிழமை ஒளிபரப்பப்பட்ட 'ஆஸி கோல்ட் ஹண்டர்ஸ்' என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியில் அவர்களின் இந்த கண்டுபிடிப்பு குறித்து காட்டப்பட்டது.

இவர்கள் இருவரும் குறிப்பிட்ட சில இடங்களில் மண்ணை தோண்டி, அங்கு ஆழத்தில் தங்கம் இருக்கிறதா என்பதை உலோகத்தை கண்டறியும் கருவியை கொண்டு ஆராய்ந்தனர்.

தங்களது இந்த கண்டுபிடிப்பு தொடர்பாக சி.என்.என் தொலைக்காட்சியிடம் பேசிய ஈதன் வெஸ்ட், "இவை நிச்சயமாக மிக முக்கியமான கண்டுபிடிப்புகளில் ஒன்றாகும். ஒரே நாளில் இரண்டு பெரிய தங்கக்கட்டிகளை கண்டறிந்திருப்பது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது" என்று அவர் கூறினார்.

ஈதன் வெஸ்ட்டின் தந்தையோடு சேர்ந்து மேற்கொள்ளப்பட்ட இந்த தங்க வேட்டையில், ஒரு நாளுக்குள்ளாகவே மொத்தம் சுமார் 3.5 கிலோ எடை கொண்ட இரண்டு தங்கக்கட்டிகளை அவர்கள் கண்டறிந்ததாக இதுதொடர்பாக டிஸ்கவரி சேனல் வெளியிட்டுள்ள நிகழ்ச்சியில் குறிப்பிடப்பட்டுள்ளது. "இதற்கு முன்னர் யாருமே தோண்டாத இடத்தை தெரிவு செய்திருந்தோம். அங்குதான் எங்களுக்கு இந்த தங்கக்கட்டிகள் கிடைத்தன. நான் சுமார் நான்காண்டுகளாக தங்க வேட்டையில் ஈடுபட்டு வருகிறேன். இதுவரை கிட்டத்தட்ட 'ஆயிரக்கணக்கான தங்கக்கட்டிகளை' கண்டறிந்திருப்பேன்" என்று ஈதன் வெஸ்ட் கூறினார்.

# புளோரிடாவில் மரபணு மாற்றப்பட்ட நுளம்புகளை வெளியிட அங்கீகாரம்



அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட 750 மில்லியன் நுளம்புகள் வெளியிடும் முன்னோடித் திட்டத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஸீக்கா, டெங்கி, சிக்குன்குன்யா, மஞ்சள் காய்ச்சல் போன்ற நோய்களைப் பரப்பக்கூடிய ஏ.டி.ஸ் நுளம்புகளின் எண்ணிக்கையைக் குறைப்பது அதன் நோக்கமாகும்.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட ஆண் நுளம்புகள், பெண் நுளம்புகளோடு இனப் பெருக்கம் செய்யும் போது உருவாகும் நுளம்பு முட்டைகளிலிருந்து புதிய நுளம்புகள் பொரிய மாட்டாது

அதன்மூலம் கொடிய நோய்களைப் பரப்பும் நுளம்புகளின் எண்ணிக்கையைக் கணிசமாகக் குறைக்க முடியும் என்பது ஆய்வுகளில் நிரூபணமாகியுள்ளது. ஆனால் அந்தத் திட்டத்தால் அடையாளம் தெரியாத புதிய பிரச்சினைகள் உருவாகக்கூடுமென ஒரு தரப்பினர் அதை எதிர்த்து வருகின்றனர். பூச்சிக்கொல்லிக்குக் கட்டுப்படாத புதுவகை நுளம்புகளை அது உருவாக்கிவிடலாமென சுற்றுப்புற ஆதரவுக் குழுக்கள் சில நம்புகின்றன,

மனிதர்களிடமும் பூச்சிகளிடமும் புதிய நுளம்புகள் என்னவிதமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது தெரியாத நிலையில் இது ஆபத்தான விளையாட்டு என்கின்றன அவை.

ஆனால், அதனால் எவ்விதத் தீய பின்விளைவும் ஏற்படாது என அரசாங்க ஆய்வுகளை அதிகாரிகள் மேற்கோள் காட்டினர். தெற்கு புளோரிடாவின் பல இடங்களில் ஏ.டி.ஸ் நுளம்புகள் காணப்படுகின்றன. அவற்றின் உடலில் பூச்சிக்கொல்லி மருந்தை எதிர்த்து உயிர்வாழும் தடுப்புச் சக்தி உருவாகிவிட்டது. அதனால் அவற்றை அழிப்பது சிரமமாகியுள்ளது.

ஒல்பாக்கியா என்னும் பெயரில் இத்தகைய திட்டம் சிங்கப்பூரில் ஏற்கனவே நடப்பிலுள்ளது.

# அமெரிக்க விவகாரங்களை கவனிக்கும் கிம்மின் சகோதரி



வட கொரிய தலைவர் கிம் ஜொங் உன் தனது அதிகாரங்கள் சிலவற்றைத் தன்னுடைய இளைய சகோதரி கிம் யோ ஜொங்கின் அதிகாரத்திற்கு உட்படுத்தியுள்ளார்.

அதன்படி தென் கொரிய, அமெரிக்க விவகாரங்கள் சகோதரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தென் கொரியாவின் உளவு நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது. இது கிம்மின் பணிச்சுமையைக் குறைப்பதற்கான நடவடிக்கைதான் என்ற உளவு அமைப்பு, கிம்மிற்கு உடல்நலக் குறைவு என்ற கூற்றை மறுத்துள்ளது.

முன்னதாக உடல்நிலை குறித்து பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ள நிலையில், அவர் இல்லாத நிலையில் அவருடைய சகோதரி கிம் யோ ஜொங்க் ஆட்சியை நிர்வகித்து வந்ததாக கூறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கிரீன்லாந்தில் கடந்த ஆண்டில் 586 பில். தொன் பனி உருகியது




சுற்றுச்சூழல் ரீதியாக உலகின் பருவநிலை மாற்றங்களைத் தீர்மானிக்கும் கிரீன்லாந்தில் 2019ஆம் ஆண்டில் மட்டும் 586 பில்லியன் தொன் பனி உருகித் தீர்த்துள்ளது. கலிபோர்னியா அளவுள்ள மாகாணத்தை 4 அடி உயரத்துக்கு நீரால் சூழும் அளவுக்கு இந்தப் பனி உருகல் அளவு கணக்கிடப்படுகிறது.

2 ஆண்டுகளுக்கு கோடைக்காலத்தில் பனி உருகும் அளவு குறைவாக இருந்த காலம் போக 2019இல் அனைத்து சாதனைகளையும் முறியடிக்கும் விதமாக 586 பில்லியன் தொன்கள், அதாவது 140 ட்ரில்லியன் கெலன்கள் (532 ட்ரில்லியன் லிட்டர்கள் தண்ணீர்) அளவுக்கு பெரிய அளவில் பனி உருகியுள்ளதாக செய்மதி படங்களை வைத்து ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது ஆண்டு சராசரி 259 பில்லியன் தொன் உருகல் என்பதையும் கடந்த பெரும்பனி உருகலாக இது பார்க்கப்படுகிறது. இதற்கு முன்பு 2012இல் கிரீன்லாந்தில் 511 பில்லியன் தொன் அளவுக்கு பனி உருகியது. பனி உருவாக எத்தனையோ ஆண்டுகள் எடுக்கிறது. ஆனால் உருகுவது வெகுவேகமாக நடைபெறுவதாக ஆய்வாளர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு 586 பில்லியன் தொன் பனி உருகியதில் உலக அளவில் கடல்களில் நீர்மட்டம் 1.5 மி.மீ அதிகரித்துள்ளது. இது மிகப்பெரிய அளவிலான, நினைத்துப் பார்க்க முடியாத கடல்நீர்மட்ட அதிகரிப்பாகும் என்று நாஸாவின் ஆய்வாளர் அலெக்ஸ் கார்டனர் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவில் 3 இலட்சம் பதிவுகளை நீக்கிய டிக்டொக்





அமெரிக்காவில் வெறுப்பை தூண்டும் பேச்சுக்கொள்கையை மீறியதாக இந்தாண்டு 3 இலட்சத்திற்கும் அதிகமான டிக்டொக் வீடியோக்களை பைட் டான்ஸ் நிறுவனம் நீக்கியுள்ளது.

சீனாவைச் சேர்ந்த பைட் டான்ஸ் நிறுவனம் டிக் டொக் செயலியை நடத்துகிறது. இது கைபேசியில் 'வீடியோ' பதிவுகளை பகிர்ந்து கொள்ள உதவுவதால், கோடிக்கணக் கானோர், டிக் டொக் செயலியை பதிவிறக்கி பயன்படுத்தி வருகின்றனர். இந்த செயலி மூலம் சீன அரசு, இந்த தகவல்களை உளவு பார்க்கவும், பிற நாடுகளில் பொய் பிரசாரம் செய்ய பயன்படுத்துவதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது.

'அமெரிக்காவில் செயல்படும், டிக்டொக் நிறுவனம், பைட் டான்சுடன் எந்தவொரு தகவலையும் பகிரக் கூடாது' என டிரம்ப் உத்தரவு பிறப்பித்தார். இந்த நிலையில் அமெரிக்காவில் வெறுப்பை தூண்டும் பேச்சு கொள்கையை மீறியதாக இந்தாண்டு மட்டும் 1,300 போஸ்ட் பதிவுகளையும், 3 லட்சத்து 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடியோ பதிவுகளை நீக்கியதாக பைட் டான்ஸ் நிறுவனத்தின் நிர்வாகி தெரிவித்துள்ளார்.

# மறைக்கப்பட்ட பயங்கரம்: கண்டுபிடித்த அமெரிக்கா!



சீனாவில் கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்பட்ட பயங்கரத்தை பெய்ஜிங்கில் உள்ள உயர் அதிகாரிகளுக்குத் தெரிவிக்காமல் உலகத்தின் பார்வையில் இருந்து மறைக்க உள்ளூர் அதிகாரிகள் முயன்றதை அமெரிக்காவின் உளவு அமைப்புகள் கண்டுபிடித்துள்ளன.

அமெரிக்காவின் உளவு அமைப்பின் புதிய அறிக்கையில் ஜனவரி தொடக்கத்தில் வைரஸின் உண்மையான ஆபத்துகள் குறித்து உலகின் பார்வையில் இருந்து பல நாட்கள் சீன அதிகாரிகள் மறைத்து விட்டதாக கூறியுள்ளது.

இந்த அறிக்கை காரணமாக சீனா மீதான அமெரிக்க கொள்கை கடுமையாக பாதிக்கப்படலாம். கொரோனா வைரஸ் தொற்று தொடர்பாக அமெரிக்க அதிகாரிகள் சீனாவின் செயலை அம்பலப்படுத்தி உள்ளனர். சீனாவை ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி, கொரோனா தொற்றின் ஆரம்ப வெடிப்பை மூடி மறைத்து, வைரஸ் உலகம் முழுவதும் பரவ அனுமதித்தது என்று கூறியுள்ளனர்.

கொரோனா தொடர்பான தகவல் விவகாரத்தில் அமெரிக்க அரசாங்கத்திற்குள், ஜனவரி மாதத்தில் சீன அதிகாரிகள் என்ன தவறு செய்தார்கள் என்பதை புலனாய்வு அதிகாரிகள் மிகவும் நுணுக்கமான சிக்கலான விஷயத்தை கண்டுபிடித்துள்ளனர். அமெரிக்க புலனாய்வு அமைப்புகளின் புதிய அறிக்கையை நன்கு அறிந்த அமெரிக்க அதிகாரிகள் கூற்றுப்படி, மத்திய சீனாவில் உள்ள உள்ளூர் அதிகாரிகள் வைரஸால் ஏற்பட்ட பேரழிவு குறித்து பெய்ஜிங்கில் உள்ள அதிகாரிகளுக்கு தெரிவிக்காமல் பல நாட்கள் மறைக்க முயன்றுள்ளனர். கடந்த ஆண்டு பிற்பகுதியில் கொரோனா பரவத் தொடங்கிய வுஹான் நகரத்திலும் ஹூபே மாகாணத்திலும் அதிகாரிகள் சீனாவின் மத்திய தலைமை தெரிவிக்காமல் மறைக்க முயன்றதாக அறிக்கை முடிகிறது. பழி வாங்கப்படுவோம் என்று பயந்து நடுங்கிய உள்ளூர் அதிகாரிகள் பெய்ஜிங்கிற்கு தகவல்களை அனுப்புவதை நிறுத்தி வைத்ததாக தற்போதைய மற்றும் முன்னாள் அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர். இந்த புதிய மதிப்பீடு சீனா மீது அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பின் நிர்வாகம் வைத்து வந்த விமர்சனத்தை அப்படியே பிரதிபலிக்கிறது. எனினும் உலகளாவிய நெருக்கடியை உருவாக்கிய சீனாவின் செயல்களை அறிக்கை முழுமையாக அம்பலப்படுத்துகிறது.

முன்னதாக ட்ரம்ப் ஜூலை 4 ஆம் திகதி வெள்ளை மாளிகையில் ஆற்றிய உரையில் 'சீனாவின் இரகசியம், மோசடிகள் மற்றும் மூடிமறைப்பு' ஆகியவை தொற்றுநோய் பரவ காரணம் என்று கூறினார். அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் மைக் பாம்பியோ, அந்த வைரஸை பற்றி சீன கம்யூனிஸ்ட் நிர்வாகம் மூடி மறைத்திருந்த உண்மை ஒவ்வொரு நாளும் வெளியாகி வருகிறது என்றார்.

வெள்ளை மாளிகையின் வர்த்தக ஆலோசகரான பீட்டர் நவரோ கடந்த வாரம் பேசுகையில், சீன கம்யூனிஸ்ட் கட்சியால் இந்த தொற்றுநோய் அமெரிக்கா மீது ஏவப்பட்டதாக கூறினார்.

இந்நிலையில் அமெரிக்க உளவுத்துறையின் சீனா குறித்த அறிக்கை, முதலில் ஜூன் மாதத்தில் கசிந்தது. C.I.A. மற்றும் பிற புலனாய்வு அமைப்புகள், சீன கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரிகள் உலகிற்கு முக்கியமான தகவல்களை மறைத்தனர் என்ற ஒட்டுமொத்த கருத்தை இன்னமும் அதிகமாக ஆதரிக்கிறது, பெய்ஜிங்கில் உள்ள மூத்த அதிகாரிகள், மத்திய சீனாவில் உள்ள அதிகாரிகளிடமிருந்து தரவை பாதுகாத்தது போலவே, உலக சுகாதார அமைப்பின் தகவல்களைத் தடுத்து நிறுத்தி, தொற்று பரவியதற்கு முக்கிய பங்கு வகித்ததாக அமெரிக்க உளவுத்துறை அறிக்கை கூறுகிறது.





கல்வி அமைச்சினால் செயல்படுத்தப்படவுள்ள 1000 மாகாண பாடசாலைகளை, தேசிய பாடசாலையாக தரமுயர்த்தும் வேளைத்திட்டத்திற்கு, வடமேல் மாகாணத்திலிருந்து பாடசாலைகள் தெரிவுசெய்தல் மற்றும் அதற்காக முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் வடமேல் மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த கலந்துரையாடலில் வடமேல் மாகாண பிரதான செயலாளர், வடமேல் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாண கல்விப் பணிப்பாளர், ஆளுநரின் செயலாளர், வடமேல் மாகாண வலையக் கல்விப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்: மாவத்தகம தினகரன் நிருபர்)

## வாழைக்குலை திருட்டு அதிகரிப்பு

**கோப்பாய் நிருபர்**

யாழ்.வலிகாமம் கிழக்கு பிரதேசத்தில் அண்மைய நாட்களில் வாழைக்குலை திருட்டு அதிகரித்து காணப்படுவதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வாலைப்பழங்களின் விலை அதிகரிப்பை அடுத்து திருட்டு போவதாக தெரிவிக்கின்றனர். கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டி,ஊரெழு போன்ற இடங்களில் உள்ள தோட்டங்களில் இரவு நேரங்களில் வாழைக்குலை திருட்டு தாராளமாக இடம்பெற்று வருகிறது.

## உக்குவளை அஜ்மீர் பழைய மாணவர் சங்கத்தின் தொழில் வழிகாட்டல் பயற்சி செயலமர்வு

மாத்தளை பிரதேச வாலிபர்களின் வளமான எதிர்காலத்தை கருத்தில் கொண்டு உக்குவளை அஜ்மீர் பழைய மாணவர் சங்கத்தினால் தொழில் வழிகாட்டல் பயற்சி செயலமர்வு ஒன்று நாளை நடைபெறவுள்ளது.

இதில் இளைஞர்களுக்கான தொழில் முயற்சிகள், தாம் செய்யும் தொழிலில் தேர்ச்சியடைந்து கொள்வதற்கான ஒரு அறிய வாய்ப்பாக அமையவுள்ளது.

23 வயதுக்குட்பட்ட ஒவ்வொருவரும் தொழில் ரீதியாக தம்மை தகைமைப்படுத்திக் கொள்வதற்கான தொழில் வழிகாட்டல் பயிற்சியாகும். .நாளை காலை 8:30 மணிக்கு எமது அஜ்மீர் தேசிய பாடசாலையில் நடைபெறவுள்ளது. உக்குவளை அஜ்மீர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவரும் சமூகச் செயற்பாட்டாளருமான சீ. எம். அபூதாலிப் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சுங்கத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி எம். ஏ. எம். நாசீர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

க. பொ. த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றி உயர் தரத்திற்குத் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு இது ஓர் அறிய வாய்ப்பாகும். எமது நாட்டிலுள்ள முன்னனி தொழில் வழிகாட்டல் நிறுவனங்களான இன்ஸைட், கொழும்பு டெக்னிகல் கொலேஜ், நோலேஜ் பொக்ஸ் நேஸ்ட ஆகிய நிறுவனங்களிலிருந்து வளவாளர்கள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

அன்றைய தினமே மேற்படி நிறுவனங்களின் நேர்முகப்பரீட்சை நடைபெறுவதோடு, ஒவ்வொருவரும் தமக்குப் பொருத்தமான தொழில் வழிகாட்டல் பயிற்சி நெறியினைத் தெரிவு செய்து கொள்வதற்கான வாய்ப்பும் கிடைக்கும்.

வாலிபர்களும் தமது பெற்றாருடன் கலந்து பயன்பெற்றுக் கொள்ளுமாறு அஜ்மீர் பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் அன்புடன் அழைக்கின்றார்.

## 'வகுப்பறை கணிப்பீட்டை விளங்கிக் கொள்ளல்' இன்று நூல் அறிமுக விழா

**கோப்பாய் நிருபர்**

இலங்கை பரீட்சைத் திணைக்கள பிரதி பரீட்சை ஆணையாளர் கலாநிதி திருமதி பி.எஸ்.ஸ்கந்தராஜாவின் 'வகுப்பறை கணிப்பீட்டை விளங்கிக் கொள்ளல்' நூல் அறிமுக விழா இன்று காலை 9 மணியளவில் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் கோப்பாய் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.பரமானந்தம் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ரி.பெரியதம்பி உட்பட பலர் கலந்து கொள்வர்.

நூலின் நயப்புரையை யாழ்.பல்கலைக்கழக ஓய்வு பெற்ற சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ரி.கலாமணி வழங்குவார்.

## முள்ளியவளையில் கஞ்சாவுடன் பெண் உள்ளிட்ட இருவர் கைது

முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வற்றாப்பளை வீதியில் கஞ்சாவுடன் பயணிப்பதாக பொலிசாருக்கு கிடைத்த தகவலையடுத்து சந்தேகத்தின் பேரில் இருவரை மறித்து சோதனை செய்தபோது அவர்களிடம் கஞ்சா வைத்திருப்பது தெரியவந்துள்ளது. புதறிகுடாவினை சேர்ந்த இளம் பெண் ஒருவரும் இளைஞன் ஒருவரும் 50 கிராம் மற்றும் 42 கிராம் கஞ்சாவினை உடமையில் வைத்துள்ளார்கள்.

இவர்களிடம் இருந்து கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் இவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முள்ளியவளை பொலிசார் தெரிவித்தனர்.




20.08.2020 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 745,900
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 53,812,432.40
ரூ. 24,047,742.40 கிரேண்ட் சுப்பர் பரிசு 01 ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 1,000,000.00 பரிசுகள் 02 ரூ. 100,000.00 பரிசுகள் 25













# புறக்கோட்டை மிதக்கும் சந்தை புனரமைப்பு பணிகள் திங்கட்கிழமை ஆரம்பம்

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் அறிவுறுத்தலின் பேரில் கோட்டை மிதக்கும் சந்தையின் (Floating Market) புனரமைக்கும் பணிகள் எதிர்வரும் திங்கட்கிழமை 24 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் அறிவுறுத்தலின் பேரில், கோட்டை மிதக்கும் சந்தையின் (Floating Market) புனரமைப்பு பணிகள் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிரிநிமல் பெரேராவின் தலைமையின் கீழ் எதிர்வரும் திங்கட்கிழமை 24 மு.ப.8.30 மணியளவில் ஆரம்பிக்கப்படும்.





கடந்த 4 1/2 ஆண்டுகளாக ஒழுங்கற்ற பராமரிப்பு காரணமாக கோட்டை மிதக்கும் கடைத்தொகுதியில் உள்ள பல கடைகள் மூடப்பட்டிருந்தன. அவ்வாறாக எண்பது சதவீத கடைகளை மூட வேண்டியிருந்தது என்று கடை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

மேலும், மிதக்கும் கடைகள் அமைந்துள்ள கால்வாயின் நீரானது அசுத்தமடைந்துள்ளதால் சமீப காலங்களில் கடுமையான துர்நாற்றம் வீசுவதால் பல்வேறு சுகாதார பிரச்சினைகள் ஏ ற்பட்டுள்ளது.

இவை அனைத்தையும் கருத்திற் கொண்டு, கோட்டை மிதக்கும் சந்தையினை புதுப்பித்தல் பணிகளை விரைவுபடுத்துமாறு ஜனாதிபதியும், பிரதமரும் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அறிவுறுத்தினர்.

அப்போதைய பாதுகாப்பு செயலாளரும் தற்போதைய ஜனாதிபதியுமான கோட்டாபய ராஜபக்சவினால் கோட்டை மிதக்கும் சந்தை , 2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ஆ ம் திகதி திறந்து வைக்கப்பட்டது.



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடந்த 11ஆம் திகதி தமது கடமைகளை பொறுப்பேற்ற போது அந்நிகழ்வில் கலந்து கொண்ட சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஞாபகார்த்த பெயர் பலகை ஒன்றை வழங்கி கௌரவிப்பதையும், அருகில் ஏனைய மாகாண ஆளுநர்களையும் படத்தில் காணலாம்.

## கல்முனை மாநகர சபையின் செயற்பாடுகளுக்கு எதிராக பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

**(பெரியநீலாவணை விசேட, சாய்ந்தமருது தினகரன் நிருபர்கள்)**

கல்முனை மாநகர சபையில் அதிகார துஷ்பிரயோகம் ஊழல்கள், மற்றும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுவருவதாகவும், இதனை குறித்த துறைக்கான உயர்அதிகாரிகள் கண்டும் காணாமல் இருப்பதாக குற்றம் சுமத்தி பிரதேச பொதுமக்கள் நேற்று ஜும்மா தொழுகையை தொடர்ந்து பள்ளிவாசல் முன்றலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அரசாங்கம், மாகாண ஆணையாளர், கல்முனை மாநகர ஆணையாளர், முதல்வர், அடங்கலாக உயர்திகாரிகள் பலரையும் விழித்து எழுதப்பட்ட சுலோகங்களை ஏந்திக்கொண்டு கல்முனை நகர் ஜும்மா பள்ளிவாசல் முன்றலிலிருந்து கல்முனை பிரதேச செயலகம் மற்றும் கல்முனை மாநகர சபை அமைந்துள்ள வளாகம் வரை நடைபவனியாக சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பிரதேச செயலாளர் எம்.எம்.நஸீரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

## ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை நாசமாக்கியது முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவே

### இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர

**( பலாங்கொடை தினகரன் நிருபர்)**

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை பற்றி விமர்சனம் செய்யும் உரிமை சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு கிடையாது. கட்சியினை ஆரம்பத்திலேயே நாசப்படுத்தியது சந்திரிக்கா பண்டாரநாயக்க குமார துங்க தான் என இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

எம்பிலிப்பிட்டிய பகுதியில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில் ,

எமது அரசை வீழ்த்துவதற்கு 2015 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இரண்டாக பிளவு படுத்தினார். சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு பிரதேச சபையில் போட்டியிட்டும் வெற்றி அடைய முடியாது. அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினை நல்லாட்சி அரசுக்கு கொடுத்து அழித்துவிட்டார். மஹிந்த ராஜபக்ச பொதுஜன பெரமுனவின் தகுதி பெற்ற தலைவராவார். பழைய ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி எமக்கு வேண்டாம் எனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எமக்கு சிறந்தது எனவும் மக்கள் தீர்ப்பு அளித்து விட்டனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் மைத்திரிபால சிறிசேன உட்பட அவர்களுடன் உள்ள கூட்டத்தினர் முன்னெடுத்துச் செல்வார்கள். நாம் மீண்டும் அந்தக் கட்சிக்கு செல்ல மாட்டோம்.

எனக்கு கிடைத்துள்ள இராஜாங்க அமைச்சர் பதவி குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். மிளகின் விலை வீழ்ச்சி அடைந்துள்ள போதிலும் அதனை சிறந்த விலைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கவுள்ளேன். மிளகு ஸ்பிரிட் உற்பத்தி செய்யும் நிறுவனங்களை அமைத்து வெளிநாட்டுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளேன். அப்போது ஒரு கிலோ மிளகின் விலை ஆயிரம் ரூபாவிற்கு அதிகரித்துவிடும். அதேசமயம் கந்தளாய் சீனி தொழிற்சாலையினை நாம் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

மேலும் ஹெக்டெயர் ஒரு இலட்சத்தில் சோள உற்பத்தியை மேற்கொள்ளவுள்ளதுடன் இந்நாட்டில் வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். தங்களது தோல்வியினை பொறுக்க முடியாத நிலையில் சஜித் பிரேமதாச இப்பொழுது மஞ்சள் தூளை பற்றி பேசி வருகிறார். ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறி வந்து அதனையும் இல்லாமல் செய்து அவர்களது ஆதரவாளர்களையும் அவரது கட்சியையும் தோற்கடித்து விட்டனர் என அவர் தெரிவித்தார்.



கல்வி அமைச்சினால் செயல்படுத்தப்படவுள்ள 1000 மாகாண பாடசாலைகளை, தேசிய பாடசாலையாக தரமுயர்த்தும் வேலைத்திட்டத்திற்கு, வடமேல் மாகாணத்திலிருந்து பாடசாலைகள் தெரிவுசெய்தல் மற்றும் அதற்காக முன்னெடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் வடமேல் மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த கலந்துரையாடலில் வடமேல் மாகாண பிரதான செயலாளர், வடமேல் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாண கல்விப் பணிப்பாளர், ஆளுநரின் செயலாளர், வடமேல் மாகாண வலையக் கல்விப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டதை இங்கு படங்களில் காணலாம். (படம்: மாவத்தகம நிருபர்)

## கொவிட் 19 சுகாதார பாதுகாப்பு விதி முறைகள் தொடர்பில் முன்பள்ளி ஆசிரியர்களை தெளிவுபடுத்தல்

**திருக்கோவில் தினகரன் நிருபர்**

திருக்கோவில் பிரதேச முன்பள்ளி பாடசாலைகளை மீள் ஆரம்பிப்பது தொடர்பாக ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்வொன்று பிரதேசசெயலகத்தில் நேற்று நடைபெற்றது.

இக் கூட்டமானது பிரதேச செயலாளரின் தலைமையில் சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை (21) பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது சுகாதார அமைச்சு மற்றும் சிறுவர் மகளிர் அபிவிருத்திப் திணைக்களத்தின் சுற்று நிருபங்கள் மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக முன்பள்ளிகள் பாடசாலைகளை மீளவும் ஆரம்பிக்கப்படும் போது ஆசிரியர்கள் பின்பற்ற வேண்டிய கொவிட் 19 சுகாதார பாதுகாப்பு விதி முறைகள் மற்றும் மாணவர்களுடனான அதி உச்ச பாதுகாப்புக்களை உறுதிப்படுத்தி முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக கருத்தாடல்கள் ஊடாக விரிவாக ஆராயப்பட்டு இருந்தன.

இந்நிலையில் திருக்கோவில் பிரதேசத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் முன்பள்ளிப் பாடசாலைகள் கட்டம் கட்டமாக ஆரம்பிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு இருந்தன.

இக் கூட்டத்தில் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் திருக்கோவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எம்.ஏ.பிரசாந், திருக்கோவில் உதவிப் பிரதேச செயலாளர், கே.சதீசேகரன், உதவித் திட்டப்பணிப்பாளர் எம்.அனோஜா, திருக்கோவில் பிரதேசசபை செயலாளர் ஜெ.சத்தியசீலன், திருக்கோவில் வலயக கல்வி அலுவலக முன்பள்ளி இணைப்பாளர் எஸ். விவேகானந்தராஜா, திருக்கோவில் பொலிஸ் நிலைய அதிகாரிகள் திருக்கோவில் பிரதேச செயலக அதிகாரிகள் சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்திப் பிரிவின் உத்தியோகத்தர்கள் மற்றும் 36 முன்பள்ளி பாடசாலைகளின் ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டு இருந்தனர்.





## காக்காச்சிவட்டையில் பயிர் சிகிச்சை முகாம்

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் காக்காச்சிவட்டை விவசாய போதனாசிரியர் பிரிவிலுள்ள விளாவெட்டுவான் கிராமத்தில் பயிர்ச்சிகிச்சை முகாம் காக்காச்சிவட்டை விவசாயப்போதனாசிரியர் ரி.குகசோதி தலைமையில் நடைபெற்றது

இந்நிகழ்வில் அதிதியாக தெற்கு வலய உதவி விவசாயப்பணிப்பாளர் ரி.மேகராசா கலந்துகொண்டார். அத்துடன் விவசாய தொழிநுட்ப உத்தியோகத்தர்களான கிலசன், லியிந்தன், கிராமசேவை உத்தியோகத்தர், விவசாயிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

இங்கு விவசாயிகள் கொண்டுவந்திருந்த நோய் பீடை தாக்கத்திற்குள்ளான பயிர்களின் மாதிரிகள் அவதானிக்கப்பட்டு அந்நோய் நிலமையினை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. மேலும் விவசாயிகளிடம் விவசாயம் சார்ந்த ஏனைய பிரச்சினைகள் கேட்டறியப்பட்டு அவற்றுக்கான தீர்வுகளும் அதிகாரிகளினால் வழங்கப்பட்டது. தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதி விவசாயப்பணிப்பாளர் வி.பேரின்பராஜாவின் வழிகாட்டலில் விவசாய கிராமங்கள் தோறும் இவ்வாறான விவசாய பயிர்ச்சிகிச்சை முகாம்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.



கிராமிய பொருளாதாரத்தை பலப்படுத்தும் நோக்குடன் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் கிராமத்தையும் நகரத்தையும் இணைக்கும்நோக்குடன் குறைந்த செலவில் தரத்தில் சிறந்த சிறிய பாலங்களை அமைப்பதற்கான திட்டம் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் நிமால் லான்ஸா தலைமையில் கலந்துரையாடலொன்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.



பெரியநீலாவணை விஸ்ணு மகா வித்தியாலயத்தில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையை எதிர்நோக்கும் மாணவர்களுக்கான கணித பாடத்திற்கான வழிகாட்டல் கையேடு நூல் வழங்கும் நிகழ்வு பல்கலைக்கழக மாணவன் நீலாவணை இந்திரா தலைமையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். (படம்: பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

## மாபெரும் இரத்ததான முகாம்

**(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)**

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியில் நிலவுகின்ற இரத்த தட்டுப்பாட்டினை நிவர்த்திக்கும் நோக்கில் அல் நஜா விளையாட்டுக் கழகத்திடம் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவினர் விடுத்த வேண்டுகோளுக்கமைவாக மாபெரும் இரத்ததான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அதன் தலைவர் எஸ்.எம். இத்ரீஸ் தெரிவித்தார்.

சமூக சேவைகளின் முன்னோடியாகத் திகழ்கின்ற அட்டாளைச்சேனை அல் நஜா விளையாட்டுக் கழகம் மற்றும் அல் நஜா சமூக சேவை அமைப்பு ஆகியன அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவுடன் இணைந்து இந்த மாபெரும் இரத்ததான முகாம் ஒன்றினை எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.45 தொடக்கம் மாலை 4.00 மணி வரை அட்டாளைச்சேனை 8 ஆம் பிரிவில் அமைந்துள்ள அல் நஜா விளையாட்டுக் கழக அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இம்மாபெரும் இரத்ததான முகாமில் அனைத்து விளையாட்டுக் கழக வீரர்கள், பொது அமைப்புக்களின் உறுப்பினர்கள், சமூக சேவை மற்றும் தொண்டு நிறுவனங்களின் உறுப்பினர்கள், பொதுமக்கள் அனைவரும் கலந்துகொண்டு பெறுமதியான உதிரத்தை தானமாக வழங்கி எம் சகோதரர்களின் உயிரைக் காக்க முன்வருமாறும் அல் நஜா விளையாட்டுக் கழகத்தின் தலைவர் எஸ்.எம்.இத்ரீஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

## ஹெரோயின் போதைப்பொருளுடன் ஐவர் கைது

**கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்**

புத்தளம் கல்லடி பிரதேசத்தில் ஹெ ரோயின், மாவா மற்றும் ஒருதொகை பணம் என்பவற்றுடன் நேற்றுமுன்தின ம் வியாழக்கிழமை (20) ஐவ ர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தளம் தலைமையக பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலொன்றின் அடிப்படையில் குறித்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் புத்தளம் கல்லடி மற்றும் நீர்கொழும்பு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 65 ஆயிரம் ரூபா பெறுமதியான 4 கிராம் 200 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான மாவா , இரண்டு புகையிலை பக்கட்கள் , 60 ஆயிரம் ரூபா பணம் மற்றும் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இச் சம்பவம் தொடர்பில் புத்தளம் தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# காலநிலை மாற்றத்திற்கான தீர்வை யார் தருவது

காலநிலை மாற்றத்தினால் நாம் அபாயத்தின் விளிம்பிலா நிற்கிறோம்? சந்தேகம் இல்லாமல் ஆம் என்பதுதான் பதில்.

திடீரென பெய்யும் மழை, அடிக்கடி நிகழும் புயல், சுட்டெரிக்கும் வெயில், கணிக்க முடியாத வானிலை மாற்றம், மூழ்கடிக்கும் வெள்ளம் எனத் தற்போது நாம் எளிதில் உணரும் வகையில் நம்மைச் சுற்றி மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. ஏன் திடீரென நாம் இந்த கண்ணாமூச்சிக் கூண்டில் சிக்கினோம் என்று உங்களுக்குத் தோன்றியிருக்கிறதா? இல்லையென்றால், ஏன் இப்படி காலநிலையில் நாம் சந்திக்கும் அபாயங்கள் நடைபெறுகிறது என்பதை அறிய அடிப்படையான சில விஷயங்களைத் தெரிந்து கொள்வது அவசியம்.

உலக அளவில் காலநிலை மாற்றம் அல்லது பருவநிலை மாற்றம் என்ற சொல் தற்போது அதிகம் உச்சரிக்கப்படுகிறது. இந்தப் பருவநிலை மாற்றத்தால் நாம் வாழும் புவியில் பல்வேறு மாறுபாடுகள் நிகழ்கின்றன. அவற்றைக் கணிப்பதிலும், இந்த மாற்றங்களைப் புரிந்துகொள்ளவும் வேண்டிய அவசியம் உலக நாடுகளுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது. கடந்த நூற்றாண்டின் மத்தியில் கண்டுபிடிக்கப்பட்ட நீராவி இயந்திரங்கள் போன்றவற்றால் தொழில்துறையில் ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டது. ஐரோப்பிய நாடுகளில் தொழில்துறைகளின் வளர்ச்சி அதிகப்படியான மக்களைக் கிராமங்களில் இருந்து நகரங்களை நோக்கித் தள்ளியது. இதன் காரணமாக வேலைவாய்ப்பிற்காக மக்கள் ஒரு இடத்தில் குவிக்கப்பட்டனர். இது பின்னாளில் மற்ற பகுதிகளுக்கும் பரவியது.

பெருகி வந்த தொழிற்சாலைகள் ஐரோப்பாவைத் தாண்டிப் பல்வேறு கண்டங்களிலும் மாற்றங்களை உண்டாக்கியது. கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டிற்கும் குறைவான காலத்தில் அறிவியல் கண்டுபிடிப்புகளும் வாழ்க்கை முறைகளும் மாற்றம் கண்டன. பெருகிய தொழிற்சாலையின் புகைபோக்கிகள் வளிமண்டலத்தில் தங்களது பங்குக்கு கரியமில வாயுக்களை கட்டுப்பாடில்லாமல் உமிழ்ந்தன.

வளர்ச்சி என்னும் பெயரில் தொழில் வளர்ச்சியில் ஓடிய நாடுகள் தங்களது நாட்டை முன்னேற்றுவதாகக் கூறிப் போட்டி போட்டுக்கொண்டு தொழிற்சாலைகளை நிறுவின. அதன் காரணமாக அதிகப்படியான கரியமில வாயுகளின் வெளியேற்றம் வளிமண்டலத்தில் கார்பன் டை ஆக்ஸைடின் செறிவை அதிகப்படுத்தின. இதன் காரணமாக சூரியனிலிருந்து வரும் வெப்பம் புவியைவிட்டு வெளியேறாமல் புவியிலேயே தங்கி வெப்பநிலையை உயர்த்தின.

தற்போதைய நிலையில் காற்றில் கார்பன் டை ஆக்ஸைடின் செறிவு 2020 ஆம் ஆண்டின் ஜூலை மாதத்தில் 414.38 ஆக உள்ளது. 2017 ஆம் ஆண்டின் செப்டம்பரில் இதன் அளவு 403.27 ஆகவும், 2018 ஆம் ஆண்டின் செப்டம்பரில் இதன் அளவு 405.59 ஆகவும் 2019 ஆம் ஆண்டின் செப்டம்பரில் இதன் அளவு 408.55 ஆகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

அதிகரிக்கும் வெப்ப நிலையால் கடல் நீர்மட்டம் உயர்தல், வறட்சி, பெருகும் புயல்கள், வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர்கள் ஏற்படும் என அறிவியலாளர்கள் எச்சரிக்கின்றனர். சர்வதேச அளவில் கவனம் பெற்ற இந்தப் பிரச்சினை 2015ஆம் ஆண்டு பாரீசில் நடைபெற்ற பருவநிலை மாநாட்டில் விவாதிக்கப்பட்டது. 190க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்ற இந்த மாநாட்டில் அதிகரிக்கும் பசுமைக்குடில் வாயுகளின் அளவைக் குறைக்கும் வகையில் ஒவ்வொரு நாடுகளும் தாங்கள் வெளியேற்றும் கரியமில வாயுக்களின் அளவைக் குறைக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. 2030 ஆம் ஆண்டிற்குள் உலக வெப்பநிலையில் 2 டிகிரி செல்சியஸ் அளவைக் குறைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. மாநாட்டில் பங்கேற்ற நாடுகளின் ஒப்புதலின் அடிப்படையில் பாரீஸ் மாநாடு வெற்றி பெற்றது. அதிக அளவு கார்பன் வெளியேற்றும் நாடுகளாக உள்ள சீனா, அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் கார்பன் வெளியேற்ற அளவைக் குறைப்பது முக்கியமானதாகப் பார்க்கப்பட்டது.

ஆனால் இந்த ஒப்பந்தத்தில் சதுரங்கம் விளையாடியது அமெரிக்கா. பருவநிலை மாற்றம் குறித்த விவாதத்தில் முக்கிய நிகழ்வாகப் பார்க்கப்பட்ட பாரீஸ் மாநாட்டின் இலக்கை குலைக்கும் வகையில் 2017 ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், பாரீஸ் ஒப்பந்தத்திலிருந்து வெளியேறப் போவதாக அறிவித்தார். ஒப்பந்தத்தில் தொடர்ந்தால் சீனா, இந்தியா போன்ற நாடுகளுடன் தொழில் வளர்ச்சியில் போட்டி போட முடியாத நிலை ஏற்படும் என விளக்கமளித்தார். அதன்படியே 2019 ஆம் ஆண்டு அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த மைக்கேல் பாம்பேயோ அமெரிக்கா பாரீஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறுவதாக அறிவித்தார். இது உலக நாடுகளிடையே விமர்சனத்தை எழுப்பின.

அதிகப்படியான கார்பனை வெளியிடும் அமெரிக்கா தொழில் வளர்ச்சி என்னும் காரணத்தைக் குறிப்பிட்டு பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்வதாக குற்றம்சாட்டப்பட்டது. தனது முடிவை மறுபரிசீலனை செய்யத் தயாராக இல்லாத டிரம்ப் அதற்கான எதிர்வினைகளைச் சந்தித்து வருகிறார்.

பருவநிலை மாற்றத்தில் தீவிரத்தை உணராத அமெரிக்க அதிபரின் நடவடிக்கை நவம்பரில் நடைபெற உள்ள தேர்தல் வரை எதிரொலிக்கிறது.

"இது ஒவ்வொரு அமெரிக்கரும் வரவிருக்கும் அதிபர் தேர்தலில் வாக்களிக்கும் போது சிந்திக்க வேண்டிய ஒன்று" என்ற மேற்கண்ட வாசகம் பருவநிலை மாற்றத்தின் தீவிரத்தைக் குறிப்பிட்டு 60க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 520 விஞ்ஞானிகளால் வெளியிடப்பட்ட அமெரிக்க வானிலை ஆய்வு மையத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஒன்று.



"உலகின் வெப்பநிலை 1.5 செல்சியஸ் உயர்ந்தால், உணவுப் பற்றாக்குறை, உணவு பொருள்களின் விலை உயர்வு, வாழ்வாதாரம் பாதிப்பு, மோசமான சுகாதார தாக்கங்கள், மற்றும் மக்கள் இடம்பெயர்தல் போன்ற பல விளைவுகளை பின்தங்கிய மக்கள் மிக அதிகமாக சந்திக்கக் கூடும். பருவநிலை மாற்றம் வளர்ந்த நாடுகளைக் காட்டிலும் ஏழை நாடுகளைத்தான் அதிகம் நாசம் செய்யும்" என்று அறிவியலாளர்கள் எச்சரிக்கின்றனர்.

அதன் காரணமாக 2030 ஆம் ஆண்டிற்குள் 2 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையைக் குறைக்க கார்பன் டை ஆக்ஸைடு அளவை 12 முதல் 14 கிகா டன் வெளியேற்றலாம் என நிர்ணயிக்கப்பட்ட நிலையில் அமெரிக்காவின் வெளியேற்றம் மேலும் பருவநிலை மாற்ற தடுப்பு நடவடிக்கையை பாதிக்கின்றன.

இதனால் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களைப் பயன்படுத்துவது குறித்து பல்வேறு நாடுகளும் இலக்குகளை ஏற்படுத்துவது அவசியமாகிறது. அதற்கான திட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பது, கூடுதல் நிதியை ஒதுக்குவது என அரசின் முன்னெடுப்பே பருவநிலை பாதிப்பைக் குறைக்க உதவும் என ஐக்கிய நாடுகள் அவை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் சமீப காலங்களில் உலகெங்கிலும் பதிவாகி வரும் தரவுகள் விஞ்ஞானிகளையும், சூழலியலாளர்களையும் அச்சத்தில் உறைய வைத்துள்ளன. பசுமைக் குடில் வாயுகளின் அளவுகள் 2019 ஆம் ஆண்டில் இதுவரை இல்லாத அளவுக்கு உயர்ந்த அளவை எட்டின. கார்பன் டை ஆக்ஸைடு, மீத்தேன் மற்றும் நைட்ரஸ் ஆக்ஸைடு உள்ளிட்ட புவி வெப்பமயமாதலுக்குக் காரணமான வாயுகளின் செறிவுகள் 8 லட்சம் ஆண்டுகளுக்கு முந்தைய கால அளவைக் காட்டிலும் அதிகமாக உள்ளன.

2019 ஆண்டானது ஆர்க்டிக் மற்றும் அண்டார்டிக்கின் துருவப் பகுதிகளில் இரண்டாவது வெப்பமான ஆண்டாகப் பதிவானது. இதனால் துருவப் பகுதிகளில் பனிப்பாறைகள் கரைந்து கடல் நீர்மட்டம் உயரும் அபாயம் ஏற்படுகிறது.

காலநிலை நெருக்கடியின் விளைவுகள் உலகெங்கிலும் உணரப்படுகின்றன. அண்மையில் கிழக்கு ஆப்பிரிக்கா முழுவதும் பரவலாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. ஆஸ்திரேலியா, அமேசான் மற்றும் சைபீரியாவில் ஏற்பட்ட காட்டுத்தீயால் அதிகப்படியான வனப்பகுதிகள், பல்லுயிர்கள் உயிரிழந்து சூழல் சமநிலையில் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளன.

பருவநிலை மாற்ற பாதிப்பால் புதிய புதிய நோய்களும், தொற்று பாதிப்புகளும் ஏற்படுவதாக விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர். உயரும் வெப்பநிலையால் கடலில் உள்ள பனிப்பாறைகள் கரைவது முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளது. மேலும் புவி தோன்றிய காலத்தில் இருந்து அண்டார்டிகாவின் கடலுக்கு அடியில் உள்ள வைரஸ் போன்ற நுண்ணுயிர்களும் வெளிவருவதாக எச்சரிக்கப்படுகிறது.

இந்நிலையில் கரோனா வைரஸ் பாதிப்பால் உலகின் வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளும் பாதிக்கப்படுகின்றன. கணிக்க முடியாத பரவல் மற்றும் அதிகரித்த தொற்று பாதிப்புகளின் எண்ணிக்கை காரணமாகப் பொதுமுடக்கத்தை அமல்படுத்த வேண்டிய கட்டாயம் உலக நாடுகளுக்கு ஏற்பட்டது. இதன் காரணமாகப் பள்ளிகள் கல்லூரிகள் தொடங்கித் தொழிற்சாலைகளும் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

கரியமில வாயுகளின் வெளியேற்றம் குறைந்ததால் உலக வெப்பநிலையில் மாற்றம் ஏற்படும் என பலரும் கருதி வந்தனர். பலரும் இந்தப் பொதுமுடக்கம் சூழலியலுக்கு சாதகமானது எனக் கருத்துத் தெரிவித்திருந்த நிலையில் சமீபத்திய ஆய்வு முடிவு கவலையைத் தருகிறது. சமீபத்திய லீட்ஸ் பல்கலைக்கழகத்தின் ஆய்வில் வெளியான தகவலின்படி பொதுமுடக்கத்தால் தடுக்கப்பட்ட கரியமில வாயுகளின் வெளியேற்றம் காலநிலை மாற்றத்தால் ஏற்பட இருக்கும் அபாயத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாது எனத் தெரியவந்துள்ளது.

ஏப்ரல் 2020 இல் உலகளாவிய கார்பன் டை ஆக்ஸைடு உமிழ்வு 25%க்கும், நைட்ரஜன் ஆக்ஸைடுகள் உமிழ்வு 30%க்கும் குறைந்துவிட்டதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன. எனினும் இவை எந்த அளவு பருவநிலை மாற்றத் தவிர்ப்பு நடவடிக்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும் எனும் கேள்வியும் எழுந்துள்ளது.

மேலும் தற்போது பொதுமுடக்க நடவடிக்கைகள், கணிக்கப்பட்ட 2030ஆம் ஆண்டின் உலக வெப்பநிலையில் 0.01 சதவிகிதம் மட்டுமே குறைக்க உதவும் என்னும் அதிர்ச்சித் தகவல் வெளிவந்துள்ளது.

எனினும் தற்போதைய மாற்றத்தை தொடர்ச்சியாக கடைப்பிடிக்க முடியாது என்பதால் அரசுகள் ஆற்றல் மூல வளங்களில் மாற்றத்தை நோக்கி நகர்வதும், அவற்றுக்குக் கூடுதல் நிதியாதாரங்களை வழங்குவதுமே சரியான தீர்வாக இருக்கும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

பருவநிலை மாற்றத்தைத் தடுக்கப் புதைபடிம எரிபொருள்களின் பயன்பாட்டைக் குறைப்பதும், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களைப் பயன்படுத்துவமே தற்போதைய சிக்கலில் இருந்து மீள உதவும் எனவும் இந்த ஆய்வு தெரிவித்துள்ளது. எரிபொருள் முதலீடுகளைக் குறைப்பதன் மூலம், 2050க்குள் 0.3 செல்சியஸ் புவி வெப்பமடைவதைத் தவிர்க்க முடியும் என லீட்ஸ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பியர்ஸ் ஃபோஸ்டர் தலைமையிலான ஆய்வாளர்கள் குழு தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. சட்டப்பூர்வ நடவடிக்கைகளும், கட்டமைப்பு மாற்றங்களும், புதிய கொள்கைகளும் இல்லாமல் உயரும் வெப்பநிலையை கட்டுப்படுத்துவது முடியாத காரியம் என மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தின் டாக்டர் ஜெய்ஸ் குரியகோஸ் குறிப்பிட்டுள்ளார்.

சந்தேகம் இல்லாமல் நாம் வளர்ச்சியின் உச்சியில் நின்று கொண்டிருக்கிறோம்.

அந்த வளர்ச்சியால் பயன் பெற்றவர்கள் ஏற்படுத்திய பெரும் பள்ளம், பயன்பெறாதவர்களை விழுங்கக் காத்திருக்கிறது. நாம் விரும்பாவிட்டாலும் நம் எதிர்காலத் தலைமுறை பருவநிலை பேரிடரை எதிர்நோக்கிதான் தங்களது பயணத்தைத் தொடர்கின்றனர்.

புதிய மாற்றங்கள் சமூகத்தில் எப்போதும் நிகழ்பவை. நாம் விரும்பும் சூழலுக்கு சாதகமான மாற்றங்களை அடைய தன்னிச்சையான நடவடிக்கைகளைத் தாண்டி ஒன்றுபட்ட நடவடிக்கைகளும், ஒத்திசைவான பார்வையும் அவசியம். அரசின் சரியான திட்டமிடலுடன் கூடிய செயல்பாடே வரவிருக்கும் அபாயத்திலிருந்து மக்களையும், இனிவரும் தலைமுறையையும் காக்க உதவும். பழைய பழக்கப்பட்ட வாசகமானாலும் "இந்த பூமி அடுத்த தலைமுறைக்கு பத்திரமாகத் திருப்பிக் கொடுக்க வேண்டிய சொத்து" என்பது பொருள் பொதிந்தது.

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

**ஹோமாகம நீதிமன்ற அதிகார பிரதேசத்தில் ஹோமாகம காணிப் பதிவகத்தினை கொண்டு நடாத்துவதற்காக கட்டிடத்தினை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு எடுப்பதற்கான விலைமனுக் கோரல்**

**கட்டிட சூழல்**

- ♦ வர்க்க அடி 15,000 ற்கு கிட்டியதாக இருத்தல் வேண்டும்.
- ♦ கொட்டாவ, ஹோமாகம, பிட்டிபன நகர எல்லைக்குள் பிரதான பாதையில் இருந்து நெருங்கக்கூடிய அலுவலகத்திற்கு பொருத்தமான சூழலில் அமைந்திருத்தல் வேண்டும்.
- ♦ வேறுபடுத்தப்பட்ட இரட்டைவழி மின்சார வசதி மற்றும் நீர் வசதி இருத்தல் வேண்டும்.

**இதற்கு மேலதிகமாக கீழ் காணப்படும் வசதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

- ♦ வாகனங்களுக்காக தடைகளற்ற உட்பிரவேச பாதை இருத்தல் வேண்டும்.
- ♦ அலுவலக ஆளணியினருக்கு மற்றும் பொது மக்களுக்கு போதியளவான மலசலகூட வசதிகள் இருத்தல் வேண்டும்.
- ♦ உட்பிரவேச வழி மூடுவதற்குரிய வாயிற் கதவு இருத்தல் மற்றும் கட்டிடம் பூரணமான பாதுகாப்புடன் இருத்தல் வேண்டும்.
- ♦ நீதிமன்ற கட்டிடம் மற்றும் வணிக வங்கிகளுக்கு கிட்டியதாக இருத்தல்.
- ♦ பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தங்கியிருப்பதற்கு கட்டிடத்திற்கு வெளியில் குடில் மற்றும் வெளிப்புற மலசலகூட வசதிகள் இருத்தல் அல்லது பின்னர் நிர்மாணிப்பதற்கான இயலுமை.
- ♦ அங்கவீனர்களுக்கு வருகை தருவதற்காக பிரவேச வழி இருத்தல் அல்லது பின்னர் நிர்மாணிப்பதற்கான இயலுமை.
- ♦ மாடிக் கட்டிடமாயின் கீழ் மாடி மற்றும் முதலாவது மாடி இருத்தல், அதற்கு மேலான மாடிக் கட்டிடமாயின் மின்தூக்கி இயந்திரம் பொருத்தப்பட்டிருத்தல் மேலதிக தகைமைகளாகும். அவ்வாறே ஒவ்வொரு மாடிக்கும் போதுமானளவு மலசலகூட வசதிகள் இருத்தல் வேண்டும். வாகனம் நிறுத்துவதற்கு போதுமானளவு இடவசதி இருத்தல். (நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் அளவினைக் குறிப்பிடவும்.)
- ♦ கட்டிடம் வாயுசீராக்கியுடன் கூடியதாக இருத்தல் மேலதிக தகைமையாகும்.

கட்டிடத்தில் உள்ளக வரைபடம் மற்றும் கட்டிடத்தின் உரித்து பற்றிய தகவல்கள் அடங்கிய தங்களது விலை மனுவினை இரண்டு பிரதிகளுடன் கூடிய கேள்விப் பத்திரங்களினை முத்திரை இட்டு 2020.09.14 ந் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்பதாக பதிவாளர் நாயகம் திணைக்களம், பத்தரமுல்லை, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இல. 234/A3, பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் சமர்ப்பித்தல் அல்லது நேரடியாக கொண்டு வந்து மேற்படி நேரத்திற்கு முன்பதாக இந்த திணைக்களத்தின் வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் வைக்கப்பட்டுள்ள உறையின் இடது பக்க மேல் மூலையில் ''ஹோமாகம காணிப் பதிவகத்திற்காக கட்டிடத்தினை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெற்றுக் கொள்ளல் -2020'' என குறிப்பிடல் வேண்டும்.

04. 2020.09.14ந் திகதி பி.ப.2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படுவதுடன் அந்நேரத்திற்கு பின்னர் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர் நாயகம்,**
**கேள்விச் சபையின் தலைவர்.**

### 19ஆவது அரசியலமைப்பு திருத்தத்துக்கு

# ஆதரவு வழங்கியவர்களே அதனை இல்லாதொழிக்க தீர்மானித்துள்ளனர்

**லோரன்ஸ் செல்வநாயகம்,**
**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்து பிரதமருக்கு அந்த அதிகாரங்களை வழங்குவதற்காகவே 19ஆவது அரசியலமைப்பு திருத்தம் கொண்டுவரப்பட்டது.

அதற்கு இரு கைகளையும் உயர்த்தி ஆதரவு வழங்கியவர்களே தற்போது அதனை இல்லாதொழிப்பதற்கு தீர்மானித்துள்ளனரென எதிர்க்கட்சி பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை குறைப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியமென சட்ட மாஅதிபர் திணைக்களம் தெரிவித்திருந்த நிலையில் 2015இல் நாம் ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் வெற்றி பெற்றதால் அதற்கான அவசியம் தேவையில்லை என்ற நிலை ஏற்பட்டபோதே நாம்19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை கொண்டுவருவதற்கு தீர்மானித்தோம். அதற்கு பூரண ஆதரவை வழங்கியவர்களே இப்போது அதனை இல்லாதொழிக்க முயற்சிக்கின்றனரென்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி.இவ்வாறு தெரிவித்தார்.



தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

19ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றும்போது அன்று பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அதற்கு பூரண ஆதரவு வழங்கியது. இப்போது அதைப் பற்றி பேசும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, சபை முதல்வர் தினேஷ் குணவர்த்தன ஆகியோரும் அதற்கு அப்போது ஆதரவு வழங்கினர்.

ஐக்கிய தேசியக் கட்சியில் 45 அங்கத்தவர்களே உள்ள நிலையிலேயே நாம் பொதுஜன முன்னணியின் ஆதரவையும் பெற்றுக் கொண்டுஅதனைநிறைவேற்றினோம்.

இந்த சந்தர்ப்பத்தில் 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களும் இல்லாதொழிக்கப்படுமா? என நான் ஆளும் கட்சியினரிடம் கேட்க விரும்புகின்றேன்.19 ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பான விவாதத்தின்போது பல சரத்துக்களிலும் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டே அது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது என்பதையும் நாம் ஆளும் கட்சியினரிடம் தெரிவிக்க விரும்புகின்றோம்.

"ஒரே நாடு ஒரே சட்டம்" என கூறும் ஜனாதிபதியிடம் ஒவ்வொரு மாகாணங்களிலும் அது வித்தியாசமாக நடைமுறைப் படுத்தப் படுவதை நிவர்த்தி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### பொது மக்களுக்கு விடுக்கப்படும் அறிவித்தல்
### லிந்துல அக்ராகெலவர வீதியில் 14/6 இலக்க பாலத்தைத் திருத்தியமைப்பதற்காக, வாகனப் போக்குவரத்திற்கு வீதியை மூடிவிடுதல்

லிந்துல அக்ராகெலவர வீதியில் 14/6 இலக்க பாலத்தை திருத்தியமைப்பதற்காக வீதியை மூடி விடுவது தொடர்பாக பொது மக்களுக்கு அறிவூட்டுவதற்காக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

முச்சக்கரவண்டிகள், சைக்கிள்கள் மற்றும் பொதுமக்கள் குறித்த வேலை நடைபெறும் இடத்தில் சிறிது சிறிதாக அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதுடன் மேற்படி வீதியில் லிந்துல தொடக்கம் 14/6 இலக்க பாலம் வரை போக்குவரத்தை மேற்கொள்ளலாம். பாலத்திலிருந்து முன்னோக்கிய, டயகம நகரம் வரை பயணிக்க தேவையெனில், ஹட்டன் திக்கோயா ஊடாக மன்ராஸி நகரிற்குச் சென்று டயகம வரை போக்குவரத்தை மேற்கொள்ளலாம்.

**பணிப்பாளர் நாயகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**
**'மகநெகும மஹமெதுர'**
**216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்த,**
**பத்தரமுல்ல.**

## பியகம பிரதேச சபை

### 2021ஆம் ஆண்டிற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

2021ஆம் ஆண்டிற்காக இங்கு கீழ்க்காணும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு பியகம பிரதேச சபையில் பதிவு செய்து கொள்வதற்கு விரும்பும் உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள், ஒப்பந்தக்கார்களிடமிருந்து 2020.09.21 பி.ப. 3.00 வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை உள்ளிட்டு அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2021" என்று குறிப்பிடுதல் வேண்டும். பதிவு செய்தல் கட்டணமாக அந்த ஒவ்வொரு வகையான பொருட்கள் அல்லது சேவைகளுக்கு கீழே தரப்பட்டுள்ள தொகையை காசாக அல்லது காசோலை மூலம் செலுத்தலாம். காசோலைகள் "தலைவர், பியகம பிரதேச சபை" என்ற பெயரில் அனுப்பப்படல் வேண்டும்.

**பொருட்கள் மற்றும் சேவைகள்**

01. மின்சாரப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
02. காகிதாதிகள் வழங்குதல்
03. அச்சக விடயங்கள் நிறைவேற்றுதல்
04. தட்டச்சு/ ரோணியோ பிரதி இயந்திரம்/ காற்றுச்சீராக்கி பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்
05. அலுவலக உபகரணங்களை வழங்குதல் (போட்டோ பிரதி இயந்திரம்/ ரோணியோ/ பெக்ஸ்/ காற்றுச்சீராக்கி)
06. அலுவலக தளபாடங்களை வழங்குதல்
07. கணனி மற்றும் CCTV கெமரா மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்
08. உருக்கு பைப் கெபினெட்/ கபட்/ கதிரை மற்றும் சேர்.்.ப் வழங்குதல் மற்றும் பழுதுபார்த்தல்
09. பிரம்பு கதிரை நெய்தல் மற்றும் மரக் கதிரைகளை பொலிஷ் செய்தல்
10. நொத்தாரிசு மற்றும் சட்டத்தரணி சேவை வழங்குதல்
11. ரப்பர் சீல் தயாரித்து வழங்குதல்
12. சீருடை தைத்து வழங்குதல்
13. காணி அளவையிடல் மற்றும் மதிப்பீட்டு சேவை விடயங்களை வழங்குதல்
14. சுகாதார உபகரணங்கள் (கையுறை/ முகக்கவசம்/ குப்பை வண்டி/ தும்புத்தடி/ விளக்குமாறு/ பிரம்புக்கூடை/ வீல்பெரக்/ மலசலகூட பிரஷ்)
15. வாகன பழுதுபார்த்தல்கள்
16. வாகனங்களை சேர்விஸ் செய்தல்
17. டயர் மற்றும் டியூப் வழங்குதல்/ டயர் மீள் நிரப்பல்/ வாகனங்களுக்கான பெற்றரி வழங்குதல்
18. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் வழங்குதல்
19. வாகன சீட்டுகளை குஷன் செய்தல்
20. பிவிசி பைப் குழாய் மற்றும் பிட்டிங்ஸ் வழங்குதல்/ நீர்க்குழாய் சேவை வழங்குதல்
21. நிர்மாணப் பொருட்கள் வழங்குதல் (கருங்கல்/ஆற்று மணல்/ இரும்பு/ சீமெந்து/ புளொக்கல்/ செங்கல்/ பலகை வகைகள்/ சரளை மண்/ கல் மண்/ கல் தூள் பியகம பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் பெயர் குறிப்பிடும் இடங்களுக்கு வழங்குதல்
22. இயந்திர உபகரணங்களை வாடகை அடிப்படையில் வழங்குதல் (டோசர்/ ஜே.சி. பி./மோட்டார் கிரேடர்/ ரோட் ரோலர்/ கொங்கிறீட் கலவைகள்/ நீர் பவுசர்)
23. கொங்கிறீட் பொருட்கள் (ஹியும் பைப்/ கம்பி தூண்/ எல்லைக்கல்)
24. தொழிலாளர்களை வழங்குதல் பயிற்சி பெற்ற/ பயிற்சி பெறாத/ அரைப் பயிற்சி பெற்ற (நாளாந்த சம்பளம்/ வேலை ஒப்பந்த அடிப்படையில்)
25. போக்குவரத்து சேவை வழங்குதல் (மோட்டார் கார்/ லொறி/ டிரக்டர்/ வேன்/ திரீவீல்)
26. நகர சுத்திகரிப்பு சேவை விடயங்களை வழங்குதல்
27. ஒலிபெருக்கி இயந்திரங்களை வழங்குதல்
28. தகனசாலைகளை நிர்மாணித்தல் மற்றும் பழுதுபார்த்தல்
29. ரப்பர் விறகு மற்றும் காட்டு விறகு வழங்குதல்
30. பெயர்ப்பலகை, அறிவித்தல் பலகை, பதாகைகள் வழங்குதல்
31. வெற்று பெரல், பழைய பத்திரிகைகள், கழிக்கப்பட்ட பொருட்கள் பிளாஸ்டிக், தாள், பொலித்தீன் கொள்வனவு செய்தல்
32. மரம் வெட்டுபவர்கள் மற்றும் பாதைகளின் மரக் கொப்புகளை வெட்டுபவர்களின் சேவையை வழங்குதல்
33. நினைவுப் படிகம் வழங்குதல்
34. இரசாயனப் பொருட்கள் (கிருமிநாசினிகள், ஹாபிக், பைனோல், குளோரீன், நுளம்பு எண்ணெய்)
35. அடையாள அட்டை தயாரித்தல்
36. கொம்போஸ்ட் பெரல் தயாரித்து வழங்குதல் (கொங்கிறீட், தகடு அல்லது பிளாஸ்டிக்)
37. குப்பை சேகரிக்கும் பேக் (பெலிசெக்)
38. வீதி வேலைகளுக்கு தேவையான உபகரணங்கள் (மண் வெட்டி, கல் துளையிடும் ஊசி, வாள், கவ்வாத்து கத்தி, வீச்சுக்கத்தி, ரேக்கை, சவல்)
39. நிர்மாணத்திற்கான ஒப்பந்தக்காரர்கள்
40. எலி மற்றும் பீடைகளை அழிக்கும் விடயங்கள்
41. தகடு ஹட், கெனபி ஹட் தயாரித்தல் மற்றும் கெனபி சீலை தயாரித்து வழங்குதல்
42. தார் மற்றும் கோலாஸ் வழங்குதல்
43. வெல்டிங் வேலைகள்
44. குடிநீர் வழங்குதல்
45. ரெடிமிக்ஸ் (கொங்கிறீட்)
46. மெழுகுத்தாள் வழங்குதல்
47. சட்டரிங் பலகை வழங்குதல்
48. பட்டறை வேலைகள்
49. மை வகைகளை வழங்குதல்

மேற்படி இல. 01 முதல் 49 வரை ஒவ்வொரு உருப்படிக்கும் ரூ. 1000/- தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

**ஜீ.ஏ.ஏ.சீ. கனேபொல**
**தலைவர்,**
**பியகம பிரதேச சபை,**
**தெல்கொட.**
**0112403311**

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| கம்பனியின் பெயர்: | **சஞ் போல் எம் (பிரைவட்) லிமிட்டட்** |
| பதிவிலக்கம்: | பிவீ 00225905 |
| கூட்டிணைக்கப்பட்ட திகதி: | 2020 ஓகஸ்ட் 14 |
| பதிவு முகவரி: | இல. 415, பிரின்ஸ் ஒப் வேல்ஸ் அவின்யு, கிறேண்ட்பாஸ், கொழும்பு 14. |

**ஜேசீஎன்ட் கம்பனி**
**கம்பனி செயலாளர்கள்**
**இல. 9/5, தம்பையாஅவின்யு, கொழும்பு 07**

Repeat Your Ad For Better Offers

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## மீளப்பெறாத அடகுப் பொருட்களைப் பகிரங்க ஏலத்தில் விற்றல்

### உடிஸ்பத்துவ பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்

**I உடிஸ்பத்துவ**
**II உடபாகே**
**III இறங்கலை**
**IV வேகல**

ஆகிய நான்கு வங்கிகளிலும் 2018.01.01 - 2018.12.31ஆம் திகதி வரை அடகு வைத்து மீளப்பெறாத தங்க நகைகளை 2020.08.28 வரை கிராமிய வங்கி முகாமையாளருடன் தொடர்பு கொண்டு வட்டியை செலுத்தி ஏலத்தில் விற்பதை தடுக்கலாம். இல்லையெனில்,

**2020 – 08 – 29, 30ஆம் திகதி காலை 9.00 மணிக்கு**

உடிஸ்பத்துவ பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

திகதி: 2020.08.07

**முகாமையாளர்,**
**உடிஸ்பத்துவ பலநோக்குக்**
**கூட்டுறவுச் சங்கம்.**


மோட்டார் சைக்கிள் விற்பனைச் சந்தை
அநுராதபுரம்

| வாகன இல. | தயாரிப்பு | வகை |
|---|---|---|
| NC BDO - 22XX | WEGO | BIKE |
| NC BCH-63XX | DIO SCV 110 | BIKE |
| NC BGB - 90XX | STAR SPORT | BIKE |
| NC BFN - 55XX | XL SUPER HD | BIKE |
| NC BEQ - 83XX | SCOOTY PEPT | BIKE |
| NC BIC - 61XX | WEGO | BIKE |
| NW BBT-10XX | CT 100 | BIKE |
| NC BBU-16XX | FZ16 | BIKE |
| NC BCG-17XX | METRO | BIKE |
| NP BAI-38XX | CT 100 | BIKE |
| NC BAC-98XX | PULSAR 150 | BIKE |
| NC BGZ-17XX | WEGO | BIKE |
| NC BBY-26XX | CT 100 | BIKE |
| NW BCL-68XX | ACTIVA I | BIKE |
| NC BAM-08XX | PULSAR 135 LS | BIKE |
| CP BCA-99XX | DIO SCV 110 | BIKE |
| CP BAU-15XX | CT 100 | BIKE |
| NC BFE-62XX | DIO SCV 110 | BIKE |
| NC BDV-37XX | CT 100 | BIKE |
| NC BEQ-38XX | SCOOTY PEPT | BIKE |
| NP BCN-99XX | FZ16 | BIKE |
| CP BDS - 74XX | XL SUPER HD | BIKE |

0712125664 / 0719919986
025-5622661-2
நுழைவு கட்டணம் ரூ.500/-
வாகன விற்பனைச் சந்தை திகதி : 24.08.2020
நேரம்: காலை 10.00 மணி


## பெருந்தோட்ட அமைச்சு

## தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம்

இந்த நிறுவகத்தின் கீழேயுள்ள பதவிகள் தொடர்பாக தகுதி மற்றும் தகைமையுள்ள இலங்கையர்களிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

### 01. உதவி பணிப்பாளர் பதவி (நிர்வாகம்) - MM-1.1 (தரம் II)

**பதவி விபரம்** : நிறுவகத்தின் அனைத்து பொது நிர்வாகத்திற்கும் பொறுப்பாக இருத்தல்.

**தகைமைகள்** : **வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

அரச கூட்டுத்தாபனம்/ சபை/ அரசாங்கத் திணைக்களம் அல்லது பிரசித்தி பெற்ற வர்த்தக ஸ்தாபனமொன்றிலான பொது நிர்வாகத் துறையில் ஆகக் குறைந்தது மூன்று (03) வருட தகைமைக்குப் பிந்திய அனுபவத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து தரமொன்றுடன் கூடிய வணிகம்/ பொது நிர்வாகம்/ முகாமைத்துவம்/ வர்த்தகம்/ பொருளியலில் ஒரு பட்டதாரிப் பட்டம்

**அல்லது**

அரச கூட்டுத்தாபனம்/ சபை/ அரசாங்கத் திணைக்களம் அல்லது பிரசித்தி பெற்ற வர்த்தக ஸ்தாபனமொன்றிலான பொது நிர்வாகத் துறையில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட தகைமைக்குப் பிந்திய அனுபவத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து தரமொன்றுடன் கூடிய வணிகம்/ பொது நிர்வாகம்/ முகாமைத்துவம்/ வர்த்தகம்/ பொருளியலில் ஒரு பட்டதாரிப் பட்டத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்ளாரி விண்ணப்பதாரிகள்**

உரித்தான துறையில் கனிஷ்ட முகாமைத்துவ வகுதி தரம் 1 இலான பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத் திட்டம்** : MM 1.1 - 2016 ரூ (53,175 - 10x1,375 - 15x1,910 = 95,575)
(ஆரம்பத்தில் சம்பள உரித்துரிமை ரூ. 53,175/= என்பதுடன் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் உண்டு).

**வயதெல்லை** : 25 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு இவ் உயர் வயதெல்லை பிரயோகிக்கப்படமாட்டாது.

**தெரிவு செய்யப்படும் முறை** : தொழில்சார் நேர்முகத் தேர்வு குழுவொன்றினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு.

**பொதுவானவை** : விண்ணப்பதாரர்கள் ஆங்கிலத்தில் சரளமாக உரையாடக்கூடியதாக இருக்க வேண்டியதுடன், பொதுவாக உபயோகிக்கப்படும் கணனி பிரயோகங்களிலான பரிச்சயம் அவசியம்.

### 02. விடுதி முகாமையாளர் பதவி - JM-1.1 (தரம் II)

**பதவி விபரம்** : விடுதியின் அனைத்து சொத்துக்களையும் பராமரிக்க வேண்டியதுடன், விடுதி பதவி நிலையினருக்கான பணிகளை ஒப்படைத்து அவற்றைக் கண்காணிக்கவும் வேண்டும் உள்வாரி மற்றும் வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்/ கல்விசார் பாடநெறிகளில் கலந்து கொள்பவர்களுக்கு தரமான உணவு வகைகள், சிற்றுண்டிகள் வழங்கப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன், சரியான சமையல் உபகரணங்கள், உருப்படிகள், அறைகள், உணவு சிற்றுண்டிகள் மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படுவதை நிர்வகித்தல் வேண்டும்.

**தகைமைகள்** : **வெளிவாரி விண்ணப்தாரர்கள்**

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து ஹோட்டல் முகாமைத்துவத்திலான ஒரு டிப்ளோமா மற்றும் ஒரு அங்கீகரிக்கப்பட்ட நகர/ கடற்கரை ஹோட்டலில் ஐந்து (05) வருட தகைமைக்குப் பிந்திய அனுபவம்.

**அல்லது**

ஹோட்டல் கல்லூரி டிப்ளோமா (இலங்கை சுற்றுலாச் சபை அல்லது வேறு ஏதாவது அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டல் பாடசாலை) மற்றும் க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் ஒரு திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

க.பொ.த. (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டியதுடன், ஆகக் குறைந்தது 03 மாத விடுதி நிர்வாகம்/ முகாமைத்துவம் அல்லது தொடர்புள்ள பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருப்பதுடன் தரம் 1 இலான முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பமல்லாத வகுதி (MA 1.1) அமைவாக ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத் திட்டம்** : JM 1.1 - 2016 ரூ (42,600 - 10x755 - 18x1,135 = 70,580)
(ஆரம்பத்தில் சம்பள உரித்துரிமை ரூ. 42,600/= என்பதுடன் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் உண்டு).

**வயதெல்லை** : 25 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு இந்த உயர் வயதெல்லை பிரயோகிக்கப்படமாட்டாது.

**தெரிவு செய்யப்படும் முறை** : எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும்/ அல்லது தொழில்சார் நேர்முகத் தேர்வு குழுவினால் ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு நடாத்தப்படும்.

**பொதுவானவை** : விண்ணப்பதாரர்கள் ஆங்கில மொழியில் சரளமாக உரையாடக்கூடியதாக இருக்க வேண்டியதுடன், பொதுவாக பாவிக்கப்படும் கணனி பிரயோகங்களிலான பரிச்சயம் அவசியம்.

**ஏனைய அனுகூலங்கள் (பதவி 1 & 2)**

ஊசேநி மற்றும் ஊநநி தொடர்பாக நிறுவனத்தின் பங்களிப்பு அடிப்படை சம்பளத்திலிருந்து முறையே 12% மற்றும் 3% ஆகும். (ஊசேநி தொடர்பாக தொழிலாளரின் பங்களிப்பு அடிப்படைச் சம்பளத்திலிருந்து 10% ஆகும்).

உறுப்பினர் மற்றும் அவரின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் தொடர்பாக பங்களிப்புச் செய்யும் மருத்துவ காப்புறுதித் திட்டம் உண்டு.

அண்மித்த தரங்களிலிருந்தான (கொட்டாவ, கடுவல) இலவச போக்குவரத்துச் சேவை.

**விண்ணப்பிக்கும் முறை:**

உரித்தான சான்றிதழ் பிரதிகளுடன் உறவினரல்லாத நடுவர்கள் இருவரின் பெயர் மற்றும் முகவரிகளுடன் கூடிய உங்கள் விரிவான சுய விபரக்கோவையை கீழேயுள்ள அலுவலருக்குக் கிடைக்கத்தக்கதாக 2020 செப்டெம்பர் 04ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

அரச துறையிலிருந்தான ஊழியர்களின் விண்ணப்பங்கள் உரித்தான தமது நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்.

எக்காரணம் கொண்டும் பூர்த்தி செய்யப்படாத, தாமதாகும் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படாததுடன், எவ்வகையிலும் வற்புறுத்தல்களை மேற்கொள்வது தகுதியிழப்பதற்கு வழிவகுக்கும்.

**பணிப்பாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர்**
**தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம்**
**எம்.டீ.எச். ஜயவர்தன மாவத்தை,**
**அத்துருகிரிய.**
**தொ.பே. 011-2770232**


BE BETTER INFORMED!

News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
VISIT apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
AVAILABLE AT
LAKE HOUSE

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www. observerjobs. lk

# "இலக்கியப்படைப்புகள் படிப்பவர்களைத் தன்னோடு அணைத்துக் கொள்ளவேண்டும்"



இலக்கியம் என்ற சொல் பண்டைக் காலத்தில் ஒரு பொதுச்சொல்லாக வழங்கிற்று. பிழையில்லாமல், இலக்கண வழுவில்லாமல் எழுதப்படுவன எல்லாம் இலக்கியம் என்பது இலக்கண நூலார் கொள்கை. பொதுவாக, எழுதப்பட்டிருப்பன அனைத்தும் இலக்கியங்கள்தாம். "லிக்" என்ற வடமொழியடியாகப் பிறந்த சொல்லே இலக்கியம். எழுதப்பட்டிருப்பது என்பதே இதன் பொருள்.

எழுத்துருவிலே உள்ள அனைத்தும் இலக்கியம் என்பதே ஒரு பொதுவான கருத்து. அரசியல் இலக்கியம், சரித்திர இலக்கியம், விஞ்ஞான இலக்கியம், மத இலக்கியம், சமுதாய இலக்கியம், கணக்கு இலக்கியம், நாடக இலக்கியம், சங்கீத இலக்கியம், வைத்திய இலக்கியம் என்று பலவகையான நூல்களையும் இலக்கியம் என்ற பொதுச் சொல்லால் வழங்கி வந்தனர்; வழங்கி வருகின்றனர். ஆங்கிலத்திலும் லிட்ரேச்சர் என்ற சொல்லுக்கு இப்படித்தான் பொருள் படுகின்றது.



ஆனால் இன்று இலக்கியம் என்ற சொல்லை எல்லா நூல்களுக்கும் பொதுவாக வழங்குவதைச் சிலர் ஒப்புக் கொள்ளவில்லை. இலக்கியம் என்று சொல்லுக்கு எழுதப்பட்டது என்று பழம் பொருளைக் கொள்வதில்லை. இலக்கு என்ற சொல்லிலிருந்தோ, அல்லது இலட்சியம் என்ற சொல்லிலிருந்தோதான் இலக்கியம் என்ற சொல் பிறந்ததாகக் கொள்கின்றனர்.

இவ்வாறு பழம் சொற்கள் புதுச்சொற்களாகப் பொருள் மாறி வழங்குவது இயல்புதான். ஒரு காலத்திலே நாற்றம் என்ற சொல் நறுமணம் என்ற பொருளிலே வழங்கிற்று. இன்று அச்சொல் துர்நாற்றத்தைக் குறிக்கின்றது. ஒரு காலத்தில் நாகரிகம் என்ற சொல் கண்ணோட்டம், இரக்கம் என்ற பொருளில் வழங்கிற்று. இன்று நகரரீதியாகப் பிறந்த பழக்க வழக்கம் என்ற பொருளில் நாகரிகம் என்ற சொல் வழங்குகின்றது.

இந்த இயல்பை ஒட்டியே இன்று இலக்கியம் என்ற சொல்லும் இன்று புதுப்பொருளில் வழங்குகின்றது.

இன்று எல்லா நூல்களையும் இலக்கியம் என்று கொள்வதில்லை. உள்ளத்துக்கு இன்பம் பாய்ச்சும் கற்பனை நிறைந்த நூல்களை இலக்கியம் என்று கொள்ளுகின்றோம். படிக்கப் படிக்க நமது நெஞ்சத்தைக் கவரும் நடை,உள்ளத்திலே துன்பத்தையோ, மகிழ்ச்சியையோ உண்டாக்கும் கருத்து, உணர்ச்சிவசமாக்கும் தன்மை, சிந்திக்கத்தூண்டும் சிறந்த மொழிகள், ஒரு முறை படித்தபின் வீசி எறிந்துவிடாமல் மீண்டும் படிக்கவேண்டும் என்னும் எண்ணத்தை எழுப்பும் இயல்பு, அவ்வாறே திரும்பவும் படிக்கச் செய்யும் செயல், படித்தவைகளில் உள்ள பல செய்திகள் அப்படியே நம் உள்ளத்தில் ஒட்டிக் கொள்ளும் இயல்பு, நமது வாழ்க்கையில் தவறு நேராமல் நல்ல முறையிலே நடந்து கொள்ள வேண்டும் என்னும் உறுதியை உண்டாக்கும் சக்தி, பல திறப்பட்ட அரிய செய்திகளை நாம் அறிந்து இன்புறச் செய்யும் பண்பு இவைகள் எல்லாம் அமைந்த நூல்களே சிறந்த இலக்கியமாகிறது, சிறப்பாக இலக்கியம் என்பது பொழுது போக்குக்கு, மக்களுடைய உள்ளத்தை பண்படுத்தப் பயன்படுவதாகும். இலக்கியங்களைப் பயின்றவர்கள் ரசிகர்களாக வாழலாம்; பிறருக்கு நல்ல அறங்களை எடுத்துரைப்பவர்களாக இருக்கலாம்; இயற்கையின் இன்பங்களைச் சுவைப்பர்களாகவும், சுவைக்கச் செய்பவர்களாகவும் இருக்கலாம்; மொழியைப் போதனை செய்யும் ஆசிரியராகவும் இருக்கலாம். அவர்கள், வேறு தொழில் நிபுணர்களாக ஆகமுடியாது. இதுவும் இலக்கியத்தின் இயல்பாகும். தொழில் நிபுணர்கள் இலக்கிய ரசிகர்களாக இருக்கலாம். ஆனால் இலக்கியத்தை மட்டும் பயின்றவர்கள் தொழில் நிபுணர்களாக முடியாது.

இந்த இயல்புகளுடன் அமைந்திருக்கும் நூல்கள் எவையாயினும் அவைகள் இலக்கியங்கள் தான். அவைகள் செய்யுள் வடிவிலும் இருக்கலாம்.

உரைநடை வசன நடை வடிவிலும் இருக்கலாம். செய்யுள் வடிவில் அமைந்திருப்பதால் மட்டும் எல்லா நூல்களும் நம் உள்ளத்தைக் கவர்வதில்லை. சில கவிஞர்களுடைய செய்யுட்கள் தாம் படிப்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன. பலருடைய செய்யுள்களைப் படிக்க வேண்டியநூல் என்பதற்காகவே படிக்கின்றோம்.

செய்யுளைப் போலவே நம் உள்ளத்தை இழுத்துக் கொண்டு செல்லும் உரைநடையும் உண்டு. சொல்லப்படும் செய்திகள் அருமையானவை; ஆராய்ந்து எடுக்கப்பட்டவை; படித்துத் தெரிந்து கொள்ள வேண்டியவை; ஆதலால் எப்படியாவது படித்து முடிக்கவேண்டும் என்று நினைத்துக் கொண்டு படிக்கும் உரைநடையும் உண்டு.

செய்யுளானாலும் சரி, வசனமானாலும் சரி, படிப்பவர்களைத் தன்னோடு அணைத்துக் கொள்ளவேண்டும். அவர்களுடைய சிந்தையை அங்கே இங்கே அலையவிடாமல் தன்னுடன் இழுத்துக்கொண்டு போகவேண்டும். இத்கைய அழகு எளிய தெளிவான நடையில் இலக்கியங்கள் அமைந்திருக்க வேண்டும். ஒரு நல்ல இலக்கியத்துக்கு மக்களைப் படிக்கத் தூண்டும் இலக்கியத்துக்கு மக்களைப் பண்படுத்தும் நோக்கம் உள்ள இலக்கியத்துக்குஇத்தகைய எழுத்துநடை முதற்படி என்பது நமது கருத்து. நமது முன்னோர்கள் பெரும்பாலும் இலக்கியங்களைப் பாட்டுக்களாக எழுதி வந்தற்கு மக்கள் மனதைக் கவரும் வாசகங்களிலே இலக்கியங்கள் அமையவேண்டும் என்பதும் ஒரு காரணமாகும்.

செய்யுளிலே இனிய ஓசை உண்டு; பண்ணொடு பாடலாம். செம்பாகமான செய்யுட்கள் படிக்கும் போதே அல்லது பாடும் போதே அல்லது பிறர் பாடுவதைக் கேட்கும் போதே நம் உள்ளத்தில் ஒட்டிக் கொள்ளும். முன்னோர்களின் உரைநடையில் கூடச் செய்யுள் வாடை வீசுவதைக் காணலாம். ஆதலால் இலக்கியத்திற்கு அதன் எழுத்து அமைப்புவசன அமைப்பு இனியநடை இன்றியமையாதது என்பதில் ஐயமில்லை.

முன்னோர்கள் இலக்கியத்தை நூல் என்ற பெயரால் அழைத்திருக்கின்றனர். நூல் என்றால் பல சிறந்த கருத்துக்கள் நிறைந்தவை சுவையுள்ள கற்பனைகள் நிரம்பியவை உள்ளத்தைக்கவரும் இனிய செய்யுட்களின் தொகுப்பு என்று கூறிவிடலாம். பண்டைக் காலத்தில் நூல் என்பது இந்தப் பொருளில் வழங்கிற்று என்று கூறுவது பொருந்தும்; இதில் தவறில்லை. உரைநடை இலக்கியங்களுக்கும் இக்கருத்துப் பொருத்தமானது தான்.

**ராகவன் ...**

## வம்சம் பேசும்



பெற்றால் பிள்ளை
பிறக்கும் வம்சம்
உற்றார் உறவில்
இருக்கும் அம்சம்
மற்றோர் மனதில்
மறக்கா(த) வண்ணம்
வம்சம் பேசும்
வாழ்வில் திண்ணம்!

வாரிசு வந்தால்
வாழ்க்கை சிறக்கும்
இனிமை புதுமை
எல்லாம் பிறக்கும்
இல்லத்தோர் நாமம்
என்றும் தொனிக்கும்
உள்ளம் தனிலே
உவகை சுரக்கும்!

காலம் மாறும்
கோலம் மாறும்
கடைசி வரைக்கும்
வம்சம் இருக்கும்
நாளும் பொழுதும்
நன்றாய் இருக்கும்
வாழும் வாழ்வில்
வாய்மையாய் பேசும்!

நேசம் பாசம்
நெஞ்சில் வளரும்
ஆசை வாரிசில்
அன்பு மலரும்
பாச உறவில்
பந்தம் தொடரும்
மாசற்ற வம்சம்
மாண்பாய் படரும்!

**எம். ஏ. சி. றபாய்தீன்**

கலைக் கதம்பம்
சைத்திரியன்

## மட்டக்களப்பில் மூன்று நூல்களின் வெளியீட்டு விழா









கி.துரைராஜசிங்கம் எழுதிய மூன்று நூல்களின் வெளியீட்டு விழா மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் அருட்தந்தை ஜோசப்மேரி அடிகளார் தலைமையில் நடைபெற்றது. கவிஉலா,அரங்கேற்றம்,நான்கு தரவுகள் என்னும் மூன்று நூல்கள் நிகழ்வில் வெளியிடப்பட்டன.நூல் நயவுரையினை கிழக்கு பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர்களான அருட்தந்தை ஏ.நவரெத்தினமும் திருமதி ரூபி வலன்ரினா பிரான்சிஸும் நிகழ்த்தினர்.இலக்கிய ஆர்வலர்கள்,எழுத்தாளர்கள் என பெருமளவானோர் விழாவில் கலந்துகொண்டனர். (படங்கள்; வெல்லாவெளி தினகரன் நிருபர்)

## இலங்கை இசைக்குழுவக்கு 'WOW Awards Asia' விருது

*WOW Awards Asia* விருது 2019 ஆம் ஆண்டிற்கான *WOW Awards Asia* விருது இலங்கையின் இசைக் கலைஞர் சரித்த அட்டலகே (*Charitha Attalage*) குழுவினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

12 ஆவது முறையாகவும் இந்த விருது வழங்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடதக்கது ஆசியா முழுவதிலும் இருந்து 1800க்கும் மேற்பட்டோர் ஆசியாவின் WOW விருதிற்கான போட்டியில் கலந்து கொண்டனர் ஒஸ்கார் விருது பெற்ற இசைப்புயல் ஏ.ஆர். ரஹ்மானுடன் இந்த தங்க விருது பகிரப்பட்டமை சிறப்பம்சமாகும்.




ஓர் சினிமா இசை அனுபவத்தைப் பெற்றுக்கொடுத்த சரித்தா அட்டலகே மற்றும் அவரது குழுவினர் நடத்திய இசை நிகழ்ச்சி இலங்கையில் புதிய இசை பரிமாணத்தை ஏற்படுத்தியது.

சரித்த அட்டலாகே மற்றும் அவரது குழுவினரால் 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் 15 ஆம் திகதி கொழும்பு தாமரைத் தடாக அரங்கில் இந்த இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இலங்கை இசைத்துறையில் இதற்கு முன்பில்லாதவாறான வகையில் இந்த இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டதுடன், எதிர்வரும் மாதங்களில் பல இசை நிகழ்ச்சிகளை இக்குழுவினர் நடத்தவுள்ளனர்.

ஆசியா முழுவதிலும் இருந்து 1800க்கும் மேற்பட்டோர் ஆசியாவின் WOW விருதிற்கான போட்டியில் கலந்து கொண்டனர்.WOW விருதுகள் ஆசிய பிராந்தியத்தின் மிகப்பெரிய மற்றும் நீண்டகாலமாக இயங்கும் வணிக மற்றும் நிகழ்வுத் தொழிற்துறைக்கான அங்கீகாரத் தளமாகும்.

12 ஆவது முறையாகவும் இந்த விருது வழங்கும் நிகழ்வு இடம் பெற்றுள்ளமை குறிப்பிடதக்கது.ஒஸ்கார் நாயகன் இசைப்புயல் ஏர்.ஆர். ரஹ்மான் திருச்சியில் நடத்திய இசை நிகழ்ச்சிக்கும் *Kuweni live In concert* குழுவினரின் நிகழ்ச்சிக்கும், இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

(ஸ)

## வரப்பெற்றோம்

தி.ஞானசேகரனை ஆசிரியராகக் கொண்ட ஞானம் கலை இலக்கிய சஞ்சிகை 243வது இதழ் ஆகஸ்ட் மாத இதழாக வெளிவந்துள்ளது.

இம்முறை சஞ்சிகையின் ஆசிரியர் தலையங்கம் ஏழு தசாப்த காலம் எழுத்துலகில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி அண்மையில் இறைபதம் அடைந்த அமரர் திருமதி பத்மா சோமகாந்தன் தொடர்பான விபரங்களைத் தாங்கியுள்ளது.




சிறந்த எழுத்தாளரான திருமதி பத்மா சோமகாந்தன் கடவுளின் பூக்கள், வேள்வி மலர்கள்,புதிய வார்ப்புகள், கரும்பலகை காப்பியங்கள், இற்றைத் திங்கள் முதலான சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். போன்ற பல சிறந்த தகவல்களையும் அந்த ஆசிரியர் தலையங்கம் தெரிவிக்கின்றது.

அட்டைப்பட அதிதி தொடர்பான கட்டுரை பவள விழா நாயகன் இலக்கிய ஆளுமை வே.தில்லைநாதன் தொடர்பானது.

அமரர் செம்பியன் செல்வன் ஆ. ராஜகோபால் ஞாபகார்த்த சிறுகதைப் போட்டி முடிவுகள் பிரசுரிக்கப்பட்டுள்ளது டன் ஜுனைதா ஷெரீபின் இயற்கையோடு வாழுதல் சிறுகதை , சண்முக பாரதியின் தகப்பன் தின்னிகள் கவிதை, எங்கெங்கு காணினும் டென்மார்க் ஜீவகுமாரனின் சிறுகதை, பேராசிரியர் செ.யோகராசா வின் ஈழத்துச் சிறுவர் இலக்கிய முன்னோடிகள்கட்டுரை உட்பட பல்வேறு சிறந்த படைப்புகளைத் தாங்கி இம்முறை ஞானம் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பல்வேறு சவால்களைத் தாண்டி தொடர்ச்சியாக ஈழத்தில் இத்தகையதொரு சஞ்சிகை வெளிவருவது பாராட்டுக்குரியது. இவ்வாறான பணிகளை ஊக்குவிப்பதற்கு சஞ்சிகையை கொள்வனவு செய்து பங்களிப்புச் செய்வோம் என்பதே எமது தாழ்மையான வேண்டுகோள்.

**லோரி செல்வா ...**

## சம்பியன்ஸ் லீக்:

# மகுடத்திற்கான இறுதிப்போட்டியில் பேயர்ன் முனிச் பரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணிகள் மோதல்

ஐரோப்பாவின் உயர்தர கால் பந்து கழகங்களுக்கிடையில் நடைபெறும் சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரில், பேயர்ன் முனிச் அணி வெற்றிபெற்று 11ஆவது முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

ஜோஸ் ஆல்வலேட் விளையாட்டரங்களில் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில், ஜேர்மனியின் பேயர்ன் முனிச் கழக அணியும், பிரான்ஸின் லியோன் கழக அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இரசிகர்களுக்கு உச்ச விறுவிறுப்பை பரிசளித்த இப்போட்டியில், 18ஆவது நிமிடத்தில் பேயர்ன் முனிச் கழக அணியின் வீரரான செர்ஜ் ஞாப்ரி அணிக்காக முதலாவது கோலை அடித்துக் கொடுத்தார்.



இதனைத் தொடர்ந்து போட்டியின் 33ஆவது நிமிடத்தில் செர்ஜ் ஞாப்ரி, அணிக்காக இரண்டாவது கோலை அடித்துக் கொடுத்தார்.

இதனையடுத்து போட்டியின் 88ஆவது நிமிடத்தில், பேயர்ன் முனிச் அணியின் நட்சத்திர வீரர் ரோபர்ட் லெவன்டவ்ஸ்கி, அணிக்காக வெற்றி கோலை புகுத்தினார்.

இதன்படி போட்டியின் இறுதியில் பேயர்ன் முனிச் அணி 3-0 என்ற கோல்கள் கணக்கில் சிறப்பான வெற்றியை பதிவு செய்து 11ஆவது முறையாக இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ள மகுடத்திற்கான இறுதிப் போட்டியில், ஐந்து முறை சம்பியனான பேயர்ன் முனிச் அணி, முதல்முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ள பரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணியுடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளது.

## கரீபியன் பிரிமீயர் லீக் – பார்படாசை வீழ்த்தி செயின்ட் லூசியா அணிக்கு முதல் வெற்றி



கரீபியன் பிரிமீயர் லீக்கில் பார்படாஸ் டிரைடன்ஸ் அணியை 7 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி முதல் வெற்றியை பதிவு செய்தது செயின்ட் லூசியா சாக்ஸ் அணி.

கரீபியன் பிரிமீயர் லீக்கின் 5வது ஆட்டம் டிரினிடாடில் நேற்றுமுன்தினம் நடந்தது. செயின்ட் லூசியா சாக்ஸ் பார்படாஸ் டிரைடண்ட்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற பார்படாஸ் அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

பார்படாஸ் அணியின் தொடக்க ஆட்டக்காரர் சார்லஸ் 35 ஓட்டங்களும், தலைவர் ஹோல்டர் 27 ஓட்டங்களும் எடுத்தனர். மற்ற வீரர்கள் நிலைத்து நின்று ஆடவில்லை. பார்படாஸ் அணி 18.1 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 131 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் மழை குறுக்கிட்டது.

இதையடுத்து, டக்வொர்த் லூயிஸ் முறைப்படி செயின்ட் லூசியா அணி 5 ஓவரில் 47 ஓட்டங்கள் எடுக்க வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அந்த அணி 4.1 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 50 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்று முதல் வெற்றியைப் பதிவு செய்தது.

SINCE 1978 42nd OBSERVER MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2020

Recognizing talent, inspiring greatness.

Sri Lanka Telecom Mobitel உங்களுடனே. என்றும்.

**42வது ஒப்சவர்–மொபிடெல்**

**மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை- 2020**

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் ஒப்சேவர் - மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2020**

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2020**

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..........

வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐

தேசிய மட்ட வீராங்கனை : ..........

**(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)**

பாடசாலை : ..........

வாக்களித்தவர் பெயர் : ..........

முகவரி : ..........

மொபைல் இல. : ..........

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

1வது பரிசு : Mobitel 4G Wi-Fi Router — 2வது பரிசு: ரூ. 2,500

3வது பரிசு: ரூ.1,500 — 4வது பரிசு: ரூ. 1,000

42வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**நிபந்தனைகள்:**

மொபிடெல் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 2020-08-22 — இல. 24




## மத்திய மாகாண ஹொக்கி சுற்றுப் போட்டி

# கண்டி கிங்ஸ்வூட், சீத்தாதேவி மகளிர் அணிகள் சம்பியன்



**(அக்குறணை குறூப் நிருபர்)**

மத்திய மாகாண விளையாட்டுத் துறை அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட மத்திய மாகாண ஹொக்கி சுற்றுப் போட்டியில் ஆண்கள் பிரிவில் கண்டி கிங்ஸ்வூட் கல்லூரி பழைய மாணவர்கள் அணியும் பெண்கள் பிரிவில் கண்டி சீத்தாதேவி மகளிர் கல்லூரி அணியும் சம்பியன்களாயின.

கண்டி திகனயில் அமைந்துள்ள மத்திய மாகாண விளையட்டு அமைச்சின் விளையாட்டு திடலில் இது இடம் பெற்றது.

ஆண்கள் பிரிவில் இறுதிப் போட்டிக்கு தெரிவான கண்டி தர்மராஜ கல்லூரி பழைய மாணவர் அணியான 'ஓல்ட் ராஜன்ஸ்' அணியை 3-1 என்ற கோல் அடிப்படையில் கிங்ஸ்வூட் பழைய மாணவர் அணி வெற்றி கொண்டு சம்பியன் ஆனது.

பெண்கள் பிரிவில் தேவியன்ஸ் விளையாட்டுக் கழகத்தை 2-1 என்ற கோல் அடிப்படையில் சீத்தா தேவி அணி வெற்றி கொண்டு செம்பியனானது.



பல்வேறு அணிகள் எதிர்பார்க்கப்பட்ட போதும் கொவிட்19 வைரஸ் அச்சம் காரணமாக ஒன்பது அணிகள் மட்டுமே பங்கு கொண்டன. ஏற்கனவே திட்டமிடப்பட்டு பல முறை இப்போட்டி பிற்போடப்பட்ட நிலையில் வெளியூர் அணிகள் பங்கு கொள்ள வில்லை. ஆண்கள் பிரிவில் 6 அணிகளும் பெண்கள் பிரிவில் 3 அணிகளும் மட்டுமே பங்கு கொண்டன.

ஆண்கள் பிரிவில் கிங்ஸ்வூட் பழைய மாணவர் அணி, கண்டி ஹொக்கி மற்றும் உதைப்பந்தாட்ட சங்க அணி (கே.எச்.என்ட்.எப்.சி), ஓல்ட் ராஜன்ஸ் அணி, ஓல்ட் சில்வெஸ்டியன் அணி, ஸ்ரீ சுமங்கள பழைய மாணவர் அணி, கிரீன் பார்க் அணி என்பன பங்கு கொண்டன. பெண்கள் பிரிவில் சீத்தா தேவி ஹொக்கி கழகம், தேவியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மற்றும் புனித அந்தோனியார் மகளிர் கல்லூரி அணி என்பன பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கது. வெற்றி பெற்ற இரு அணிகளையும் படங்களில் காணலாம்.

## இலங்கைத் தோட்டச்சேவையாளர் சங்கத்தின் நூற்றாண்டு நிறைவு :

# வலைப்பந்தாட்ட, கரப்பந்தாட்டப் போட்டி



**(நாவலப்பிட்டி சுழற்சி, அக்குறணை குறூப் நிருபர்கள்)**

இலங்கைத் தோட்டச்சேவையாளர் சங்கத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு சங்க அங்கத்தவர்களுக்கு இடையே கரப்பந்தாட்டம் மற்றும் வலைப் பந்தாட்டப்போட்டிகள் நடத்தப்பட்டன. பெண்களுக்காக வலைப் பந்தாட்டப் போட்டியும் ஆண்களுக்காக கரப்பந்தாட்டப் போட்டியும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி இராகலை தமிழ் மகா வித்தியாலய மைதானத்திலும் ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி ஹற்றன் தரவல மைதானத்திலும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. ஆரம்ப நிகழ்வுகள் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகின. பெண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டியில் இலங்கைத் தோட்டச்சேவையாளர் சங்கத்தின் அவிசாவளை கிளையும், ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் இலங்கைத் தோட்டச்சேவையாளர் சங்கத்தின் தலவாக்கலை கிளையும் வெற்றி பெற்றன.

வெற்றிபெற்ற அணிகளுக்கு அதிதிகளாகக் கலந்து கொண்ட இலங்கைத் தோட்டச் சேவையாளர் சங்கத்தின் தலைவர் சத்துர சமரசிங்க மற்றும் பொதுச்செயலாளர் நாத் அமரசிங்க ஆகியோர் வெற்றிக் கேடயங்களை கையளித்தனர்.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 ஒகஸ்ட் மாதம் 22ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.